வருடாந்த அறிக்கை

2018



கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை

இலக்கம். 117, சுபத்ராராம வீதி,

கங்கொடவில, நுகேகொட.

உள்ளடக்கம்

- அறிக்கையை கௌரவ செயலாளரிடம் சமர்ப்பித்தல் 03
- தலைவரின் செய்தி 04
- நிறுவனத்தின் நோக்கு மற்றும் அரும்பணிக் கூற்று 06
- பணிப்பாளர் சபை 07
- நிறுவனத்தின் தாபனக் கட்டமைப்பு 08
- முன்னுரை 09

பிரிவுகளுக்குப் பொறுப்பான பணிப்பாளர்களின் அறிக்கைகள்

- நெறிப்படுத்தல் பிரிவு 14
- காப்புறுதிப் பிரிவு 19
  - கமத்தொழில் காப்புறுதி நடவடிக்கைகளும் கால்நடைக் காப்புறுதி நடவடிக்கைகளும்
- கமக்காரர் ஓய்வூதியப்பிரிவு 22
  - கமக்காரர் ஓய்வூதிய ,சமூகப்பாதுகாப்பு நலன்புரித் திட்டம் மற்றும் கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டம்
- நிருவாக மற்றும் மனித வளங்கள் பிரிவு 31
- உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு 37
- திட்டமிடல் பிரிவு 41
- நிதிப்பிரிவு 45

கணக்குகள்

- முந்திய ஐந்து வருடங்களுக்கான நிதிசார் தகவல்கள் 47
- ஒட்டுமொத்த செயற்றிட்டங்களுக்குமான ஒருங்கிணைந்த கணக்குக் கூற்றுகள் 52
- கமத்தொழில் காப்புறுதி செயற்றிட்டம் 55
- கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித்திட்டம் 84
- கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித்திட்டம் 106

கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கைகள்

- கமத்தொழில் காப்புறுதி செயற்றிட்டம் 129
- கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித்திட்டம் 138
- கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித்திட்டம் 145

කෘෂිකාර්මික හා ගොවිජන රක්ෂණ මණ්ඩලය
கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை
AGRICULTURAL AND AGRARIAN INSURANCE BOARD

විදුලි පණිවිඩ தந்தி Telegrams: රක්ෂණ ரக்ஷண Rakshana

117, සුභද්‍රාරාම පාර, ගංගොඩවිල, නුගේගොඩ
117, Subadrarama Rd., Gangodavila, Nugegoda

මගේ අංකය எமது இலக்கம் My Ref. No. 2018/4/5/F/A-2

ඔබේ අංකය உமது இலக்கம் Your Ref. No.

දිනය திகதி Date 10.04.2019

செயலாளர்,

கமத்தொழில் அமைச்சு,

இலக்கம் 288,

ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்த,

இராஜகிரிய

வருடாந்த அறிக்கை - 2018

2018 ஆம் ஆண்டில் கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையின் நிருவாக, தொழிற்பாடுகள் மற்றும் நிதிசார் அலுவல்கள் நடைமுறைப்படுத்தப்பட்ட விதம் மற்றும் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட அனைத்துச் செயற்பாடுகளையும் உள்ளடக்கிய 2018 ஆம் ஆண்டுக்கான சபையின் வருடாந்த அறிக்கையை இத்தால் சமர்ப்பிக்கிறேன்.

பண்டுக்க வீரசிங்க,

பணிப்பாளர் நாயகம்,

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை.

දුරකථන தொலைபேசி Telephones
ෆැක්ස් பெக்ஸ் Fax

සභාපති தலைவர் Chairman
011-2812571
011-2812572

අධ්‍යක්ෂ ජනරාල් பணிப்பாளர் நாயகம் Director General
011-5732397

ප්‍රධාන කාර්යාලය தலைமையகம் Head Office
011-5384000

தலைவரின் செய்தி

2018 ஆம் ஆண்டில் அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட கொள்கைரீதியான தீர்மானத்தின்படி நெல், சோளம், பெரிய வெங்காயம், உருளைக்கிழங்கு, சோயா மற்றும் மிளகாய் ஆகிய பிரதான ஆறு பயிரினங்களுக்காக கமக்காரர்களிடமிருந்து காப்புறுதித் தவணைப் பணம் அறவிடப்படாமல் ஒரு ஏக்கருக்கான ரூ. 3,600/- காப்புறுதித் தவணைப்பணத்தை அரசாங்கத்தினால் பொது திறைசேரிமூலமாக செலுத்துப்படுவதற்கு கட்டுப்பட்டதாக, ஒரு ஏக்கருக்கு ரூ. 40,000/- காப்புறுதிக் காப்பீட்டினை வழங்கும் காப்புறுதி நிகழ்ச்சித்திட்டமொன்று 2018 சிறு போகத்திலிருந்து அமுலாக்கப்பட்டது. இந்த புதிய காப்புறுதி நிகழ்ச்சித்திட்டம் அமுலாக்கப்பட்டமை 2018 ஆம் ஆண்டில் இடம்பெற்ற தனித்துவமான நிகழ்வாக மாத்திரமன்றி சபையின் வரலாற்றிலும் உள்நாட்டு விவசாயத்துறையிலும் இடம்பெற்ற வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வென்றவகையிலும் எடுத்துக்காட்டப்படலாம். இலவசமாக அமுலாக்கப்படுகின்ற இந்த பயிர்க்காப்புறுதி நிகழ்ச்சித்திட்டம் மூலமாக சபையின் நிதிசார் வருமானப் பிறப்பாக்கத்திற்கு பாதகமான தாக்கமேற்படுகின்றபோதிலும் உள்நாட்டு விவசாயிகளைப் பாதுகாத்து அவர்களின் பொருளாதார உறுதிநிலையை ஏற்படுத்துவது இதன்போது அரசாங்கத்தின் முதன்மை நோக்கமாக அமைந்தது.

இத்தகைய நிலைமையின் கீழும் சபையினால் 2018 ஆம் ஆண்டில் கமத்தொழில் காப்புறுதி செயற்றிட்டம் மூலமாக 921 மில். ரூபா நிகர இலாபம் ஈட்டப்பட்டுள்ளதோடு இவ்வாண்டில் ஈட்டியுள்ள தொழிற்பாட்டு இலாபம் 1,144.7 மில்லியன் ரூபாவாகும். ஆண்டில் சபையின் மொத்த காப்புறுதி வருமானம் 2,482 மில்லியன் ரூபாவாக அமைந்ததோடு, அது 2017 ஆண்டுடன் சார்புரீதியாக 1486.71 % வளர்ச்சியாகும்.

பாதிக்கப்பட்ட கமக்காரர்களுக்காக துரிதமாக இழப்பீட்டுத்தொகை செலுத்துதல் சபையின் முதன்மைச் செயற்பொறுப்பாக அமைவதோடு, 2018 ஆம் ஆண்டிலும் தீவின் பிரதானமான விவசாய மாவட்டங்கள் பலவற்றில் மிகையான மழை மற்றும் வெள்ளப்பெருக்கு காரணமாக பாதிக்கப்பட்ட கமக்காரர்களுக்காக சபையின் கட்டாய பயிர்க்காப்புறுதி இழப்பீட்டுப்பெறுமதி ஏறக்குறைய 2,930 மில்லியன் ரூபாவாக அமைந்தது.

சபையினால் அமுலாக்கப்படுகின்ற கமக்காரர் ஓய்வூதியத் திட்டத்தின் திருத்தத்திற்காக அமைச்சரவைத் தீர்மானத்தின்பேரில் நியமிக்கப்பட்ட புலமைசாலிகள் குழுவினால் 2018 ஆம் ஆண்டில் பூர்வாங்க பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதற்கிணங்க புதிய செயற்றிட்டம் தாபிக்கப்படும்வரை நிலவுகின்ற

செயற்றிட்டங்களின் உதவுதொகை செலுத்துனர்களுக்காக ஓய்வூதியம், இறப்பு மற்றும் ஏலாமை நன்மைகள் 2018 ஆம் ஆண்டிலும் உரியவகையில் செலுத்தப்பட்டன.

அதற்கிணங்க, சபையின் செயற்பொறுப்பினை புதிய திசையில் ஆற்றுப்படுத்திய ஆண்டாக 2018 ஆம் ஆண்டினை எடுத்துக்காட்ட இயலுமென்பதோடு, சபையின் நிதிசார் உறுதிநிலையை வளர்த்துக்கொள்ளவும் கமக்காரர்களினதும் உள்நாட்டு விவசாயத்தினதும் பாதுகாப்பு கருதி அளப்பரிய அரும்பணியை ஆற்ற இயலுமானதாக அமைந்த ஆண்டென இவ்வாண்டினைக் குறிப்பிடலாம்.

தலைவர்,

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை.

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை

➢ நோக்கு

உள்நாட்டு விவசாயத்தின் உன்னதமான பாதுகாவலனாக மாறுவதன் மூலமாக தெற்காசியாவின் மிகச்சிறந்த முன்னுதாமாரணமாகத் திகழும் காப்புறுதி நிறுவனமாதல்.

➢ அரும்பணி


கமத்தொழில் காப்புறுதி மற்றும் பாதுகாப்பினை வழங்குவதற்கான கூட்டு முயற்சிகள் மற்றும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களை இணைப்பாக்கம் செய்வதன் ஊடாக சர்வதேசரீதியாக ஏற்றுக்கொள்ளக்கூடிய தலைசிறந்த சேவையை வழங்குதல்.

பணிப்பாளர் சபை–2017

	பெயர்	பதவி
01	திரு. எஸ். விரித்தமுல்ல தலைவர் கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை	தலைவர்
02	கலாநிதி திரு. டபிள்யு. எம். வீரக்கோன் கமத்தொழில் பணிப்பாளர் நாயகம், கமத்தொழில் திணைக்களம்	உறுப்பினர்
03	திருமதி. சம்பா பாலசூரிய, பணிப்பாளர், பகிரங்க தொழில்முயற்சிகள் திணைக்களம்	உறுப்பினர்
04	திரு. பீ.எஸ்.கே.ஆர். வீரக்கோன் மேலதிக செயலாளர் (நிர்வாகம் மற்றும் மனித வளம்) கமத்தொழில் திணைக்களம்	உறுப்பினர்
05	டாக்டர் திரு. கே.டி. ஆரியபால, மேலதிக செயலாளர் (கால்நடைவள அபிவிருத்தி) கடற்றொழில், நீரக வளமூலங்கள் அபிவிருத்தி மற்றும் கிராமிய பொருளாதார அமைச்சு	உறுப்பினர்
06	திரு. என்.பீ. மொன்டி ரணதுங்க, பணிப்பாளர்நாயகம் (தொழில்நுட்பம்) கடற்றொழில் மற்றும் நீரகவளமூங்கள் அபிவிருத்தி அமைச்சு, புதிய செயலகம், மாளிகாவத்த, கொழும்பு 10.	உறுப்பினர்
07	திரு. டபிள்யு.எம்.எம்.பீ. வீரசேகர, கமநல அபிவிருத்தி பணிப்பாளர்நாயகம், கமநல அபிவிருத்தி திணைக்களம்.	உறுப்பினர்

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை

தாபனக் கட்டமைப்பு



முன்னுரை

கட்டுப்படுத்த இயலாத இயற்கை அனர்த்தங்களின்போது கமக்காரர்களைப் பாதுகாத்து உள்நாட்டு விவசாயத்தைக் கட்டியெழுப்புவதற்காக கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையிடம் கையளிக்கப்பட்டுள்ள தேசிய பொறுப்பினை ஈடேற்றுவதற்காகவும் சபையின் நிதிசார் உறுதிநிலையை வளர்த்துக்கொள்வதற்காகவும் விசேட கவனம் செலுத்தப்பட்ட ஓர் ஆண்டாக 2018 ஆம் ஆண்டினை எடுத்துக்காட்ட இயலும். அதற்கிணங்க 2018 ஆம் ஆண்டில் சபையானது கமத்தொழில் காப்புறுதி செயற்றிட்டங்கள் மூலமாக 921 மில். ரூ. நிகர இலாபத்தை ஈட்டியுள்ளதோடு, இவ்வாண்டில் ஈட்டிய தொழிற்பாட்டு இலாபம் 1144.7 மில். ரூ. ஆகும். இவ்வாண்டிலும் தீவின் பிரதான பல விவசாய மாவட்டங்களில் மிகையான மழை மற்றும் வெள்ளப்பெருக்கு காரணமாக கமக்காரர்களின் செய்கைகள் பேரளவில் சேதமுற்றதோடு அதன்போது பாதிக்கப்பட்ட கமக்காரர்களுக்கான சபையின் கட்டாய பயிர்க்காப்புறுதி இழப்பீட்டுப் பொறுப்பு ஏறக்குறைய 2,930 மில். ரூபாவாக அமைந்துள்ளது.

வருடாந்த தவணைப்பண வருமானம் – 2014 தொடக்கம் 2018 வரை

காப்புறுதித் திட்டம்	2014 (ரூ. மில்)	2015 (ரூ. மில்)	2016 (ரூ. மில்)	2017 (ரூ. மில்)	2018 (ரூ. மில்)
பயிர்க் காப்புறுதி செயற்றிட்டம்	94.25	104.6	94.85	**95.66**	**128.01**
கால்நடைவளக் காப்புறுதி செயற்றிட்டம்	13.74	9.00	10.56	**13.39**	**10.59**
களஞ்சிய/ விவசாய உபகரணங்கள் மற்றும் மூன்றாந் தரப்பு காப்புறுதி செயற்றிட்டங்கள்	0.62	1.08	7.82	**42.11**	**137.85**
சுவசெத மற்றும் திடீர் விபத்து காப்புறுதி செயற்றிட்டங்கள்	7.67	16.43	15.61	**5.31**	**6.34**
உர மானிய காப்புறுதி செயற்றிட்டங்கள்	0.00	1006.4.	608.19	**0.00**	**-**
கூட்டுத்தொகை	**116.28**	**1,137.51**	**737.03**	**156.47**	**282.79**

வருடாந்த நிகர இலாபம் – 2014 தொடக்கம் 2018 வரை

	2014 (ரூ. மில்)	**2015** (ரூ. மில்)	**2016** (ரூ. மில்)	**2017** (ரூ. மில்)	**2018** (ரூ. மில்)
மொத்த வருமானம்	122.5	1,156.10	782.20	5735.1	**4,398.5**
தொழிற்பாட்டுச் செலவு	(75.50)	(1,116.10)	(404.50)	(5654.2)	**(3,253.8)**
தொழிற்பாட்டு மிகை	47.30	40.00	377.70	80.9	**1,144.7**
அரச கொடையும் பிற வருமானங்களும்	74.80	100.80	122.50	130.1	**4.0**
மொத்தச் செலவுகள் (ஒதுக்கீடுகளையும் உள்ளிட்டதாக)	(104.00)	(132.00)	(160.30)	168.7	**(227.7)**
வருடாந்த நிகர இலாபம்/ நட்டம்	17.80	8.80	339.90	42.3	921.0

இதற்கு மேலதிகமாக 2018 ஆம் ஆண்டில் கால்நடைக் காப்புறுதி செயற்றிட்டம் தவிர்ந்த ஏனைய காப்புறுதி செயற்றிட்டங்களின்கீழ் துரித வளர்ச்சி பெறப்பட்டதோடு அது முந்திய ஆண்டுடன் சார்புரீதியாக 154.52% வளர்ச்சியாகும். குறிப்பாக களஞ்சிய/ விவசாய உபகரண மற்றும் மூன்றாந் தரப்பு மோட்டார் வாகன காப்புறுதித் திட்டத்தின்கீழ் 2017 ஆம் ஆண்டில் ஈட்டிய மொத்த வருமானம் 42.11 மில். ரூபாவாக அமைந்ததோடு, அதனை 2018 ஆம் ஆண்டில் 137.85 மில். ரூபா வரை விருத்திசெய்துகொள்ள வாய்ப்பு கிட்டியுள்ளது. இந்த வருமானத்தின் பெரும்பகுதி மூன்றாந்தரப்பு மோட்டார்வாகன காப்புறுதி செயற்றிட்டத்தின்கீழ் ஈட்டப்பட்டுள்ளதோடு மேற்படி செயற்றிட்டத்தின்கீழ் எந்தவிதமான பணத்தொகையும் இழப்பீடாக செலுத்தவேண்டி நேரிடாமையை விசேடமாக குறிப்பிட இயலும். பிரதானமாக மூன்றாந்தரப்பு மோட்டார்வாகன காப்புறுதி செயற்றிட்டத்தை விரிவாக்குவதற்காக பேணிவரப்படுகின்ற சபையின் வெளிவாரி முகவர் வலையமைப்பிற்கு மேலதிகமாக கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் விவசாய ஆராய்ச்சி, உற்பத்தி உதவியாளர்களும் பிரதேச செயலகங்களும் முகவர்களாக நியமிக்கப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டமை அந்த செயற்றிட்டம் துரிதமாக விரிவடைய காரணமாக அமைந்ததோடு அதன் மூலமாக ஈட்டிய வருமானம் சபையின் நிதிசார் உறுதிநிலையை வளத்துக்கொள்ள பெரிதும் உறுதுணையாக அமைந்தது.

2018 வருடாந்த வரவு செலவு தொடர்பில் சபையினால் முன்வைக்கப்பட்ட முன்மொழிவின்படி நெல், சோளம், சோயா, பெரிய வெங்காயம், மிளகாய் மற்றும் உருளைக்கிழங்கு செய்கைபண்ணப்படுகின்ற ஏக்கரொன்றுக்காக கமக்காரர்களிடமிருந்து ரூ. 675 /-காப்புறுதித் தவணைப் பணத்தை அறவிட்டு எஞ்சிய ரூ. 2,925 /- காப்புறுதித் தவணைப்பணத்தை அரசாங்கம் மூலமாக செலுத்துவதற்கு கட்டுப்பட்டதாக வெள்ளப்பெருக்கு, வறட்சி மற்றும் காட்டு யானைகளினால் எற்படுகின்ற சேதங்களுக்காக ஏக்கரொன்றுக்காக ரூ. 40,000 /- அதிகபட்சத் தொகைக்கு கட்டுப்பட்டதாக இழப்பீட்டுத் தொகையைச் செலுத்துவதற்கான காப்புறுதி நிகழ்ச்சித்திட்டமொன்று 2017/18 பெரும்போகத்தில் இருந்து தீவடங்கிலும் நடைமுறைப்படுத்தப்பட்டது. ஆயினும், 2018 சிறு போகத்தில் இருந்து கமக்காரர்களிடமிருந்து எந்தவிதமான தவணைப்பணத்தையும் அறவிடாமல் ஏக்கரொன்றுக்கான ரூ. 3,600/-முழுமையான காப்புறுதித்தவணைப் பணத்தையும் அரசாங்கம் செலுத்தி மேற்படி காப்புறுதி நிகழ்ச்சித்திட்டம் அமுலாக்கப்பட்டமை உள்நாட்டு விவசாயத்துறையினல் போன்றே சபையின் செயலாற்றுகையிலும் ஒரு தனித்துவமான தருணம் என்பதைக் குறிப்பிடவேண்டும்.

உள்நாட்டு உணவு உற்பத்தியை மேற்கொள்கின்ற தேசிய அரும்பணியில் ஈடுபட்டுள்ள கமக்காரர்களைப் பாதுகாத்து உள்நாட்டு விவசாயத்தை மேம்படுத்துதல் இந்த புதிய காப்புறுதி நிகழ்ச்சித்திட்டத்தை அமுலாக்குவதற்கான அரசாங்கத்தின் முதன்மை எதிர்பார்ப்பாக அமைந்துள்ளது. அதன்போது பயிர்ச்சேதம் ஏற்பட்டவிடத்து கமக்காரர்களின் பொருளாதாரத்தை உறுதிநிலைக்கு கொண்டுவருவதற்காக இந்த புதிய காப்புறுதி நிகழ்ச்சித்திட்டம் பாரிய உறுதுணையாக அமைந்தபோதிலும் சபையின் நிதிசார் உறுதிநிலைக்கு அது பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளதோடு இழப்பீட்டுத் தொகையைச் செலுத்துவதற்கும் பொதுதிறைசேரிக்கு பாரிய செலவுச் சுமையாக அமையும்.

புதிய பயிர்க்காப்புறுதி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தீவில் செய்கைபண்ணப்படுகின்ற பிரதானமான ஆறு பயிர் வகைகளுக்காக கட்டாய பயிர்க்காப்புறுதி அமுலாக்கப்படுவதால் மிகஅதிகமாக பயிர்ச்சேதம் பதிவாகின்ற தருணங்களில்

மேற்படி சேத மதிப்பீட்டினை மேற்கொள்வதற்கான புதிய தொழில்நுட்ப முறையியலொன்றின் அவசியம் தீவிரமான தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது. அதற்கிணங்க உலக வங்கியுடன் இணைந்த சர்வதேச நிதிக் கம்பெனியின் (IFC) தொழில்நுட்ப உதவியுடன் சபையினால் அறிமுகப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ள குறிகாட்டியை (சுட்டி) அடிப்படையாகக்கொண்ட காப்புறுதி செயற்றிட்டம் மூலமாக வானிலை நிலைமைகளுக்கிணங்க விவசாயத்திற்கு ஏற்படுகின்ற தாக்கத்தை விஞ்ஞானரீதியாகவும் தொழில்நுட்பரீதியாகவும் மதிப்பீடுசெய்து பயிர்சேதமேற்பட்ட கமக்காரர்களுக்கு குறுகிய காலத்திற்குள் சேதஇழப்பீட்டினை வழங்கும் முறையியலொன்று வகுக்கப்படும்.

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை மூலமாக கமக்காரர் மற்றும் மீனவர் சமுதாயத்திற்காக புதிய ஓய்வூதியத் திட்டமொன்றை அறிமுகஞ் செய்வதற்காக சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை நிருபத்திற்கிணங்க நியமிக்கப்பட்ட புலமைசாலிகள் குழுவினால் நிதிரீதியில் உறுதியானதும் நிலைபெறுதகு தன்மை கொண்டதுமான கமக்காரர் ஓய்வூதியத் திட்டமொன்றை அமுலாக்குவதற்கான பூர்வாங்க பேச்சுவார்த்தைகள் 2018 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தற்போது நிலவுகின்ற கமக்காரர் ஓய்வூதியத் திட்டத்தின் 2018 ஆம் ஆண்டளவிலான மொத்த உதவுதொகை செலுத்துனர் எண்ணிக்கை 959,254 பேர் ஆகும். 2018 ஆம் ஆண்டின் இறுதியளவில் 154,907 கமக்காரர்களுக்காக ரூபா 244,576,221/- பணத்தொகை ஓய்வூதியமாக செலுத்தப்பட்டுள்ளது. அதற்கு மேலதிகமாக 2018 ஆம் ஆண்டில் 385 உதவுதொகை செலுத்துனர்களுக்காக இறப்பு மற்றும் ஏலாமை நன்மையாக ரூபா 8,131,379/- பணத்தொகை செலுத்தப்பட்டுள்ளது.

2018 ஆம் ஆண்டின் இறுதியளவில் கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டத்தின் மொத்த உதவுதொகை செலுத்துனர் எண்ணிக்கை 69,049 ஆக விளங்கியதோடு 4,420 ஓய்வூதியம் பெறுனர்களுக்காக ரூபா 62,553,368/- பணத்தொகை ஓய்வூதியமாகவும் 43 உதவுதொகை செலுத்துனர்களுக்காக இறப்புப் பணிக்கொடையாக ரூபா 516,000/- பணத்தொகையும் செலுத்தப்பட்டுள்ளது.

2018 ஆம் ஆண்டிலும் சிறப்புப் பயிற்சி செயலமர்வுகளுக்காக ஏற்புடைய விடயத்துறையைச் சேர்ந்த சபை அலுவலர்களை பங்கேற்கச் செய்வித்து மேலதிக பயிற்சி வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளதோடு, சபை அலுவலர்கள் மற்றும் குடும்ப அங்கத்தவர்களின் பங்கேற்புடன் நடத்தப்பட்ட சித்திரைப் பெருவிழா உள்ளிட்ட ஊழியர் நலனோம்பல் அலுவல்களுக்காகவும் சபையின் முழுமையான அனுசரணை வழங்கப்பட்டது.

2018 ஆம் ஆண்டில் சபையின் பதவி வெற்றிடங்களுக்காக அலுவலர்களின் ஆட்சேர்ப்பு இடம்பெறவில்லை என்பதோடு இளைப்பாறுதல் போன்றவற்றை உள்ளிட்ட காரணங்களின்பேரில் இவ்வாண்டில் சேவையிலிருந்து விலகிய அலுவலர்களின் எண்ணிக்கை 17 ஆகும். அங்கீகரிக்கப்பட்ட பதவியணி உள்ளடக்கத்தின்படி உரிய பதவியணி 421 ஆக அமைந்தபோதிலும் சேவையில் ஈடுபட்டிருந்த ஊழியர்களின் எண்ணிக்கை 285 ஆக விளங்கியது. அதற்கிணங்க வெற்றிடங்களின் எண்ணிக்கை 136 ஆகும்.

காலநிலை மற்றும் வானிலை தாக்கங்கள் காரணமாக இடம்பெறுகின்ற பயிர்சேதங்களின்போது சேதஇழப்பீட்டுக்கான அபாயநேர்வு முகாமைத்துவ முறையியல் என்றவகையில் கமத்தொழில் காப்புறுதியை அமுலாக்குதல், வறுமையை ஒழித்தல் மற்றும் விவசாயத்தைப் பயனுறுதியும் மதிப்புமிக்கதுமான தொழிலாக மாற்றுதலை உள்ளிட்ட நிலைபெறுதகு அபிவிருத்திக் குறிக்கோள்களை வென்றெடுப்பதற்காகவும் உள்நாட்டுக் கமக்காரர்களை பாதுகாப்பதற்காகவும் 2018 ஆம் ஆண்டில் சபையின் செயற்பாடுகளும் செயல்விளைவும் இவ்வறிக்கை மூலமாக சமர்பிக்கப்பட்டுள்ளன.

நெறிப்படுத்தல் பிரிவு

நெறிப்படுத்தல் பிரிவு - 2018

அபாயநேர்வு முகாமைத்துவ முறையியலென்றவகையில் உள்நாட்டு விவசாயத்துறைக்கு கமத்தொழில் காப்புறுதியை அறிமுகஞ்செய்து உள்நாட்டு விவசாய உற்பத்திகளை அதிகரித்தல் மற்றும் விவசாயியைப் பாதுகாப்பதை முதன்மைப் பணியாகக்கொண்டு கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை இயங்கி வருகின்றது. வறட்சி, வெள்ளப்பெருக்கு, காட்டுயானைகளால் ஏற்படுகின்ற சேதங்களை உள்ளிட்ட இயற்கை அனர்த்த நிலைமைகளின்போது கமக்காரர்கள் எதிர்நோக்குகின்ற பொருளாதார சிக்கல்களுக்கான சிறந்த தீர்வாக கமத்தொழில் காப்புறுதி முறையியல் முக்கியத்துவம் வகிக்கின்றது. அத்துடன் விவசாயப் பொருளாதாரப் பாங்கினுள் உள்நாட்டுப் பொருளாதாரத்தைப் பலப்படுத்துகையில் விவசாய அபாயநேர்வு முகாமைத்துவத்தை மிகவும் நடைமுறைச்சாத்தியமான வகையில் பிரயோகித்தலானது உள்நாட்டு விவசாயப் பொருளாதாரத்தையும் வாழ்க்கைப் பாங்கினையும் உறுதியான மட்டத்தில் பேணிவர பாரிய உறுதுணையாக அமைந்துள்ளது. குறிப்பாக கமக்காரர்களுடன் மிகவும் நெருங்கிய பயிர்க்காப்புறுதி செயற்றிட்டம், கால்நடைக் காப்புறுதி செயற்றிட்டம், சுவசெத மற்றும் திடீர் விபத்துக் காப்புறுதி, விவசாய உபகரணக் காப்புறுதி, களஞ்சியக் காப்புறுதி மற்றும் மூன்றாந் தரப்பு மோட்டார் வாகனக் காப்புறுதி போன்ற அதிகப்படியான நன்மைகளைக்கொண்ட பல காப்புறுதி செயற்றிட்டங்கள் கமக்காரர்களுக்காக சபையின் கீழ் அமுலாக்கப்பட்டு வருகின்றன.

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபையின் சேவைகளை மக்கள் மத்தியில் விரிவாக்குகையில் மிகவும் முக்கியமான செயற்பொறுப்பினை ஈடேற்றுதல் நெறிப்படுத்தல் பிரிவிடம் கையளிக்கப்பட்டுள்ளது. சபையினால் நடைமுறைப்படுத்தப்பட எதிர்பார்த்துள்ள வருங்கால வேலைத்திட்டத்தை உள்ளடக்கிய கூட்டாண்மைத் திட்டத்திற்கு அமைவாக எல்லாவிதமான தாபனஞ்சார் திட்டங்களையும் வகுத்தல், மேற்படி திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக நாடளாவியரீதியில் பரந்துள்ள மாவட்ட அலுவலகங்களை நெறிப்படுத்துதல், அதற்கான மனித மற்றும் பௌதீக அவசியப்பாடுகளை நிறைவுசெய்தலை உள்ளிட்ட தனித்துவமான செயற்பொறுப்பு நெறிப்படுத்தல் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

- விவசாயத்துறையில் காப்புறுதிச் சேவைகளை வழங்குகின்ற பிரதான அரச நிறுவனமென்றவகையில் உள்நாட்டு விவசாயத்தை மேம்படுத்துதல் மற்றும் விவசாயியின் பொருளாதாரத்தை உறுதிப்படுத்துவதில் கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையிடம் கையளிக்கப்பட்டுள்ள பொறுப்பினை உச்சஅளவில் ஈடேற்றுவதை நோக்கமாகக்கொண்டு 2018 ஆம் ஆண்டிலும் பல்வேறு

காப்புறுதி செயற்றிட்டங்களை நாடளாவியரீதியில் அமுலாக்க நெறிப்படுத்தல் பிரிவு நடவடிக்கை எடுத்துள்ளது.

01. பயிர்ச்செய்கைக் காப்புறுதி செயற்றிட்டம்

- நெற்பயிர்க் காப்புறுதி செயற்றிட்டம்.
- சோளச் செய்கை காப்புறுதி செயற்றிட்டம்
- பெரிய வெங்காய செய்கை காப்புறுதி செயற்றிட்டம்
- உருளைக் கிழங்கு செய்கைக் காப்புறுதி செயற்றிட்டம்
- மிளகாய் செய்கை காப்புறுதி செயற்றிட்டம்
- சோயா செய்கைக் காப்புறுதி செயற்றிட்டம்
- மேலதிக பயிர்செய்கை காப்புறுதி செயற்றிட்டம் (பயறு, நிலக்கடலை, உழுந்து)
- கரும்புச் செய்கை காப்புறுதி செயற்றிட்டம்
- ஏற்றுமதிப் பயிர்ச்செய்கை காப்புறுதி செயற்றிட்டம் (மிளகு, கறுவா)
- பெருந்தோட்ட பயர்ச்செய்கை காப்புறுதி செயற்றிட்டம் (தேயிலைச் செய்கை)
- தெங்குச் செய்கை காப்புறுதி செயற்றிட்டம்
- மலர்ச் செய்கை காப்புறுதி செயற்றிட்டம்
- இஞ்சி செய்கை காப்புறுதி செயற்றிட்டம்
- மரக்கறிச் செய்கை காப்புறுதி செயற்றிட்டம்
- வாழைச் செய்கை காப்புறுதி செயற்றிட்டம்
- பழச் செய்கை காப்புறுதி செயற்றிட்டம்.

02. களஞ்சிய காப்புறுதி செயற்றிட்டம்

03. விவசாய உபகரண காப்புறுதி செயற்றிட்டம்

04. கால்நடைக் காப்புறுதி செயற்றிட்டம்

- மாடுகள்
- ஆடுகள்

05. திடீர் விபத்து காப்புறுதி செயற்றிட்டம்

06. சுவசெத சுகாதாரக் காப்புறுதி செயற்றிட்டம்

07. மூன்றாந் தரப்பு மோட்டார் வாகன காப்புறுதி செயற்றிட்டம்

08. சமூகப் பாதுகாப்பு செயற்றிட்டங்கள்

- கமக்காரர் ஓய்வூதியத் திட்டம்
- கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டம்

வறட்சி, வெள்ளப்பெருக்கு மற்றும் காட்டு யானைகளால் இடம்பெறுகின்ற அனர்த்தங்களிலிருந்து பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்கு ஏற்படக்கூடிய சேதங்கள் காரணமாக கமக்கார சமுதாயத்திற்கு ஏற்படக்கூடிய சிரமங்களுக்கான தீர்வாக நெல், சோளம், உருளைக்கிழங்கு, பெரிய வெங்காளம், சோயா மற்றும் மிளகாய் செய்கைகளுக்காக கமக்காரர்களினதும் அரசாங்கத்தினதும் பங்களிப்புடனான

கட்டாயக் காப்புறுதி செயற்றிட்டத்தில் கமக்காரர்களை பங்கேற்கச் செய்வித்தல் இடம்பெற்றதோடு, 2018 சிறுபோகத்தில் இருந்து கமக்காரர்களிடமிருந்து தவணைப் பணம் அறவிடாமல் அரசாங்கத்தின் கொள்கைரீதியான தீர்மானத்தின்பேரில் ஏக்கரொன்றுக்காக ரூ. 40,000/- காப்புறுதிக் காப்பீட்டினை வழங்கவும் அரசாங்கத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டது. கமத்தொழில் அமைச்சு, கமநல சேவைகள் திணைக்களம், மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை, அரச மற்றும் அரச துறையல்லாத வங்கிகள் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட அனைத்து நிறுவனங்களினதும் இணைப்பாக்கத்துடன் இந்த காப்புறுதி செயற்றிட்டம் 2018 சிறுபோகத்தில் இருந்து சபையினால் தீவடங்கிலும் அமுலாக்கப்பட்டது.

நெறிப்படுத்தல் பிரிவினால் அமுலாக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்

- 2017/ 18 பெரும்போகத்தின் நெல் விளைச்சலை அறுவடைசெய்த பின்னர் அநுராதபுரம் ஜயஸ்ரீ போதிக்கருகில் புத்தரிசி விழா 2018.04.07 மற்றும் 08 ஆகிய இரண்டு நாட்களிலும் அதிமேதகு சனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களின் தலைமையில் நடைபெற்றதோடு, பிரித் மண்டபத்தை நிர்மாணித்தல், ஒலிபெருக்கி வசதிகளை வழங்குதலை உள்ளிட்ட பெரும்பாலான பணிகள் சபையின் அனுசரணையுடனும் அலுவலர்களின் பங்கேற்புடனும் ஈடேற்றப்பட்டது.
    - 70 வது பெருமைமிக்க சுதந்திரதின விழா 2018.02.04 ஆந் திகதி பொலநறுவை றோயல் மகா வித்தியாலயத்தில் வெகுவிமரிசையாக நடாத்தப்பட ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அதன்பொருட்டு பொலநறுவை மாவட்டத்தைச் சேர்ந்த அரச மற்றும் அரசதுறையல்லாத நிறுவனங்கள் உச்சஅளவிலான பங்களிப்பினை வழங்கியதோடு தேசத்தின் சுதந்திரம் அனைத்து மக்களினதும் வாழ்வாதாரத்தைப் பலப்படுத்த பாரிய பங்களிப்பினை நல்குவதால் சுதந்திரதின விழாவை வெற்றிகரமாக நடாத்துவதற்காக ஒலிபெருக்கிச் சாதன வசதிகளை வழங்கியதன் மூலமாக சபை பங்களிப்பினை வழங்கியதோடு சபை உத்தியோகத்தர்களின் பங்கேற்பும் ஒத்துழைப்பும் வழங்கப்பட்டது.
    - உள்நாட்டு விவசாயத்தின் மேம்பாட்டுக்காக கமக்காரர்களை மிகவும் ஊக்குவிப்பதற்காக நெல், சோளம், உருளைக்கிழங்கு, பெரிய வெங்காயம், மிளகாய், மற்றும் சோயா செய்கைகளுக்காக இலவசக் காப்புறுதியை அறிமுகஞ்செய்வதற்கான தேசிய நிகழ்ச்சித்திட்டம் 2018.05.28 ஆந் திகதி அம்பாந்தோட்டை மாவட்டத்தின் நோனாகம கலாசார நிலையத்தில் மாண்புமிகு கமத்தொழில் அமைச்சர் மகிந்த

அமரவீர அவர்களின் தலைமையிலும் அமைச்சர்கள் மற்றும் பிரமுகர்களின் பங்கேற்புடனும் நடாத்தப்பட்டது.

- நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்குகளை தொனிப்பொருளாகக்கொண்டு நிதி மற்றும் வெகுசன ஊடகத்துறை அமைச்சு மூலமாக ஏற்பாடு செய்யப்பட்ட " V 2025 Enterprises Sri Lanka" கண்காட்சி 2018 ஓகத்து மாதம் 17 ஆந் திகதி தொடக்கம் 19 ஆந் திகதி வரை மொணறாகல மாவட்டத்தில் நடாத்தப்பட்டதோடு அங்கு சபையை பிரதிநிதித்துவம்செய்து கண்காட்சிக்கூடமொன்று பேணிவரப்பட்டது. அங்கு துண்டுப்பிரசுரங்கள், பெனர், சுவரொட்டிகள் மற்றும் மல்டிமீடியா புறொஜெக்டர் பாவனை மூலமாக சபையினால் அமுலாக்கப்படுகின்ற அனைத்து நிகழ்ச்சித்திட்டங்களையும் கண்காட்சியை கண்டுகளிக்கவந்த பார்வையாளர்கள் அனைவரும் கண்டுகளிக்க ஏற்பாடு செய்யப்பட்டது.
- கமத்தொழில் அமைச்சின் நெறிப்படுத்தலின்கீழ் ' விவசாயம்சார்ந்த நவீனமயமாக்கல் பற்றிய கண்காட்சி மற்றும் கமக்காரர் பாராட்டு விழா' பண்டாரநாயக்க மாநாட்டு மண்டப வளாகத்தில் 2018.12.11 திகதி தொடக்கம் 2018.12.16 திகதி வரை நடாத்தப்பட்டதோடு அங்கு சபையை பிரதிநிதித்துவம்செய்து கண்காட்சிக்கூடமொன்று பேணிவரப்பட்டடது. அங்கு துண்டுப்பிரசுரங்கள், பெனர், சுவரொட்டிகள் மற்றும் மல்டிமீடியா புறொஜெக்டர் பாவனை மூலமாக சபையினால் அமுலாக்கப்படுகின்ற அனைத்து நிகழ்ச்சித்திட்டங்களையும் கண்காட்சியை கண்டுகளிக்கவந்த பார்வையாளர்கள் அனைவரும் கண்டுகளிக்க ஏற்பாடு செய்யப்பட்டது.
- மூன்றாந்தரப்பு மோட்டார்வாகன காப்புறுதி செயற்றிட்டத்தை கமக்காரர் மத்தியில் பிரபல்யப்படுத்துவதற்காக மாவட்ட மட்டத்தில் முகவர்களை நியமித்தல் மேற்கொள்ளப்பட்டது. தம்புத்தேகம, அநுராதபுரம், கம்பஹா, பதுளை, நுவரெலியா, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் காப்புறுதி முகவர்கள் நியமிக்கப்பட்டனர்.
- மாவட்ட மட்டத்தில் நடாத்தப்டுகின்ற சிறப்பு பிரச்சார மற்றும் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களுக்கு அவசியமான சுவரொட்டிகள், பெனர் மற்றும் துண்டுப்பிரசுரங்களை மாவட்ட அலுவலகங்கள் வாயிலாக தயாரித்துக்கொள்ள அவசியமான நடவடிக்கைகள் ஈடேற்றிக் கொடுக்கப்பட்டதோடு மாத்தறை, அநுராதபுரம், பதுளை, தம்புத்தேகம, நுவரெலியா, காலி, மாத்தளை ஆகிய மாவட்ட அலுவலகங்கள் முன்வைத்த கோரிக்கைகளுக்கிணங்க ஏற்புடைய அவசியப்பாடுகளை நெறிப்படுத்தல் பிரிவு மூலமாக வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

காப்புறுதிப் பிரிவு

கமத்தொழில் காப்புறுதி செயற்றிட்டம்

மற்றும்

கால் நடைக்காப்புறுதி செயற்றிட்டடம்

காப்புறுதிப் பிரிவு - 2018

மற்றைய வருடங்களைப் போலவே இவ்வாண்டிலும் இழப்பீடு செலுத்தும் பணிகளுக்காக அதிக கவனஞ் செலுத்தப்பட்டு கடமைகளை ஈடேற்றவேண்டிய நிலைமை காப்புறுதிப் பிரிவுக்கு ஏற்பட்டது. 2017 சிறுபோகத்தில் போன்றே 2017/2018 பெரும்போகத்திலும் காப்புறுதிசெய்த செய்கைகளுக்கு இயற்கை அனர்த்தங்கள் காரணமாக சேதங்கள் ஏற்பட்டமையால் நிர்க்கதிநிலையுற்ற கமக்காரர்களுக்கு துரிதமாக இழப்பீட்டுத் தொகைகளை விடுவிக்கும்பொருட்டு செயலாற்றவேண்டி ஏற்பட்டது.

2017 சிறுபோகம் மற்றும் 2017/2018 பெரும்போகத்தில் காப்புறுதிசெய்த செய்கைகளைப்போன்றே காப்புறுதி செய்யப்படாத செய்கைகளுக்காகவும் சபையினால் இழப்பீடு செலுத்தப்பட்டது. 2018 வரவு செலவு முன்மொழிவுகளின்படி ஏக்கரொன்றுக்கு ரூபா 40,000/- காப்பீட்டின் கீழ் பயிர்ச்சேத இழப்பீட்டுத் தொகைகளை விடுவிக்க திட்டமிடப்பட்டிருந்தமையால், அதற்கமைவாக கடமைகள் நிறைவேற்றப்பட்டன. அதற்கிணங்க செயலாற்றுவதற்கேதுவாக இழப்பீட்டுப் பதிவேடுகள் இற்றைப்படுத்தப்பட்டன. எனினும் இழப்பீட்டுத் தொகைகளை விடுவிப்பதற்காக முழுமையான நிதியங்களை பெற்றுக்கொள்ள இயலாமல் போனமையால் ஏக்கரொன்றுக்காக ரூபா. 20,000/- ஆக அமையத்தக்கவகையில் சீராக்கி பணம் விடுவிக்கப்பட்டதோடு அது பற்றி பணிப்பாளர் சபையை விழிப்புணர்வூட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அத்துடன் பெரும்போகத்திற்கான 2017/2018 இழப்பீடு செலுத்துவதற்காக புதிய முறையிலொன்றைத் தயாரித்து இழப்பீட்டுத் தொகைகளை விடுவிக்க அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அதன்போது விசேடமாக நெல், சோளம், உருளைக்கிழங்கு செய்கைகளுக்காக அதிகமான இழப்பீட்டுத் தொகைகளை விடுவிக்கவேண்டிய நிலையேற்பட்டது. அதற்கு மேலதிகமாக வவுனியா மாவட்டத்தின் சிறப்பு நிகழ்ச்சித்திட்டமாக அமுலாக்கப்பட்ட உழுந்து செய்கையின்கீழான பயிர்ச்சேதத்திற்காக பணத்தை விடுவிக்கவேண்டி ஏற்பட்டது. ஏனைய மேலதிக பயிர்ச்செய்கைகளின்கீழ் சிறிய அளவில் இழப்பீட்டுத் தொகைகள் விடுவிக்கப்பட்டன.

மேலும் துரிதமாக இழப்பீட்டுத் தொகைகளை விடுவிப்பதற்காக சபையின் பணியாளர்கள் போதுமானதாக அமையாததால் 13 நடமாடும் சேவைகள் நடாத்தப்பட்டு மாவட்டப் பணியாளர்களையும் அவசியமானவிடத்து கமநலசேவைகள் நிலைய பணியாளர்களையும் பங்கேற்கச் செய்வித்து பயிர்சேதத்திற்காக பணத்தை விடுவிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன்போது மொழிரீதியான சிக்கல்கள் நிலவுகின்ற மாவட்டங்களான யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கத்தக்கதாக பல நடமாடும் சேவைகளும் அதிகமான இழப்பீட்டுப் பதிவேடுகள் பதிவாகிய அநுராதபுரம், பொலநறுவை, அம்பாறை, குருநாகல் ஆகிய மாவட்டங்களுக்காக பல நடமாடும் நிகழ்சிகளும் நடைமுறைப்படுத்தப்பட்டன.

அத்துடன் கால்நடை காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதியின்கீழ் சமர்ப்பிக்கப்பட்ட இழப்பீட்டுப் பதிவேடுகள் சம்பந்தமான இழப்பீட்டுத் தொகைகளை விடுவிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

2018ஆம் ஆண்டில் இழப்பீடு செலுத்துதல் பொழிப்பு பின்வருமாறு அமையும்

	கமக்காரர்களின் எண்ணிக்கை	**இழப்பீட்டுத் தொகை மில்.ரூபா**
பயிர்க்காப்புறுதி	167,347	2,164
கால்நடைக் காப்புறுதி	113	5
பொதுக் காப்புறுதி	80	0.2
கூட்டுத்தொகை	**167,540**	**2,169.2**

அத்துடன், 1918 தொலேபேசி இலக்கம் ஊடாக சேத அறிக்கைகளைப் பெறுதல் தொடங்கப்பட்டது. அதன் மூலமாக சேத அறிவித்தல்களை வழங்கிய கமக்காரர்களின் எண்ணிக்கை ஏறக்குறைய 25,000 ஆக அமைந்தது. எனினும் இந்த வழிமுறையை ஒரு வெற்றிகரமான வழிமுறையாக பயிர்க்காப்புறுதி நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்த இயலாமல் போயிற்று.

மேலும் உயர் முகாமைத்துவத்தின் இடையீட்டின்பேரில் தயாரிக்கப்பட்டு பிரிவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட மறுகாப்புறுதி செயற்றிட்டம் 2019.03.31 இல் நிறைவடைய உள்ளது.

அத்துடன் பொதுக்காப்புறுதி நடவடிக்கைகளுக்கான ஊக்குவிப்புப்படி முறையியலை இற்றைப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டதோடு அதன் மூலமாக சந்தைப்படுத்தல் பணிகளை அதிகரித்துக்கொள்ள இயலுமாயிற்று.

கமக்காரர் ஒய்வூதியப் பிரிவு

கமக்காரர் ஒய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித்திட்டம்

மற்றும்

கடற்றொழிலாளர் ஒய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டம்

கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித்திட்டம்– 2018

1987 இன் 12 ஆம் இலக்க கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டச் சட்டம் மூலமாக ஆரம்பிக்கப்பட்ட கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டத்திற்கு 2018 ஆம் ஆண்டளவில் பங்களிப்புச் செய்துள்ள மொத்த உதவுதொகை செலுத்துனர்களின் எண்ணிக்கை 959,254 ஆகும். 2018 ஆம் ஆண்டளவில் இந்த செயற்றிட்டம் மூலமாக நன்மை வழங்கப்படுகின்ற கமக்காரர்களின் எண்ணிக்கை 154,907 ஆகும். 2018 ஆம் ஆண்டின் இறுதியில் 154,907 கமக்காரர்களுக்காக ரூ. 2, 924, 813,696 /= செலுத்தப்பட்டுள்ளது.

கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டச் சட்டம் மூலமாக வழங்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க அதிக வயதுப் பிரிவுகளுக்காக வயது 60 நிறைவடைந்த பின்னர் கிடைக்கவேண்டிய ஓய்வூதியம் ரூ. 200/= ஆக அமைந்தபோதிலும் இது சம்பந்தமாக இரண்டு சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட்ட அமைச்சரவை தீர்மானங்களுக்கிணங்க கிடைக்கவேண்டிய ஓய்வூதியம் ரூ. 1,000/= வரை அதிகரிக்கப்பட்டமை, ஓய்வூதியம் பெறுனர் இறக்குமிடத்து அவரது வயது 80 வருடங்கள் வரை வாழ்க்கைத்துணைக்கு ஓய்வூதியம் செலுத்துதல், வயது 45 வருடங்கள் தொடக்கம் 59 வருடங்கள் வரையான வயதுப் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு இந்த சட்டம் மூலமாக வழங்கப்பட்டிருந்நத 02 வருட காலஎல்லையை 2007 ஆம் ஆண்டுவரை நீடித்தல் எனும் காரணியின்பேரில் இந்த செயற்றிட்டத்தின் நிதியம் 2010 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் பூச்சியநிலையடைந்தது. இக்காரணத்தின் பேரில் பொது திறைசேரி ஏற்பாடுகள் மற்றும் சபையினால் பேணிவரப்பட்ட வேறுநிதியங்களையும் பிரயோகித்து 2011 திசெம்பர் வரை ஓய்வூதியம் செலுத்தப்பட்டது. எவ்வாறாயினும் நிதியங்கள் கிடைக்காமையால் 2012 ஆம் ஆண்டின் சனவரி மாதம் தொடக்கம் 2013 திசெம்பர் வரை ஓய்வூதியம் செலுத்துதல் ஸ்தம்பிதம் அடைந்தது. எனினும் இறப்பு மற்றும் ஏலாமை நன்மை பெறுனர்களுக்கு அக்கொடுப்பனவு தொடர்ச்சியாக செலுத்தப்பட்டது. இந்த திட்டத்திற்கு 2012 ஆம் ஆண்டுவரை பங்களிப்பு நிதியமாக நிதியத்தில் வரவு வைக்கப்பட்டுள்ள பணத்தொகை 3,228 மில்லியன் ரூபாவாக அமைவதோடு ஓய்வூதியமாக 6,868 மில்லியன் ரூபா செலுத்தப்பட்டுள்ளது. 2012 ஆம் ஆண்டின் ஓய்வூதியம் பெறுனர்களின் எண்ணிக்கை 90,573 பேர் ஆகும்.

இந்த ஓய்வூதியத் திட்டத்தில் தோன்றியிருந்த நிதி நெருக்கடிக்கான நிரந்தர தீர்வொன்றினை பெற்றுக்கொடுக்கையில் திட்டத்தை தொடர்ச்சியாக அமுலாக்குவதற்காக நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் தலைமையில் இந்த திட்டத்தில் மறுசீரமைப்பொன்று அமுலாக்கப்பட்டதோடு, அதன் பெறுபேறாக 2014 வரவுசெலவுத் திட்டத்திற்கிணங்க அதிக நன்மைகளைக்கொண்டதாக இந்த செயற்றிட்டத்தை புதிய ஒரு திட்டமாக சட்டமாக்கவும் 2014 ஆம் ஆண்டு தொடக்கம் புதிய செயற்றிட்டத்திற்கு நேரொத்ததாக அமையத்தக்கதாக அதிக நன்மைகளைக் கொண்டதாக ஓய்வூதியம் செலுத்துதலை மீண்டும் அமுலாக்கவும் அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

அதற்கமைவாக 2013 ஆம் ஆண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியளவில் வயது 60 வருடங்களை நிறைவுசெய்து ஓய்வூதியம்பெற தகுதியடைந்த 128,659 உதவுதொகை செலுத்துனர்களுக்காக 2014 ஆம் ஆண்டில் சனவரி மாதத்தில் இருந்து ஓய்வூதிய உரிமையை வழங்கவும் நடவடிக்கை டுக்கப்பட்டுள்ளது.

<u>கமக்காரர் மற்றும் கடற்றொழிலாளர் சமூகங்களுக்கான புதிய ஓய்வூதியத் திட்டமொன்றை அறிமுகஞ்செய்தல்.</u>

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை மூலமாக கமக்காரர் மற்றும் கடற்றொழிலாளர் சமூகங்களுக்காக புதிய ஓய்வூதியத் திட்டமொன்றை அறிமுகஞ்செய்வதற்காக சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை நிருபத்திற்காக வழங்கப்பட்டிருந்த 2016.10.18 ஆந் திகதிய අමා/16/1908/728/044 இலக்கமுடைய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் நியமிக்கப்பட்ட புலமைசாலிகள் குழு மூலமாக நிதிரீதியில் உறுதியான மற்றும் நிலைபெறுதகு கமக்காரர் ஓய்வூதியத்திட்ட முன்மொழிவினை சமர்ப்பிப்பதற்காக 2018.01.04 ஆந் திகதி முதலாவது பேச்சுவார்த்தை சுற்று நடாத்தப்பட்டதோடு அடுத்த புலமைசாலிகள் குழுக் கூட்டம் 2019 மார்ச்சு மாதம் நடாத்தப்பட அதன்போபது தீர்மானிக்கப்பட்டது.

<u>இறப்பு மற்றும் எலாமை நன்மைகளை செலுத்துதல்.</u>

கமக்காரர் ஓய்வூதிய நிதியம் சம்பந்தமாக நிலவிய நிதிநெருக்கடியின்பேரில் 2012 சனவரி மாதம் தொடக்கம் ஓய்வூதியம் செலுத்துதல் நிறுத்தப்பட்டபோதிலும் இந்த திட்டத்திற்காக பங்களிப்புச்செய்து இறந்த மற்றும் எலாமை நிலையுற்ற உதவுதொகை செலுத்துனர்கள் தொடர்பில் இறப்பு பணிக்கொடையாக ரூ. 8,131,379/= பணத்தொகை 385 நன்மைபெறுனர்களுக்காக செலுத்தப்பட்டது.

கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டம்.

2018 ஆம் ஆண்டின் இறுதியளவில் உறுப்பரிமை வழங்கப்பட்டுள்ள மொத்த கடற்றொழிலாளர் எண்ணிக்கை 69,049 பேர் ஆகும். ஓய்வூதியம் பெறுனர்கள் 4,420 பேருக்காக ரூ. 62,553, 368/= ஓய்வூதியமாக செலுத்தப்பட்டது. இந்த கொடுப்பனவுகள் 390 தபால் நிலையங்கள் மூலமாக மேற்கொள்ளப்படுகின்றன.

இறப்பு மற்றும் எலாமை நன்மைகளை செலுத்துதல்.

கடற்றொழிலாளர் ஒய்வூதியத் திட்டத்தின் உதவுதொகை செலுத்துனர்கள் மத்தியில் இறந்த 43 பேருக்காக ரூ. 516,000/=இறப்புப் பணிக்கொடையாக செலுத்தப்பட்டுள்ளது.

கமக்காரர்களுக்கு ஒய்வூதியம் செலுத்துதல் – 2018

மாவட்டம்	உறுப்பினர் எண்ணிக்கை	செலுத்திய தொகை
அம்பாறை	3,918	72,705,846.00
அநுராதபுரம்	7,488	132,645,444.00
பதுளை	6,533	122,480,518.00
மட்டக்களப்பு	1,115	20,213,284.00
கொழும்பு	5,178	106,828,619.00
காலி	13,807	285,733,723.00
கம்பஹா	11,035	210,346,878.00
அம்பாந்தோட்டை	8,515	150,976,588.00
யாழ்ப்பாணம்	2,412	48,023,229.00
களுத்துறை	8,644	172,286,399.00
கண்டி	15,593	302,133,149.00
கேகாலை	9,854	179,446,846.00
குருநாகல்	18,685	336,166,105.00
மன்னார்	87	1,364,650.00
மாத்தளை	4,670	83,200,365.00
மாத்தறை	9,753	188,897,240.00
மொணறாகல	5,212	95,760,987.00
முல்லைத்தீவு	131	2,796,444.00
நுவரெலியா	3,014	57,364,342.00
பொலநறுவை	5,095	95,553,032.00
புத்தளம்	5,465	98,913,224.00
இரத்தினபுரி	7,267	135,138,940.00
திருகோணமலை	892	16,621,133.00
வவுனியா	544	9,216,711.00
கூட்டுத்தொகை	**154,907**	**2,924,813,696.00**

இறப்பு பணிக்கொடை கொடுப்பனவும் தேறிய உதவுதொகையின் மீளளிப்பும் – 2018

மாவட்டம்	ஆட்களின் எண்ணிக்கை	பணிக்கொடை ரூ.	தேறிய உதவுதொகை ரூ.	கூட்டுத்தொகை ரூ.
கண்டி	24	130,700.00	459,365.00	590,065.00
குருநாகல்	31	154,400.00	574,744.00	729,144.00
கேகாலை	18	88,000.00	283,660.00	371,116.00
தம்புத்தேகம	13	77,000.00	241,116.00	318,116.00
அநுராதபுரம்	18	90,000.00	324,401.00	414,401.00
நுவரெலியா	30	117,820.00	311,248.00	429,068.00
புத்தளம்	12	83,000.00	220,922.00	303,922.00
பொலநறுவை	11	69,000.00	223,145.00	292,145.00
யாழ்ப்பாணம்	6	26,000.00	148,495.00	175,495.00
மாகோ	28	183,000.00	567,379.00	750,379.00
மன்னார்	2	12,000.00	35,518.00	47,518.00
மாத்தளை	10	36,000.00	160,751.00	196,751.00
காலி	25	116,000.00	365,291.00	481,291.00
மாத்தறை	18	86,640.00	242,787.00	329,427.00
அம்பாந்தோட்டை	17	95,820.00	228,083.00	323,903.00
மொணறாகல	14	96,700.00	173,582.00	270,282.00
கம்பஹா	29	187,000.00	355,339.00	542,339.00
இரத்தினபுரி	11	63,000.00	162,501.00	225,501.00
களுத்துறை	16	101,000.00	208,526.00	309,526.00
கொழும்பு	9	45,880.00	116,772.00	162,652.00
உடவளவை	3	28,000.00	66,187.00	94,187.00
மன்னம்பிட்டி	13	66,000.00	196,866.00	262,866.00
பதுளை	19	121,560.00	247,244.00	368,804.00
அம்பாறை	8	32,000.00	109,937.00	141,937.00
	385	**2,106,520.00**	**6,024,859.00**	**8,131,379.00**

கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித்திட்டம்
2018.12.31 இல் உள்ளவாறான உதவுதொகை செலுத்துனர்கள்

மாவட்ட கடற்றொழில் விரிவாக்க அலுவலர் பிரிவு	வயதுப்பிரிவுக்கிணங்க உதவுதொகை செலுத்துனர்கள்						மொத்த உதவுதொகை செலுத்துனர்களின் எண்ணிக்கை
	18-29	30-35	36-45	46-50	51-54	55-59	
களுத்துறை	1,213	721	772	197	105	59	3,067
காலி	1,082	676	840	221	118	95	3,032
மஹாவெவ	3,253	1,702	2,036	613	256	240	8,100
மாத்தறை	1,750	980	1,232	346	201	164	4,673
கொழும்பு	576	360	478	140	63	38	1,655
தங்காலை	2,514	1,389	1,629	412	201	169	6,314
புத்தளம்	2,167	1,156	1,222	255	107	61	4,968
நீர்கொழும்பு	2,538	1,599	2,167	735	419	378	7,836
மட்டக்களப்பு	2,248	1,390	1,630	555	272	266	6,361
திருகோணமலை	654	516	550	129	81	78	2,008
மன்னார்	2,066	1,227	1,343	429	222	257	5,544
கல்முனை	1,565	1,109	1,515	479	244	207	5,119
முல்லைத்தீவு	88	79	141	50	27	44	429
கிளிநொச்சி	519	340	540	250	185	183	2,017
யாழ்ப்பாணம்	2,185	1,117	1,444	668	402	617	6,433
நன்னீர் பரப்புகள்							
நுவரெலியா	29	28	47	7	1	3	115
பொலநறுவை	45	35	27	11	2	1	121
இரத்தினபுரி	27	15	9	1	3	-	55
மொணறாகல	17	14	10	1	-	-	42
குருநாகல்	45	24	24	1	-	2	96
அநுராதபுரம்	169	81	84	17	7	5	363
மாத்தளை	31	14	23	5	2	3	78
கண்டி	13	12	25	5	3	3	61
கேகாலை	1	1	2	-	-	-	4
பதுளை	59	33	33	3	-	3	131
வவுனியா	59	33	41	15	4	-	152
மட்டக்களப்பு - நன்னீர்	84	52	67	27	20	25	275
கூட்டுத்தொகை	**24,997**	**14,703**	**17,931**	**8,872**	**2,945**	**2,901**	**69,049**

கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித்திட்டம்

மாவட்ட கடற்றொழில் விரிவாக்க அலுவலர் பிரிவு	இறப்பு மற்றும் ஏலாமை நலன் கொடுப்பனவு	
	உதவுதொகை செலுத்துனர்களின் எண்ணிக்கை	தொகை ரூ.
களுத்துறை	5	58,000.00
காலி		
மஹாவெவ	1	8,000.00
மாத்தறை	1	8,000.00
கொழும்பு		
தங்காலை	2	16,000.00
புத்தளம்		
நீர்கொழும்பு	4	16,000.00
மட்டக்களப்பு	1	8,000.00
திருகோணமலை		
மன்னார்	10	109,000.00
கல்முனை	3	8,000.00
முல்லைத்தீவு		
கிளிநொச்சி	5	90,000.00
யாழ்ப்பாணம்	11	175,000.00
நன்னீர் பரப்புகள்		
நுவரெலியா		
பொலநறுவை		
இரத்தினபுரி	-	-
மொணறாகல	-	-
குருநாகல்	-	-
அநுராதபுரம்	-	-
மாத்தளை	-	-
கண்டி	-	-
கேகாலை	-	-
பதுளை	-	-
வவுனியா	-	-
மட்டக்களப்பு - நன்னீர்	-	-
கூட்டுத்தொகை	**43**	**516,000.00**

கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித்திட்டம்

மாவட்ட கடற்றொழில் விரிவாக்க அலுவலர் பிரிவு	ஓய்வூதியம் செலுத்துதல்	
	செலுத்துனர்களின் எண்ணிக்கை	தொகை ரூ.
களுத்துறை	108	1,466,735.00
காலி	128	1,,768,743.00
மகாவெவ	372	5,364,381.0
மாத்தறை	307	4,227,212.00
கொழும்பு	58	796,503.00
தங்கலை	242	3,338,532.00
புத்தளம்	57	853,507.00
நீர்கொழும்பு	589	8,152,301.00
மட்டக்களப்பு	458	6,489,204.00
திருகோணமலை	101	1,558,818.00
மன்னார்	398	5,515,855.00
கல்முனை	355	5,112,822.00
முல்லைத்தீவு	67	1,003,615.00
கிளிநொச்சி	289	4,685,551.00
யாழ்ப்பாணம்	831	11,360,164.00
நன்னீர் பரப்புகள்		
நுவரெலியா	7	103,754.00
பொலநறுவை	3	42,050.00
இரத்தினபுரி	3	54,365.00
மொணறாகல		
குருநாகல்	2	34,004.00
அநுராதபுரம்	5	67,248.00
மாத்தளை	6	119,184.00
கண்டி	7	93,000.00
கேகாலை		
பதுளை	4	52,200.00
வவுனியா	1	15,204.00
மட்டக்களப்பு - நன்னீர்	22	278,416.00
கூட்டுத்தொகை	**4,420**	**62,553,368.00**

நிர்வாக மற்றும் மனிதவளப் பிரிவு

நிர்வாக மற்றும் மனிதவளப் பிரிவு- 2018

பதவியினர்குழாம்

2018.12.31ஆந் திகதியில் கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையின் பதவியினர் குழாம் கீழே குறிப்பிட்டவாறு அமைந்திருந்தது.

பதவியினர் குழாமின் உள்ளடக்கம்

சேவைப் பிரிவு	பதவிப் பெயர்	அங்கீகரித்த ஊழியர் எண்ணிக்கை	உள்ளோர் எண்ணிக்கை	வெற்றிடங்கள்
சிரேட்ட முகாமைத்துவம்				
HM	பணிப்பாளர் நாயகம்	1	1	-
HM	பணிப்பாளர்	5	-	5
முகாமைத்துவம்				
MM	பிரதிப்பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர்	45	37	8
கனிஷ்ட முகாமைத்துவம்				
JM	நிர்வாக உத்தியோகத்தர்	2	-	2
	முறைமை நிர்வாகி	1	-	1
	நிதி உத்தியோகத்தர்	1	1	-
	திட்டமிடல் உத்தியோகத்தர்	1	-	1
இணை அலுவலர்கள்				
ASS.O	அபிவிருத்தி உத்தியோகத்தர்	55	38	17
	திட்டமிடல் உத்தியோகத்தர்	1	-	1
	உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர்	1	-	1
முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்)				
MA - Tech	போக்குவரத்து உதவியாளர்	1	1	-
	செயலாளர்	1	1	-
	புத்தகக் காப்பாளர்	4	1	3
	வன்பொருள் மற்றும் வலையமைப்பாக்க வினைஞர்	1	1	-
	தொழில்நுட்ப வினைஞர் (கட்புல/செவிப்புல)	1	-	1
முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பமல்லாத)				
MA - NonTech	முகாமைத்துவ உதவியாளர்	220	153	67
ஆரம்ப (வினைஞர்)				
PL - Skilled	சாரதி	38	25	13
ஆரம்ப (வினைஞர் அல்லாத)				
PL - Non Skilled	அலுவலக உதவியாளர்	42	79	15

2018.12.31ஆந் திகதியில் பணியாளர் குழாம் பகுப்பாய்வு


சதவீதம்

பணியாளர் குழாத்தின் ஆண்/ பெண் பகுப்பாய்வு

ஆண் -170


பெண் - 115

கூட்டுத்தொகை - 285




வயதுப் பகுப்பாய்வு

வயதுப் பிரிவு	ஊழியர் எண்ணிக்கை	சதவீதம்
56 - 60	53	19%
51 - 55	45	16%
46 - 50	34	12%
41 - 45	55	1%
36 - 40	54	19%
31 - 35	33	11%
30 இற்கு குறைவான	11	4%
கூட்டுத்தொகை	285	100%



சேவைக் காலத்திற்கணங்க பகுப்பாய்வு

வருடங்கள்	ஊழியர் எண்ணிக்கை	சதவீதம்
30 இற்கு மேல்	49	2%
26 - 30	27	14%
21 - 25	24	23%
16 - 20	10	8%
15 இற்கு குறைவான	175	53%
கூட்டுத்தொகை	285	100%



2017ஆம் ஆண்டில் ஓய்வுபெறல், இறத்தல் மற்றும் பதவிவிலகல்

ஆண்- 09

பெண்- 08

கூட்டுத்தொகை - 17

ஊழியர் பயிற்சியும் கல்வி நடவடிக்கைகளும்

உலக வங்கியுடன் இணைந்த சர்வதேச நிதி நிறுவனத்தின் அனுசரணையுடன் எற்பாடு செய்யப்பட்டிருந்த Risk Based Capital பற்றிய பயிற்சி செயலமர்வில் சபை அலுவலர்கள் 18 பேர் பங்கேற்கச் செய்விக்கப்பட்டனர்.

International Water Management நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட கமத்தொழில் காப்புறுதி பற்றிய ஒருநாள் பயிற்சி செயலமர்வில் உதவிப் பணிப்பாளர் திரு. ஈ.எம்.என்.பீ. ஏக்கநாயக்கவும் அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. கே. டிக்ஷனும் பங்கேற்கச் செய்விக்கப்பட்டனர்.

இலங்கை பட்டயம்பெற்ற கணக்காளர் நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட Payee Tax and Withholding Taxes பற்றிய ஒருநாள் கருத்தரங்கில் உதவிப் பணிப்பாளர் திரு. எஸ்.எம்.யூ.ஜீ.எஸ்.கே. சுபசிங்க, உதவிப்பணிப்பாளர் திருமதி ஜெனித் வருணி மற்றும் உதவிப் பணிப்பாளர் திருமதி தினூஷா பிரியதர்ஷனீ ஆகியொர் பங்கேற்கச் செய்விக்கப்பட்டனர்.

விவசாய அபாயநேர்வு முகாமைத்துவ முறையியல்கள் என்றவகையில் சுட்டிகளை அடிப்படையாகக்கொண்ட காப்புறுதி முறையியல்களின் பாவனை மற்றும் அதன் கோட்பாடுகள் பற்றிய பயிற்சி செயலமர்வு 2018 செத்தெம்பர் மாதம் 25 ஆந் திகதி தொடக்கம் 28 ஆந் திகதி வரை கொழும்பு ஷெங்றி – லா ஹோட்டலில் நடைபெற்றதோடு அதில் சபை அலுவலர்கள் 09 பேர் பங்கேற்கச் செய்விக்கப்பட்டனர்.

New Opportunities in a Digitally Connected World – Towards "No Poverty" and "Zero Hunger"செயலமர்வு 2018 திசெம்பர் 06 ஆந் திகதி நடைபெற்றதோடு அதில் பிரதிப் பணிப்பாளர் திரு. ஐ.யூ.கே. ஹெட்டிஆரச்சியும் உதவிப் பணிப்பாளர் திருமதி டீ.கே. திசாநாயக்கவும் பங்கேற்கச் செய்விக்கப்பட்டனர்.

ஊழியர் நலனோம்பல்

சபையின் பதவியினர் குழாத்திற்காக காலையும் மாலையும் தேனீர் வழங்குவதற்கான வேலைத்திட்டமும் மருத்துவக் காப்புறுதி செயற்றிட்டமும் முந்திய வருடத்தைப்போல் இவ்வருடத்திலும் தொடர்ச்சியாக அமுலாக்கப்பட்டது. மேலும் 2018 சித்திரைப் பெருவிழா பலங்கொட, முல்கம, வட்டவலவில் அமைந்துள்ள சமனலவெவ திவிநெகும பயிற்சி நிலையத்தில் பதவியினர் குழாத்தினர் அனைவரதும் அவர்களின் குடும்ப அங்கத்தவர்களின் பங்கேற்புடனும் 2018 ஏப்பிறல் மாதம் 27 ஆந் திகதி நடாத்தப்பட்டது.

பெறுகை மற்றும் போக்குவரத்துத் துறை

வழங்கல் பிரிவு

சபை மூலமாக அமுலாக்கப்படுகின்ற காப்புறுதி செயற்றிட்டங்களுடன் தொடர்புடைய பற்றுச்சீட்டுப் புத்தகங்கள், மூன்றாந் தரப்பு காப்புறுதிக் காப்பீட்டுப் புத்தகங்கள், மூன்றாந் தரப்பு அட்டைகள், மூன்றாந் தரப்பு விண்ணப்பப் பத்திரங்கள், காப்புறுதி சான்றிதழ்கள், பெனர்கள், துண்டுப் பிரசுரங்கள் அச்சிடல் முறைமைசார் வழிகாட்டல்களுக்கு அமைவாக வழங்கலாளர் நிறுவனங்கள் மூலமாக மேற்கொள்ளப்பட்டன. அத்துடன் களுத்துறை மாவட்ட அலுவலகத்திற்கான மூன்றாந்தரப்பு காப்புறுதி அட்டைகள் அச்சிடல் கருவியொன்றை கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

சபையின் சாரதிகள், அலுவலக உதவியாளர்கள் பதவி வகிக்கின்ற ஊழியர்களுக்கு 2018 ஆம் ஆண்டுக்கான சீருடைகளை வழங்க இயலுமாயிற்று.

சபையின் மாவட்ட அலுவலர்களின் வரவு மற்றும் வெளியேறிச் செல்லலை குறிப்பதற்காக நேரக் குறிப்பு இயந்திரங்களை பொருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

எம்பிலிபிட்டிய, இரத்தினபுரி மற்றும் காலி மாவட்ட அலுவலகங்களில் காணப்பட்ட பாவனைக்கு உதவாத சேதமடைந்த அலுவலக உபகரணங்களும் தளபாடங்களும் பெறுகை செயற்பாங்கு கடைப்பிடிக்கப்பட்டு விற்றொழிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

தலைமையகத்தினதும் மாவட்ட அலுவலகங்களினதும் வேண்டுகோளுக்கிணங்க தளபாடங்கள், அலுவலக உபகரணங்கள் மற்றும் கணனி உபகரணங்கள் ஒவ்வொன்றும் அவசியத்தின்படி பெறுகைச் செயற்பாங்கினைப் பயன்படுத்தி கொள்வனவுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அலுவலக கட்டடங்கள்

சபையின் தலைமையகம் இவ்வாண்டிலும் இலக்கம் : 117, சுபத்ராராம வீதி, கங்கொடவில, நுகேகொட முகவரியில் அமைந்துள்ள கட்டடத்தில் பேணிவரப்பட்டது. சபையின் 29 பிராந்திய அலுவலகங்கள் பேணிவரப்படுவதோடு 2018 ஆம் ஆண்டில் கிளிநொச்சி மாவட்டத்தில் புதிய கட்டிடமொன்றை திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதில் சபைக்குச் சொந்தமான கட்டடங்களின் எண்ணிக்கை 06 ஆகும். ஏனைய அலுவலகங்கள் மாதாந்த வாடகை அடிப்படையில் அரச மற்றும் தனியார் கட்டடங்களில் தொடர்ந்தும் பேணிவரப்படுகின்றன.

உள்ளக கணக்காய்வுப் பிரிவு

உள்ளக கணக்காய்வுப் பிரிவு - 2018

❖ உள்ளக கணக்காய்வு பரிசோதனைகள்

2018 ஆம் ஆண்டுக்காக கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையில் அமுலாக்கப்படுகின்ற காப்புறுதி மற்றும் சமூகப் பாதுகாப்பு செயற்றிட்டங்களுக்காக அந்தந்த பிரிவுகள் மற்றும் மாவட்ட அலுவலகங்களுக்கிணங்க தயாரிக்கப்பட்ட வருடாந்த உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்திற்கு அமைவாக உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் அமுலாக்கப்பட்டன.

அதற்கிணங்க உள்ளக கணக்காய்வுப் பிரிவின் உதவிப் பணிப்பாளர், பதில் கணக்காய்வு உத்தியோகத்தர் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர், கணக்காய்வுப் பயிலுனர் அலுவலரொருவரின் சேவையும் பெறப்பட்டு 2018 ஆம் ஆண்டுக்கான 27 உள்ளக கணக்காய்வு பரீட்சிப்புகள் தலைமையகத்தின் ஒவ்வொரு பிரிவு மற்றும் புவியியல் மட்டத்தில் வியாபித்துள்ள 27 மாவட்ட அலுவலகங்களை அடிப்படையாகக்கொண்டு மேற்கொள்ளப்பட்டன.

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறதி சபைக்காக நிலவுகின்ற அபாயநேர்வினை முகாமைத்துவம் செய்யும் நோக்கத்தை முதன்மையாகக்கொண்டு ஒவ்வொரு பிரிவு மற்றும் மாவட்ட அலுவலகங்களின் பணிகளை வினைத்திறனுடையதாகவும் செயல்விளைவுமிக்கதாகவும் ஈடேற்றுவதற்காக அமுலாக்கப்பட்டுள்ள உள்ளக கட்டுப்பாட்டு முறைகளின் அளவுசார்தன்மை, திட்பநுட்பத்தன்மை மற்றும் அவற்றின் செயற்பாட்டினை மதிப்பீடு செய்வதற்காக கீழேயுள்ள ஒவ்வொரு துறையினதும் கீழ் உள்ளக கணக்காய்வு பரீட்சிப்புகள் திட்டமிடப்பட்டு அமுலாக்கப்பட்டன.

நிருவாகப் பிரிவு உள்ளடங்கத்தக்கதாக தொழில் இடைநிறுத்தத்திற்கு இலக்காகியுள்ள திரு. டெரன்ஸ் வருஷவிதானவிடமிருந்து அறவிடப்படவேண்டிய வட்டியையும் தண்டப்பணத்தையம் கணிப்பிடுதல்,தொழில் இடைநிறுத்தத்திற்கு இலக்காகியுள்ள திரு. கே. ஹீன்பண்டாரவிடமிருந்து அறவிடப்படவேண்டிய வட்டியையும் தண்டப்பணத்தையும் கணிப்பிடுதல், கடமையில் ஈடுபட்டிருந்தவேளையில் விபத்துக்குள்ளாகிய திரு. இந்துநில் ஜயசூரியவினதும் திரு. டபிள்யு. கமகேவினதும் மருத்துவ சிகிச்சை உதவிகளை வழங்குவதற்கான விதப்புரைகளை வழங்கல், அலுவலக வாடகை செலுத்துதல் பற்றிய பரீட்சித்தல்கள் – 2017 , வெளிக்கள அலுவலர் திரு. ரஞ்சித் கதுருகமுவவுக்கு சம்பள ஏற்றம் செலுத்துதல் பற்றி பரீட்சித்தல், புத்தளம் மாவட்ட அலுவலகத்தின் திரு. பீ. பிரியங்கரவிடம் கையளிக்கப்பட்ட கடமைகளை முறைப்படி ஈடேற்றாமை தொடர்பாக பரீட்சித்தல், வருடாந்த சம்பள ஏற்றங்களை

செலுத்துதலை பரீட்சித்தல் ஆகிய துறைகளை உள்ளடக்கத்தக்கதாக கணக்காய்வுப் பரீட்சித்தல்கள் மேற்கொள்ளப்பட்டன.

நிதிப் பிரிவின் நடவடிக்கைகளுடன் தொடர்புடையதாக களுத்துறை மாவட்ட அலுவலக நிருவாகக் கணக்கு, அம்பாறை மாவட்ட அலுவலக சேகரித்தல் கணக்கினை பரீட்சித்தல், கால்நடைக் காப்புறுதிசெயற்றிட்டம் மற்றும் கடற்றொழிலாளர் ஒய்வூதியத் திட்டம் சம்பந்தமான வங்கி இணக்கக்கூற்றுகளை பரீட்சித்தல், இறப்பு மற்றும் ஏலாமை ஓய்வூதியக் கணக்கின் நிருவாகக் கணக்கு மற்றும் வங்கி இணக்க கூற்றுகளை பரீட்சித்தல், கட்டாய பயிர்க் காப்புறுதி செயற்றிட்டத்தின் தவணைப்பண அறவீடு பற்றிய பரீட்சித்தல் , 2018.12.31 ஆந் திகதியில் சில்லறைக் காசுமீதி பற்றி பற்றி பரீட்சித்தல் ஆகிய துறைகள் தொடர்பான கணக்காய்வு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

காப்புறுதிப் பிரிவின் செயற்பாடுகளுடன் தொடர்புடையதாக கால்நடைக் காப்புறுதி இழப்பீடு செலுத்துதல் பரீட்சித்தல்கள்–கண்டி மாவட்ட அலுவலகம், மூன்றாந்தரப்பு காப்புறுதி செயற்றிட்டத்தை அமுலாக்குதல் – காலி மற்றும் நெறிப்படுத்தல் பிரிவின் செயற்பாடுகளை உள்ளடக்கத்தக்கதாக செயலாற்றுகை பரிசீலனை 2017 மற்றும் மாற்றப்பட்ட பிரயாணச்செலவு பரீட்சிப்புகள் ஆகிய பரிசோதிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

கமக்காரர் ஒய்வூதியப் பிரிவுடன் தொடர்புடையதாக , கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டத்துடன் தொடர்புடையதாக ஓய்வூதியம் செலுத்துதல் பற்றிய பரீட்சிப்புகள், மோசடியான முறையிலும் அநீதியான முறையிலும் ஓய்வூதியம் பெற்றுக்கொண்டமை பற்றிய பரீட்சிப்பு – திருமதி கே. ஞானவதீ (அநுராதபுரம்) ஆகிய கணக்காய்வு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மாவட்ட அலுவலக பணிகளை பரீட்சித்தலின் கீழ் கண்டி, கொழும்பு, இரத்தினபுரி ஆகிய மாவட்ட அலுவலகங்களின் அலுவல்கள் பரீட்சிக்கப்பட்டன.

கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம், கமத்தொழில் அமைச்சு மற்றும் பகிரங்க தொழில்முயற்சிகள் திணைக்களத்துடனான இணைப்பாக்க நடவடிக்கைகளை பேணிவருவதல் உள்ளக கணக்காய்வுப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டது.

❖ **<u>கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை நடாத்துதல்</u>**

2018ஆம் ஆண்டுடன் தொடர்புடையதாக கணக்காய்வு முகாமைத்துவக் குழு 04 கூட்டங்களை நடாத்தியுள்ளதோடு கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையின் கணக்காய்வு முகாமைத்துவக் குழு கீழே குறிப்பிடப்பட்ட மூன்று பணிப்பாளர் சபை உறுப்பினர்களை உள்ளடக்கியதாக காணப்பட்டது.

திருமதி சம்பா பாலசூரிய - குழுத் தலைவர் – பணிப்பாளர் –பகிரங்க தொழில்முயற்சிகள் திணைக்களம்

திரு. பீ.எஸ். கே. ஆர். வீரக்கோன் – குழு அங்கத்தவர் – மேலதிக செயலாளர் – கமத்தொழில் அமைச்சு

திரு. டீ.வீ. பந்துலசேன – குழு அங்கத்தவர் – ஆணையாளர் நாயகம் – கமநல அபிவிருத்தி திணைக்களம்

உள்ளகக் கணக்காய்வாளர் - கமத்தொழில் அமைச்சு

வருடாந்த உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் மற்றும் உள்ளக கணக்காய்வுப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வு பரீட்சிப்பு அறிக்கைகளின் மீளாய்வு, அரசாங்க கணக்காய்வு ஐயவினாக்களின் மீளாய்வு, நிதிசார் அறிக்கைகளுடன் தொடர்புடைய கணக்காய்வாளர் அறிக்கைகளை மீளாய்வுசெய்தல் என்பவை கடந்த கணக்காய்வு முகாமைத்துவ குழுக் கூட்டத்தொடர்களில் மேற்கொள்ளப்பட்டன.

திட்டமிடல் பிரிவு

திட்டமிடல் பிரிவு – 2018

திட்டமிடல் பிரிவு கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையின் நோக்கு மற்றும் அரும்பணிக்கிணங்க பயணஞ்செய்து, சபையின் அனைத்துப் பிரிவுகளுடனும் இணைப்பாக்கம் மேற்கொண்டு நோக்கங்களையும் இலக்குகளையும் அடைய அவசியமான திட்டங்களை தயாரித்தல், கருத்திட்டங்களையும் செயற்றிட்டங்களையும் திட்டமிடுதல், தரவுகளையும் புள்ளிவிபரங்களையும் காலக்கிரமப்படி திரட்டுதல், பகுப்பாய்வு செய்தல், ஊகங்களையும் விதப்புரைகளையும் சமர்ப்பித்தல் , ஆராய்ச்சி அலுவல்களை மேற்கொள்ளல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டது.

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை ஊடாக அமுலாக்க எதிர்பார்க்கின்ற எதிர்கால நிகழ்ச்சித்திட்டங்களை உள்ளடக்கிய கூட்டுத் திட்டம், செயற்பாட்டுத் திட்டத்திற்கிணங்க அனைத்து தாபனம்சார் திட்டங்களையும் வகுத்தல் போன்றவற்றையும் அந்த திட்டங்களை அமுலாக்குகையில் தோன்றுகின்ற அனைத்துவிதமான அவசியப்பாடுகளை நிறைவுசெய்துகொள்ளல் போன்ற பிரமாண்டமான செயற்பொறுப்பு திட்டமிடல் பிரிவு மூலமாக ஈடேற்றப்பட்டு வருகின்றது.

மேலும், சபையின் ஏனைய பிரிவுகளுடன் சிறப்பான இணைப்பாக்கத்தைப் பேணிவந்து வரிசை அமைச்சான கமத்தொழில் அமைச்சு, நிதி அமைச்சு, தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு என்பவற்றை முதன்மையாகக்கொண்டு ஏனைய அமைச்சுகள் மற்றும் நிறுவனங்களுடன் இணைப்பாக்கம் செய்தல் , அந்தந்த அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களுக்காக வழங்கவேண்டிய மாதாந்த , காலாண்டு மற்றும் வருடாந்த முன்னேற்ற அறிக்கைகளையும் ஏனைய அறிக்கைகளையும் தயாரித்தல் போன்றவற்றை திட்டமிடல் பிரிவு மேற்கொள்கின்றது.

இதற்கு மேலதிகமாக திட்டமிடல் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்ற முதன்மைஇடம் வகிக்கின்ற பிரதான செயற்பொறுப்பாக அமைவது உலக வங்கியுடன் இணைந்த சர்வதேச நிதிக் கம்பெனியின் (IFC) தொழில்நுட்ப உதவியுடன், சுட்டிகளை அடிப்படையாகக்கொண்ட காப்புறுதித் திட்டமொன்றை அறிமுகஞ் செய்வதற்கான கருத்திட்டத்தை (கருத்திட்ட இலக்கம் – 600663) திட்டமிடுவதாகும். இக்கருத்திட்டத்தின் பிரதான குறிக்கோளாக அமைவது கமத்தொழில் காப்புறுதியின் பயனுறுதியை விருத்திசெய்தலும் அதன் மூலமாக இலங்கையின் விவசாயத்தை காப்புறுதிச் சந்தையில் விரிவாக்குவதாகும்.

வானிலைத் தரவுகளை பெற்றுக்கொள்வதற்கான இயலுமை, கமக்கார சமுதாயத்தின் பரம்பல் மற்றும் விவசாய பயிர்நிலங்களின் பரம்பல் ஆகிய காரணிகளுக்கிணங்க

அநுராதபுரம், குருநாகல், வவுனியா மற்றும் அம்பாறை போன்ற மாவட்டங்கள் இந்த சுட்டிகளை அடிப்படையாகக்கொண்ட காப்புறுதிக் கருத்திட்டத்தின் முன்னோடிக் கருத்திட்டத்திற்காக தெரிவுசெய்யப்பட்டன. இந்த முன்னோடிக் கருத்திட்டத்திற்காக தெரிவுசெய்யப்பட்ட மாவட்ட அலுவலகங்களின் பணியாளர் குழாத்தையும் கமத்தொழில் திணைக்களம், கமநல அபிவிருத்தித் திணைக்களம் ஆகிய திணைக்களங்களின் சம்பந்தப்பட்ட விடயத்திற்குப் பொறுப்பான அலுவலர்களையும் இணைத்துக்கொண்டு தகவல்களை பரிமாற்றிக்கொள்ளல் மற்றும் சுட்டிகளை அடிப்படையாகக்கொண்ட காப்புறுதித்திட்டம் பற்றிய அறிவினை விருத்திசெய்வதற்காக 2018 ஆம் ஆண்டிலும் செயலமர்வுகளையும் பயிற்சித்தொடர்களையும் நடாத்த ஒழுங்குகள் செய்யப்பட்டன. இன்றளவில் வவுனியா மாவட்டத்திலும் மகாவலி H வலயத்திலும் நிகழ்ச்சித்திட்டங்கள் ஆராய்ச்சி மட்டத்தில் வெற்றிகரமாக அமுலாக்கப்பட்டு வருகின்றன.

மேலும் கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையின் திட்டமிடல் பிரிவு வளிமண்டவியல் திணைக்களத்துடன் கூட்டாக வானிலைத் தகவல்களை பரிமாற்றிக்கொள்வதையும் மேற்கொண்டு வருகின்றது.

கடற்றொழிலாளர் ஓய்வூதிய , சமூகப் பாதுகாப்பு நலன்பதித் திட்டம்

2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப் பாய்வுக் கூற்று

	2018.12.31	2017.12.31	2016.12.31
	ரூ.சதம்	ரூ. சதம்	ரூ. சதம்
தொழிற்பாட்டுச் செயற்பாடுகளிலிருந்து காசுப் பாய்வு			
நிகர மிகை	-291,321,410.37	-238,237,436.38	-243,736,538.85
சீராக்கம்			
	19,636.00	12,402.50	5,169.00
தேய்மானம்			
முந்திய ஆண்டுக்கான சீராக்கம்	-	-	-
பணிக்கொடை மீதான பற்றாக்குறை/இலாபம்	241,154.46	241,154,46	-357,981.89
ஓய்வூதிய பொறுப்புகள் அதிகரித்தமை	293,327,806.02	266.887,723.71	246,515,112.73
ஓய்வூதிய பணிக்கொடைக்கான ஏற்பாடுகள்	149,926.31	149,926.31	166,594.56
தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னரான தொழிற்பாட்டு மிகை	**2,417,112.42**	**29,053,770.60**	**2,592,355.55**
சரக்குத் தொக்குப் பண்டங்களின் (ஏற்றம்)/வீழ்ச்சி	15,376.45	15,123.45	-161.79
வருமதிகள் (ஏற்றம்)/வீழ்ச்சி	50,682,594.48	-12,894,779.16	-21,188,373.24
பிற சென்மதிகள் (ஏற்றம்)/வீழ்ச்சி	6,885,815.72	6,623,427.38	4,891,578.09
அட்டுறு செவினம் (ஏற்றம்)/வீழ்ச்சி	-109,995.00	-138,328.00	250,000.00
	57,473,791.65	**-6,394,556.33**	**-16,046,956.94**
தொழிற்பாட்டுச் செயற்பாடுகளிலிருந்து பிறப்பித்த பணம்	59,890,904.07	22,659,214.27	-13,454,601.39
இளைப்பாற்றுப் பணிக்கொடை – செலுத்தப்பட்டவை	-	-	-
தொழிற்பாட்டுச் செயற்பாடுகளிலிருந்து நிகர காசுப்பாய்வு	**59,890,904.07**	**22,659,214.27**	**-13,454,601.39**
முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்து நிகர காசுப்பாய்வு			
நிதிச் சாதனங்கள்	-60,671,746.77	-23,816,345.86	11,466,898.74
ஆதனம், சாதனம், பொறித்தொகுதி		-144,670.00	-
குழுமக் காப்புறுதி திட்டத்திற்கான பங்களிப்புத் தொகை	1,775,740.00	1,766,725.00	1,761,650.00
ஆண்டில் நன்மைகள்	-430,000.00	-463,800.00	-529,000.00
முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்து நிகர காசுப்பாய்வு	**-59,326,006.77**	**-22,658,090.86**	**12,699,548.74**
நிதிச் செயற்பாடுகளிலிருந்து காசுப்பாய்வு			
நிதிச் செயற்பாடுகளிலிருந்து நிகர காசுப்பாய்வு		-	-
காசு மற்றும் காசுக்கு சமமானவற்றின் அதிகரிப்பு / (வீழ்ச்சி)	**564,897.30**	1,123.41	**-755,052.65**
ஆண்டின் தொடக்கத்தில் காசு மற்றும் வங்கி மீதி	662,381.59	661,258.18	1,416,310.83
	1,227,278.89	**662,381.59**	**661,258.18**
ஆண்டின் இறுதியில் காசு மற்றும் வங்கி மீதி			
வங்கியில் உள்ள காசு	**1,227,278.89**	**662,381.59**	**661,258.18**

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை

கடற்றொழிலாளர் ஓய்வூதிய சமூகப் பாதுகாப்பு நலன்புரித்திட்டம்

2018 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான

முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள்

1. பொதுவான கொள்கைகள்

1.1 அறிக்கையிடும்அமைப்பாண்மை

இலங்கை கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை (இதனக்த்துப் பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1999 இன் 20 ஆம் இலக்கமுடைய சட்டத்தினால் கூட்டிணைக்கப்பட்டதோடு நுகேகொட, கங்கொடவில, சுபத்ராராமவீதி, இலக்கம்117 என்ற முகவரியில் அமைந்துள்ளது. கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித்திட்டமானது 1990 இன் 23 ஆம் இலக்கமுடைய கடற்றொழிலாளர்ர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித்திட்டச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாகவே தாபிக்கப்பெற்றுள்ளது.

1.2 பிரதான செயற்பாடுகளும் தொழிற்பாடுகளின் தன்மையும்

கடற்றொழிலாளர்களுக்கான கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித்திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்.

1.3 தயாரித்தலுக்கானஅடிப்படை

(அ) இசைவுக்கூற்று

இந்த நிதிக்கூற்றுகள் நிதிநிலைமை பற்றிய கூற்று, விரிவான வருமானக்கூற்று, நிதியங்கள் மற்றும் ஒதுக்கங்களிலான மாற்றங்கள் பற்றிய கூற்று, காசுப்பாய்வுக்கூற்று மற்றும் நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகளை உள்ளடக்குகின்றன. இந்த கணக்குக்கூற்றுகள் இலங்கை பட்டயக்கணக்காளர்கள் நிறுவகத்தினால் வெளியிடப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்களின் (இ.நி.அ.நி. /இ.க.நி) பிரகாரம் தயாரிக்கப்பட்டுள்ளன.

(ஆ) மதிப்பீட்டுக்கான அடிப்படை

ஏற்புடைய குறிப்புக்களின் கீழ் நியாயமான பெறுமதி சம்பந்தமாக பொருத்தமான வெளிப்படுத்தல்கள் செய்யப்படுகின்றவிடத்து நீங்கலாக நிதிசார் கூற்றுகள் வரலாற்றுக் கிரய மரபின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

(இ) ஒப்பீட்டுரீதியான தகவல்கள்

நடப்புக் காலப்பகுதியில் நிதிக்கூற்றுகளை விளங்கிக்கொள்வதை மேம்படுத்தும் பொருட்டும் இடைப்பட்ட காலப்பகுதியின் ஒப்பீட்டுரீதியான தன்மையை முன்னேற்றும் பொருட்டும்நிதிக்கூற்றுகளில் அறிக்கையிடப்பட்டுள்ள அனைத்துப் பணத்தொகைகளுக்காகவும் முந்திய காலப்பகுதியுடன் தொடர்புடைய அளவுசார்ரீதியான, தொடர்உரைசார்ந்த மற்றும் விபரமானதுமான ஒப்பீட்டுரீதியான தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

நிதிக்கூற்றுகளின் வகையினங்களை சமர்ப்பித்தல் அல்லது வகைப்படுத்தல் திருத்தியமைக்கப்பட்டுள்ளவிடத்து மிகச்சிறந்த சமர்ப்பணத்தை மேற்கொள்ளும் பொருட்டு நடப்பு வருடத்துடன் அமைந்தொழுகத்தக்கவகையில் ஒப்பீட்டுரீதியான பணத்தொகைகளும் மீள்வகைப்படுத்தப்பட்டுள்ளன.

(ஈ) இயங்கிவருகின்ற மற்றும் சமர்ப்பித்தலிலான புழக்கத்திலுள்ள பணஅலகு

இந்த நிதிக்கூற்றுகள் சபையின் இயங்கி வருகின்ற மற்றும் புழக்கத்திலுள்ள பணஅலகான இலங்கைரூபாவில் தரப்பட்டுள்ளன.

(உ)மதிப்பீடு மற்றும் தீர்மானங்களின் பயன்பாடு

இ.நி.அ.நி. /இ.க.நி.க்கு அமைவாக நிதிக்கூற்றுகளைத் தயாரித்தலும் சமர்ப்பித்தலும், கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் அறிக்கை செய்யப்பட்ட சொத்துக்கள், பொறுப்புகள், வருமானம் மற்றும் செலவின அளவுகளின் பாவனைமீது தாக்கமேற்படுத்துகின்ற தீர்மானங்கள், மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்களை மேற்கொள்ள முகாமைத்துவத்தை பணிக்கின்றன. ஈடுபடுத்தப்பட்ட இந்த மதிப்பீடுகளும் தீர்மானங்களும் உண்மையான பெறுபேறுகளைவிட மாறக்கூடும்.

மதிப்பீடுகளும் அடிப்படையாகக் கொள்ளப்பட்ட எடுகோள்களும் தொடர்ச்சியான அடிப்படையில் மீளாய்வு செய்யப்படுகின்றன. கணக்கீட்டு

மதிப்பீடுகளை திருத்தியமைத்தல் சம்பந்தப்பட்ட காலப்பகுதிக்குள் மாத்திரம் தாக்கமேற்படுத்துமாயின் அந்த மதிப்பீடுகள் திருத்தியமைக்கப்பட்டுள்ள காலப்பகுதிக்குள் ஏற்றுக்கொள்ளப்படுவதோடு நடப்பு மற்றும் ஏதேனும் எதிர்கால காலவரையறைகளுக்கு அத்தகைய திருத்தியமைத்தல் தாக்கமேற்படுத்துமாயின் திருத்தியமைத்த காலவரையறைக்கும் எதிர்கால காலவரையறைகளுக்கும் ஏற்பிசைவு செய்யப்படும்.

நிதிக்கூற்றுகளில் ஏற்பிசைவு செய்யப்பட்டுள்ள அளவுகளின்பேரில் மிகவும் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய கணக்கீட்டுக் கொள்கைகளை பாவிக்கையில் மதிப்பீடு, நிச்சமற்றதன்மை மற்றும் தீர்வுக்கட்டமான தீர்மானங்கள் பற்றிய கருத்திற்கொள்ளப்படவேண்டிய துறைகள் பற்றிய தகவல்கள் நிதிக்கூற்றுகளுக்பான குறிப்புகளில் அடங்கியுள்ளன.

(ஊ) நடப்புத் தொழில் முயற்சி (இடையறா வழியுரிமை)

நடப்புத் தொழில்முயற்சி என்ற வகையில் இடையறாவழியுரிமை கொண்டதாக நிலவ சபை வசமுள்ள ஆற்றல் பற்றி முகாமைத்துவம் மதிப்பீடொன்றினை செய்துள்ளது. எனவே நடப்புத் தொழில்முயற்சி அடிப்படையில் நிதிசார் கூற்றுகள் இடையறாமல் தயாரிக்கப்படுகின்றன.

2 சொத்துக்களும் அவற்றின் மதிப்பீட்டு அடிப்படையும்

2.1 ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதி

(அ) ஏற்பிசைவு செய்தலும் கணிப்பீடுசெய்தலும்

ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதி வகையினங்கள் சேர்க்கப்பட்ட தேய்மானம் மற்றும் சேதங்களும் நட்டங்களும் கழிக்கப்பட்டு கிரயத்தில் அல்லது மதிப்பீட்டுக்கிணங்கவே வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதிகள் அனைத்தும் திரண்ட தேய்மானம் அல்லது பெறுமதியின் ஒட்டுமொத்த சேதமடைதல்களைக் கழித்து கிரயத்திலேயே அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதனமொன்றின் முக்கியமான ஆக்கக்கூறுகள் தனிவேறாக இனங்காணப்பட்டு தேய்மானம்

கழிக்கப்படுகின்றது. ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதிகளின் கணிசமான பகுதிகள் ஒரு காலப்பகுதிக்குள் மீள்நிறுவப்படவேண்டிய அவசியமேற்படுமிடத்து மீள்நிறுவப்பட்ட பகுதியை ஏற்பிசைவு செய்தலிலிருந்து நீக்கி புதியபகுதி அதன் பயனுள்ள ஆயுட்காலம் மற்றும் தேய்மானம் கொண்டதாக அமைப்பாண்மையால் ஏற்பிசைவு செய்யப்படுகின்றது. ஏனைய அனைத்துவிதமான திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்புக்கிரயம் உறப்பட்ட செலவினமாக வருமானக்கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றது.

ரூ. 686,080.42 வரலாற்றுக் கிரயத்தைக்கொண்ட முழுமையாக தேய்மானம் கழிக்கப்பட்டசொத்துக்கள் ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதிகளில் அடக்கப்பட்டுள்ளன.

(ஆ) கிரயம்

ஆதனம், சாதனம் மற்றும் பொறித்தொகுதிகளின் கிரயமானது அவற்றின் கொள்வனவு விலையையும் சம்பந்தப்பட்ட ஆதனத்தை அதன் எதிர்பார்த்த பாவனைக்காக இயங்கும்நிலைக்கு கொண்டுவருவதற்கான ஏதேனும் நேரடியாக உறப்பட்ட கிரயத்தையும் உள்ளடக்குகின்றது.

சொத்துக்களின் ஈட்டல் கொள்திறனை தொடர்ச்சியாக பேணிவர அல்லது மேம்படுத்தும்பொருட்டு நிரந்தரமான தன்மையுடைத்தான சொத்துக்களைக் கொள்ளல், விரிவாக்கல் மற்றும் முன்னேற்றகரமாக்குவதற்காக உறப்பட்ட அடுத்தடுத்து வருகின்ற செலவுகள் மூலதன செலவுகளாக கருதப்படுகின்றன.

பிரதான பரிசோதித்தல்களை உள்ளடக்கிய தனிவேறாக கணக்குப் பதியப்பட்டுள்ள ஆதனம், சாதனம் அல்லது பொறித்தொகுதி வகையினத்தை மீள்நிறுவும் பொருட்டு உறப்பட்ட செலவு மூலதனமயமாக்கப்படும். அப்பகுதியில் உள்ளடங்கிய பொருளாதார நன்மைகள் சபைக்கு பாய்ந்து வருவதற்கான இயலுமை நிலவின் மற்றும் வகையினத்தின் கிரயம் நம்பகத்தன்மை கொண்டதாக அளவிட இயலுமாயின் மாத்திரமே ஏனைய அடுத்தடுத்த செலவினங்கள் மூலமதனமயமாக்கப்படும்.

(ஈ) தேய்மானம்

எளிய வழிமுறையின் அடிப்படையில் கீழே காட்டப்பட்டுள்ள வருடாந்த வீதங்களில் அச்சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலத்தில் அந்த அளவுகளை

பதிவேடுகளிலிருந்து அகற்றும்பொருட்டு தேய்மானம் விபரமான வருமானக்கூற்றில் செலவினமாக காட்டப்படுகின்றது.

அலுவலக உபகரணங்கள்	10%
தளபாடங்கள் மற்றும் பொருத்திகள்	10%
நலன்புரிச் சாதனங்கள்	10%
கணனி	20%

2.2 அருவச்சொத்துக்கள்

சொத்துக்களுக்கு உடைமையாக்கத்தக்க எதிர்கால பொருளாதார நன்மைகள் நிறுவனத்தை நோக்கி பாய்ந்து வரக்கூடிய நிலைமைகள் இருக்குமாயின் மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமம் இ.க.நி.-38 அருவச்சொத்துக்களின் பிரகாரம் சொத்தின் கிரயத்தை நம்பத்தக்க வகையில் அளவிட இயலுமாயின் அருவச்சொத்துக்களாக ஏற்பிசைவு செய்யப்படும். அதற்கிணங்க இச்சொத்துக்கள் திரண்ட இலதாக்கல் அல்லது ஏதேனும் திரண்ட சேதங்கள் கழிக்கப்பட்டு நிதிக்கூற்றுகளில் காட்டப்படுகின்றன.

கணினி மென்பொருள்கள் எளியநேர்கோட்டு அடிப்டையில் 5 வருட காலப்பகுதி பூராவிலும் மதிப்பிறக்கம் செய்யப்படும்.

2.3 சரக்குத் தொக்குகள்

சரக்குத் தொக்குகள் ஆகக்குறைந்த கிரயத்திலும் நிகர தேறிய பெறுமதியிலுமே மதிப்பீடுசெய்யப்பட்டுள்ளன. நிகர தேறிய பெறுமதி என்பது பொதுவான தொழில்முயற்சிப் பணிகளில் மதிப்பீடு செய்யப்பட்ட பூர்த்திசெய்தல் மற்றும் விற்பனைச் செலவுகளைக் குறைத்த பின்னர் மதிப்பீடுசெய்யப்பட்ட விற்பனை விலையாகும். இந்த கிரயத்தில் கையிருப்பு பண்டங்களைக் கொள்வனவுசெய்தல் மற்றும் அவை தற்போது இருக்கின்ற இடத்திற்கும் நிலைமைக்கும் கொண்டுவருவதற்காக உறப்பட்ட செலவுகளும் அடங்குகின்றன.

2.4 நிதிசார் சொத்துக்கள்

இ.க.நி .3 9இல் விடயப்பரப்பில் நிதிசார் சொத்துக்கள் பொருத்தமான வகையில் இலாபம் அல்லது நட்டம், கடனும் வருமதிகளும், முதிர்ச்சி வரை தடுத்துவைக்கப்பட்டுள்ள முதலீடுகள், விற்பனை செய்யப்படவுள்ள நிதிசார்சொத்துக்கள் அல்லது எதிர்கால இழப்புக்காப்பாக பெயரிடப்பட்ட

பெறுதிக் கருவிகள் ஊடாக நியாயமான பெறுமதிக்கு நிதிசார் சொத்துக்களாக வகைப்படுத்தப்படும்.

தனது நிதிசார் சொத்துக்களின் அடிப்படை ஏற்பிசைவு செய்தலின்பேரில் பணிப்பாளர் சபையானது அவற்றின் வகைப்படுத்தலை தீர்மானிக்கின்றது.

நிதிசார் சொத்துக்கள் அனைத்தும் தொடக்கத்தில் நியாயமான பெறுமதி நேர்க்கணியமாகவும் இலாபம் அல்லது நட்டம் மூலமாகசொத்துக்கள் நியாயமான பெறுமதியாக அமையாத சந்தர்ப்பங்களில் நேரடி உடைமையாக்கத்தக்க கொடுக்கல் வாங்கல்கள் கிரயத்திற்கும் தொடக்கத்தில் ஏற்பிசைவு செய்யப்படும்.

கடன் மற்றும் வருமதிகளும் வைப்புக்களும் அவை தொடங்கப்பட்ட தினத்தில் ஏற்பிசைவு செய்யப்படும். ஏனைய நிதிசார்சொத்துக்கள் அனைத்தும் (இலாபம் மற்றும் நட்டத்தினூடாக நியாயமான பெறுமதிக்கு குறிப்பிட்டுத்தெரிவிக்கப்பட்டுள்ள சொத்துக்களை உள்ளிட்டதாக) அளிப்புப் பத்திரத்தின் உடன்படிக்கை ஏற்பாடுகளுக்கு சபை ஒரு தரப்பினராக அமைந்த வர்த்தக தினத்திற்கே தொடக்கத்தில் ஏற்பிசைவு செய்யப்படும்.

ஏதேனும் சொத்தொன்றிலிருந்து காசுப்பாய்வுகள் மீதுள்ள உடன்படிக்கை செய்யப்பட்ட உரிமை நிறைவடைகையில் அல்லது நிதிசார் சொத்தின் உரித்துவத்தின் அனைத்துவிதமான அபாயநேர்வுகளும் வெகுமதிகளும் கணிசமான அளவில் கையளிக்கப்பட்டவிடத்து கொடுக்கல் வாங்கலொன்றின் நிதிசார் சொத்துக்களின் மீதுஉடன்படிக்கை செய்யப்பட்ட காசுப்பாய்வினை பெற்றுக்கொள்வதற்குரிய உரிமையானது அது கையளிக்கப்படுகின்ற வேளையில் சபையின் நிதிசார் சொத்துக்கள் ஏற்பிசைவு செய்யப்படுதலை நீக்கும். கையளிக்கப்பட்ட நிதிசார் சொத்தொன்றில் சபையினால் உருவாக்கப்பட்ட அல்லது தடுத்துவைக்கப்பட்ட ஏதேனும் கடப்பாடு தனிவேறான சொத்தாக அல்லது பொறுப்பாக ஏற்பிசைவுசெய்யப்படும்.

நிதிசார்சொத்துக்களும் பொறுப்புக்களும் எதிரீடு செய்யப்படுவதோடு நிதி அளவினை எதிரீடுசெய்ய சபைக்கு சட்டமுறையான உரிமை உள்ளவிடத்தும் தேறிய அடிப்படையில் செலவு மீளளிப்பு செய்ய அல்லது சொத்துக்களை தேறவைத்து பொறுப்பினை சமாந்தரமாக செலுத்தித்தீர்க்க கருதப்படின் மாத்திரம் தேறிய பணஅளவு நிதிநிலைமை பற்றிய கூற்றில் சமர்ப்பிக்கப்படும். சபையின் நிதிசார் சொத்துக்களில் காசு மற்றும் குறுங்கால முதலீடுகளும் வர்த்தக மற்றும் பிற வருமதிகளும் உள்ளடங்கும்.

(அ) இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயமான பெறுமதிக்கு நிதிசார்சொத்துக்கள்

இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயமானபெறுமதிக்கு நிதிசார்சொத்துக்களில் வர்த்தகத்திற்காக தடுத்துவைக்கப்படுகின்ற நிதிசார்சொத்துக்களும் இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயமான பெறுமதிக்கு ஆரம்ப ஏற்பிசைவு செய்தலின்பேரில் பெயர் குறிக்கப்பட்ட நிதிசார் சொத்துக்களும் உள்ளடக்கப்படும். நிதிசார் சொத்துக்கள் கிட்டிய நடப்பு விற்பனை அல்லது மீள்கொள்வனவுப் பணிக்காகக் கொள்ளப்பட்டிருப்பின் அவை வர்த்தகத்திற்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளவையாக வகைப்படுத்தப்படும்.

இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக நியாயமான பெறுமதிக்கு நிதிசார் சொத்துக்கள் விபரமான வருமானக் கூற்றில் நிதிசார் வருமானத்தில் அல்லது நிதிசார் செலவில் ஏற்பிசைவு செய்யப்பட்ட நியாயமான பெறுமதியின் மாற்றங்களைக் கொண்டதாக நியாயமான பெறுமதியில் நிதிசார் நிலைமை பற்றிய கூற்றில் காட்டப்படுகின்றன.

(ஆ) கடனும் வருமதியானவையும்

கடனும் வருமதியானவையும் முனைப்பான சந்தையொன்றில் விலை மட்டங்கள் சமர்ப்பிக்கப்பட்டிராத நிலையான மற்றும் திட்டவட்டமான செலுத்துதல்களைக்கொண்ட பெறுதிகளற்ற நிதிசார்பொறுப்புக்களாகும். ஆரம்பக் கணிப்பீட்டின் பின்னர்அத்தகைய நிதிசார்சொத்துக்கள் சேதம் கழிக்கப்பட்டு அடுத்தடுத்ததாக மதிப்பிறக்கம் செய்யப்பட்ட கிரயத்திற்கிணங்க கணிப்பீடு செய்யப்படும். கொள்ளப்பட்ட வேளையில் ஏதேனும் தள்ளுபடி அல்லது மதிப்பிறக்கம் செய்யப்பட்ட மற்றும் பயனுறுதிமிக்க வட்டிவழிமுறையின் உள்டங்கிய பகுதியான கட்டணம் அல்லது கிரயத்தைக் கருத்திற்கொண்டே மதிப்பிறக்கம் செய்யப்பட்ட கிரயம் கணிப்பீடுசெய்யப்படும். பயனுறுதிமிக்க வட்டிவழிமுறை விபரமான வருமானக் கூற்றின் நிதிசார் வருமானத்தில் உள்ளடக்கப்படும்.சேதம் காரணமாக தோன்றுகின்ற நட்டங்கள் நிதிக்கிரயத்தின் விபரமான வருமானக்கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படும்.

வர்த்தக வருமதிகள், ஊழியர் கடன், வைப்புகள், முற்பணங்கள், பிற வருமதிகள் மற்றும் காசு மற்றும் காசுக்குச் சமமானவை என்பவற்றையே கடனும் வருமதிகளும் உள்ளடக்குகின்றன.

(இ) பருவமுதிர்வுவரை தடுத்துவைக்கப்பட்ட முதலீடுகள்

நிலையான மற்றும் திட்டவட்டமான கொடுப்பனவுகளைக்கொண்ட பெறுதிகளற்ற நிதிசார்சொத்துக்களும் நிலையான முதிர்ச்சியடைதல்களும் பருவமுதிர்வுவரை தடுத்துவைத்துக் கொள்வதற்கான ஆக்கமுறையான நோக்கமும் ஆற்றலும் சபைக்கு உள்ளவிடத்து அவை பருவமுதிர்வுவரை தடுத்துவைக்கப்பட்டவையாக கருதப்படும். ஆரம்பக் கணிப்பீட்டின் பின்னர் பருவமுதிர்வு வரை தடுத்துவைக்கப்பட்ட முதலீடுகள் சேதம் கழிக்கப்பட்டு பயனுறுதிமிக்க வட்டி வழிமுறை பயன்படுத்தப்பட்டு அடுத்தடுத்ததாக மதிப்பிறக்கம் செய்யப்பட்ட கிரயத்திற்கிணங்க கணிக்கப்படும். பயனுறுதிமிக்க வட்டிவழிமுறை மதிப்பிறக்கம் செய்தல் விபரமான வருமானக் கூற்றில் நிதிசார் வருமானத்தில் உள்ளடக்கப்படும். சேதம் காரணமாகத் தோன்றுகின்ற நட்டங்கள் நிதிசார் கிரயத்தில் விபரமான வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படும்.

அரசாங்க பிணையங்களிலும் நிலையான வைப்புக்களிலுமான முதலீடுகள் முதிர்ச்சிடையும்வரை தடுத்துவைக்கப்பட்ட முதலீடுகளின்கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

(ஈ) விற்பனைக்காக உள்ள நிதிசார் முதலீடுகள்

விற்பனைக்காக உள்ள நிதிசார் சொத்துக்கள் என்பது விற்பனைக்காக உள்ளவையென பெயர்குறிக்கப்பட்டுள்ள அல்லதுமேலே குறிப்பிட்ட ஏதேனும் நிதிசார் சொத்துக்கள் பிரிவில் வகைப்படுத்தப்பட்டிராத பெறுதிகளற்ற நிதிசார்சொத்துக்களாகும். ஆரம்ப ஏற்றுக்காள்ளலின் பின்னர் அவை நியாயமான பெறுமதிக்கு கணிப்பிடப்படுவதோடு சேதநட்டங்கள் தவிர்ந்த அதன் வித்தியாசங்கள் ஏனைய விபரமான வருமானத்தில் ஏற்பிசைவு செய்யப்படுவதோடு நிதியங்கள் மற்றும் ஒதுக்கங்களில் ஒதுக்கப்பட்டுள்ள நியாயமான பெறுமதியில் சமர்ப்பிக்கப்படும். விற்பனைக்காக உள்ள கடன் பிணையங்கள் மீதான வட்டி வருமானம் பயனுறுதிமிக்க வட்டி வழிமுறையைப் பயன்படுத்தி கணிப்பிடப்படுவதோடு இலாபத்தில் அல்லது நட்டத்தில் ஏற்பிவசவு செய்யப்படும். முதலீடொன்றினை ஏற்பிசைவு செய்வதை நீக்கியவிடத்து நிதியங்கள் மற்றும் ஒதுக்கங்களில் சேர்ந்த இலாபம் அல்லது நட்டம் இலாபம் அல்லது நட்டத்தில் மீள்வகைப்படுத்தப்படும்.
ஆரம்ப ஏற்பிசைவு செய்தலின்பேரில் விற்பனைக்காக உள்ள நிதிசார் முதலீடாக சபையானது எந்தவொரு நிதிசார் சொத்தையும் பெயர்குறிக்கவில்லை.

2.5 நிதிச்சொத்துக்களின் சேதங்கள்

ஒவ்வோர் அறிக்கையிடும் திகதியிலும் நிதிசார் சொத்துக்கள் அல்லது நிதிசார் சொத்துக்களின் குழுமம் சேதமடைந்தமைக்கான பலனால் உணரக்கூடிய சான்றுகள் உள்ளனவாவென கம்பெனி மதிப்பீடு செய்வதோடு அத்தகைய சேதம் இடம்பெற்றிருப்பின் சொத்தின் எடுத்துச்செல்லும் பெறுமதி மற்றும் மதிப்பீடு செய்யப்பட்ட எதிர்கால காசுப்பாய்வின் பெறுமதிக்கிடையிலான வித்தியாசத்தைப் பெற்றுக்காள்வதன் ஊடாக சேதத்தின் அளவு கணிப்பீடு செய்யப்படும்.

3. பொறுப்புக்களும் ஏற்பாடுகளும்

கேள்வியின்பேரில் அல்லது அறிக்கையிடும் திகதியிலிருந்து ஒரு வருடத்திற்குள் செலுத்தப்பட உள்ளவையே நிதி நிலைமை பற்றிய கூற்றின்பேரில் நடைமுறைப் பொறுப்புக்களாக வகைப்படுத்தப்பட உள்ள சொத்துக்களாக அமையும் . அறிக்கையிடும் திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள் செலுத்தப்பட வேண்டியுள்ள மீதிகளே நடைமுறையல்லாப் பொறுப்புக்களாக அமைகின்றன.

இந்த நிதியறிக்கைகளைத் தயாரிக்கையில் அறிந்த எல்லாப் பொறுப்புக்களுக்காகவும் காரணங்கள் காட்டப்பட்டுள்ளன. இறந்தகால சம்பவமொன்றின் பெறுபேறாக சபைக்கு சட்டரீதியான அல்லது உடன்பாடு ரீதியான கடப்பாடு உள்ளவிடத்தும் கடப்பாட்டினைத் தீர்ப்பதற்காக பொருளாதார நன்மைகள் வெளியே பாய்ந்துசெல்வதை அவசியப்படுத்த இடமுள்ளவிடத்தும் ஏற்பாடுகளும் பொறுப்புக்களும் ஏற்பிசைவு செய்யப்படும்.

3.1 இளைப்பாற்று நன்மைகள்

இலங்கை கணக்கீட்டு நியமம் 19 – " இளைப்பாற்று நன்மைக் கிரயம்" மற்றும் 1983 இன் 12 ஆம் இலக்கமுடைய பணிக்கொடை செலுத்துதல் சட்டத்துடன் அமைந்தொழுகக்கூடிய வகையில் அனைத்து நிரந்தர ஊழியர்களுக்காக சேவையின் முதலாவது வருடம் நிறைவடைந்ததில் இருந்து இளைப்பாற்றுப் பணிக்கொடைக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஐந்து வருட தொடர்ச்சியான சேவைக் காலம் நிறைவடைவதிலிருந்து மாத்திரமே ஊழியருக்கான பொறுப்பு தொடங்குகின்றது. பொறுப்புக்களுக்காக வெளிவாரி நிதியங்கள் வழங்கப்படுவதில்லை.

3.2 மூலதன ஒதுக்கீடுகளும் எதிர்பாரா பொறுப்புகளும்

பொருளாதார நன்மைகளை சாட்டுதல்செய்ய வாய்ப்பற்ற அல்லதுநம்பகத்தன்மையை அளவிட இயலாத நிச்சயமற்றஎதிர்கால சம்பவங்கள் அல்லது நிகழ்கால கடப்பாடுகள் மூலமாகமாத்திரம் வழியுரிமையை உறுதிப்படுத்துகின்ற உள்ளார்ந்தகடப்பாடுகளாகும்.

சபையின் மூலதன ஒதுக்கீடுகளும் எதிர்பாரா பொறுப்புக்களும் நிதிக்கூற்றுகளில் ஏற்புடைய குறிப்புகளில்வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

3.4 கமக்காரர் ஓய்வூதிய நிதியத்தின் பொறுப்புகள்

கமக்காரர் ஓய்வூதியத் நிதியத்தின் பொறுப்புகள் 2007 இல் மேற்கொள்ளப்பட்ட ஆயுட்கணிப்பு மதிப்பீட்டின் பேரில் நிகழ்கால பெறுமதிகளை அடிப்படையாகக்கொண்டு நிதிக்கூற்றுகளில் கணக்குப் பதியப்பட்டுள்ளது.

4 விபரமான வருமானக் கூற்று

4.1 வருமானம்

அ) சபையின் வருமானம் காப்புறுதி தவணைப்பணம், திறைசேரி உண்டில்கள் மற்றும் ஊழியர் கடனுக்கான வட்டி வருமானம் மற்றும் பிற வருமானங்களை பிரதிநிதித்துவம் செய்கின்றது.

ஆ) தவணைகளைச் சேகரித்ததன் மூலமாக கிடைத் தஅனைத்து வருமானமும் காசு அடிப்படையில் ஏற்பிசைவு செய்யப்பட்டுள்ளது.

4.2 வருமானத்தை ஏற்பிசைவு செய்தல்

அ) ஓய்வூதிய தவணை வருமானம் சேர்த்துக்கொள்ளப்பட்டகாலத்திற்காக ஏற்பிசைவுசெய்யப்படுகின்றது.

ஆ) மேற்படி வருமானம் அட்டுறு அடிப்படையில் அமைவதோடு ஏற்புடைய செலவுகளுடன் சீராக்கப்படுகின்றது.

இ) வட்டி வருமானம் கால அடிப்படையில் அட்டுறு நிலையடையும்.

4.3 அரசாங்கக் கொடைகளுக்கான கணக்குப் பதிவுகள்

உறப்பட்ட செலவினங்களுக்காக சபைக்குச் செலுத்தப்படுகின்ற கொடைகள் அச்செலவுகள் ஏற்பிசைவு செய்யப்பட்ட காலவரையறையில் வருமானமாக விரிவான வருமானத்தில் ஏற்பிசைவு செய்யப்படும் .சொத்தொன்றின் கிரயத்திற்காக சபைக்குச் செலுத்தப்படுகின்ற கொடைகள் சார்ந்த சொத்தின் பயனுள்ள ஆயுட்காலம் பூராவிலும் ஒழுங்குமுறையான அடிப்படையில் விரிவான வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படும்.

4.4 செலவுகள்

கடற்றொழிலாளர் ஒய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டத்தின் செயற்பாடுகளை அமுலாக்குகையிலும் மூலதனச் சொத்துக்களை வினைத்திறன்மிக்க நிலைமையில் பேணிவருவதிலும் உறப்பட்ட அனைத்துச் செலவுகளும் ஆண்டுக்கான மிகைநிலை அல்லது பற்றாக்குறையினை தீர்மானிக்கையில் அட்டுறு அடிப்படையில் வருமானத்தில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

401/4 ஆம் இலக்க அமைச்சரவைப் பத்திரம் மூலமாக கீழே காட்டப்பட்ட வீதத்தின் அடிப்படையில் ஒதுக்கப்பட்ட சபையின் நேரில் செலவுகள் பின்வருமாறு

செலவினம்	**வீதம்**
வாடகை, தொலைபேசி	5%
தபால், நீர்க்கட்டணம்	5%
மின்சாரம்	5%
தலைமையக உபகரணம்	5%
கட்டடப் பராமரிப்பு	5%
மோட்டார் வாகனப் பராமரிப்பு	3%
எரிபொருள்	2%
எழுதுபொருட்கள்	2%
சீருடைகள்	2%
பாதுகாப்பு	5%
கணினிச் செலவுகள்	5%

5. காசுப் பாய்வுக் கூற்று

இலங்கை கணக்கீட்டுக் கொள்கை 7 இன் பிரகாரம் திட்டத்தின் காசுப்பாய்வுக்கூற்று **"நேரில் முறையை"** பயன்படுத்தியே தயாரிக்கப்பட்டுள்ளது.

6. அறிக்கையிடல் தேதிக்குப் பின்னரான சம்பவங்கள்

அறிக்கையிடல் தேதிக்குப் பின்னர் இடம்பெறுகின்ற சம்பவங்களின் புலனுணர்வுசார்ந்த தன்மையைக் கருத்திற் கொண்டுள்ளதோடு அவசியமான இடங்களில் கணக்குகளில் பொருத்தமான சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

7. **சார்ந்த தரப்பினர்கொடுக்கல் வாங்கல்கள்**

கமக்காரர் ஒய்வூதியத் திட்டமும் கமத்தொழில் காப்புறுதித் திட்டமும் கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டத்தின் சார்ந்த தரப்பினர்களாக கருதப்படுகின்றன. .இந்த சார்ந்த தரப்பினருடன் மேற்கொண்ட கொடுக்கல் வாங்கல்கள் நியாயமான பெறுமதியின்கீழ் வெளிப்படுத்தப்பட்டுள்ளன . கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டம் கமக்காரர் ஒய்வூதியத் திட்டத்திற்கு ரூ .518, 000, 000பெறுமதியான கடனை வழங்கியுள்ளது.

8. **எதிர்பாரா சந்தர்ப்பங்கள்**

கிடைக்கவேண்டிய வட்டி

1996 இல் திறைசேரி உண்டியல் மீதான முதலீட்டு வட்டியை இழந்தமை தொடர்பாக இலங்கை வங்கிக்கு எதிராக சபை கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் ஒரு வழக்கினை தாக்கல் செய்துள்ளது.

வழக்கு இலக்கம்	தொகை (ரூ.)
MR 21843	1,454,670.84
MR 21844	1,172,602.46
MR 21845	2,784,657.55

மேன்முறையீட்டுக் கட்டணத்திற்கு கட்டுப்பட்டதாக தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை
கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டம்
2018.12.31 இல் நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள்

குறிப்பு-01
2018 திசெம்பர் 31 இல் ஆதனம், சாதனம் , பொறித்தொகுதி

விபரம்	அலுவலக சாதனங்கள்	நலன்புரிச் சாதனங்கள்	தளபாடம், பொருத்திகள்	கணினி	கூட்டுத்தொகை
2018 சனவரி 01 இல் கிரயம்	528,648.50	1,325.00	78,876.92	269,485.00	878,335.42
கூட்டுக: சேர்த்தவை	-	-	-	-	-
கழிக்க : விற்றொழித்தல்	-	-	-	4,540.00	-
2018திசெம்பர் 31 இல் மொத்தக் கிரயம்	**528,648.50**	**1,325.00**	**78,876.92**	**264,945.00**	**873,795.42**
தேய்மான வீதம்	10%	10%	10%	20%	
திரண்ட தேய்மானம் 2016 சனவரி 01 இல்	388,760.96	1,325.00	58,214.42	264,416.92	712,717.30
கழிக்க: விற்றொழித்தல்	-	-	-	4,540.00	4,540.00
ஆண்டுக்கான தேய்மானம்	14,792.00		2,850.00	1,994.00	19.636.00
மொத்த தேய்மானம்	**403,552.96**	**1,325.00**	**61,064.42**	**261,780.92**	**727,813.30**
நிகர பெறுமதி	**125,095.54**	**-**	**17,812.50**	**3,074.08**	**145,912.12**

ஆதனம், சாதனம், பொறித்தொகுதி என்பதில் 2018 திசெம்பர் 31 இல் ரூ. 686,080.42 பெறுமதியான வரலாற்றுக் கிரயம்கொண்ட இன்னமும் பாவனையில் உள்ள முழுமையாக தேய்மானம் செய்யப்பட்ட சொத்துக்கள் அடங்குகின்றன.

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை
கடற்றொழிலாளர் ஓய்வூதிய , சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டம்
2018.12.31 இல் நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள்

குறிப்பு 02 - கையிருப்பு	**2018.12.31**	**2017.12.31**
	ரூ.சதம்	**ரூ.சதம்**
அச்சிடல் பொருட்கள்	160,745.22	176,121.67
	160,745.22	**176,121.67**
குறிப்பு 03 - வருமதிகள்		
க.க.கா.ச. நடைமுறைக் கணக்கு	-	-
கமக்காரர் ஓய்வூதியக் கடன்	613,222,811.96	663,905,406.44
இறப்புப் பணிக்கொடை முற்பணம்	50,000.00	50,000.00
	613,272,811.96	**663,955,406.44**
குறிப்பு 04 - பருவ முதிர்வுவரை தடுத்துவைத்த நிதிச்சாதனங்கள்		
திறைசேரி உண்டியல் – இலங்கை வங்கி	95,698,669.85	35,026,923.08
	95,698,669.85	**35,026,923.08**
குறிப்பு 05- வங்கியிலுள்ள காசு		
க.இல.164790 இலங்கை வங்கி, யூனியன் பிளேஸ்	399,609.07	144,211.79
க.இல. 164795 இலங்கை வங்கி, யூனியன் பிளேஸ்	735,036.82	451,683.80
சேகரித்தல் கணக்கு	92,633.00	66,486.00
	1,227,278.89	**662,381.50**
குறிப்பு 06 - கடற்றொழிலாளர் ஓய்வூதிய நிதியம்		
முன்கொண்டுவந்த மீதி	-2,656,607,634.50	-2,418,370,198.12
கழிக்க: வருமதியான நிர்வாகச் செலவு		
ஓய்வூதியப் பொறுப்பின் நடப்புப்பெறுமதி – 2009 வரை		
முந்திய ஆண்டுக்கான சீராக்கம்	-	-
	-2,656,607,634.50	-2,418,370,198.12
ஆண்டில் சேர்த்தவை		
ஆண்டுக்கான மொத்த மிகைநிலை (பற்றாக்குறை)	-291,321,410.37	-238,237,436.38
	-2,947,929,044.87	-2,656,607,634.50
	-2,947,929,044.87	**-2,656,607,634.50**

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை
கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டம்
2018.12.31 இல் நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள்

	2018.12.31 ரூ.சதம்	2017.12.31 ரூ.சதம்
குறிப்பு 7 – இறப்புப் பணிக்கொடை		
முன்கொண்டுவந்த மீதி	25,315,774.70	24,012,849.70
கூட்டுக:		
ஆண்டுக்கான பங்களிப்புத் தொகை	1,775,740.00	1,766,725.00
கழிக்க:		
இறப்புப் பணிக்கொடை செலுத்துதல்	(430,000.00)	(463,800.00)
	(430,000.00)	(463,800.00)
	1,345,740.00	**1,302,925.00**
	26,661,514.70	**25,315,774.70**
குறிப்பு 08 - சென்மதிகள்		
சென்மதியான -ஓய்வூதியம்	2,793.8111.00	1,712,004.00
சென்மதியான – கமத்தொழில் காப்புறுதித் திட்டம்	34,353,102.71	27,780,,919.99
சென்மதியான – மீளச்செலுத்தவேண்டிய பங்களிப்புத் தொகை	32,195.00	118,413.00
சென்மதியான – இறப்பப் பணிக்கொடை	58,000.00	148,000.00
சென்மதியான – ஊக்குவிப்புப் படி	325.00	16,650.00
சென்மதியான – உதவுதொகை மீதான வட்டி மீளளிப்பு	35,219.46	175,044.00
சென்மதியான – ஊ.சே.நி./ஊ.ந.நி.	-	435,806.46
	37,272,653.17	**30,386,837.45**
குறிப்பு 9 – அட்டுறு செலவினம்		
அச்சிடல் கட்டணம்	590,000.00	515,000.00
சட்டக் கட்டணம்	17,000.00	17,000.00
கணக்காய்வுக் கட்டணத்திற்கான ஏற்பாடுகள்	1,232,702.00	1,417,697.00
	1,839,702.00	**1,949,697.00**

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை

கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டம்

2018.12.31 இல் நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள்

	2018.12.31 ரூ.சதம்	2017.12.31 ரூ.சதம்
குறிப்பு 10 - நிர்வாகச் செலவுகள்		
சம்பளமும் ஊதியமும்	2,454,758.47	2,475,351.59
ஊ.சே,நி. பங்களிப்புத் தொகை	278,793.14	245,012.38
ஊ.ந.நி. பங்களிப்புத் தொகை	69,649.20	61,203.10
மேலதிக நேரம்	-	1,947.00
விசேட படிகள்	449,034.00	438,428.00
பணிக்கொடை	149,926.31	149,926.00
எரிபொருள்	171,625.53	186,250.96
எழுது பொருட்கள்	155,980.75	119,290.82
அச்சிடல்	137,023.95	99,959.45
சட்டக் கட்டணங்கள்	401,500.00	413,500.00
பணியாளர் சீருடைகள்	6,200.43	6,157.81
வாடகை	726,273.64	641,028.51
தொலைபேசி	363,424.68	221,487.08
தபால் செலவு	120,175.93	108,487.44
நீர்க் கட்டணச் சிட்டைகள்	24.498.07	22,331.00
பாதுகாப்பு	47,997.50	38,783.15
மின்சாரம்	174,748.84	168,590.37
மோட்டார் வாகனப் பராமரிப்பு	303,568.08	419,250.72
கட்டடப் பராமரிப்பு	27,305.90	92,206.55
அலுவலக சாதனப் பராமரிப்பு	20,837.61	33,357.75
கணினிச் செலவுகள்	94,259.95	79,490.74
தேய்மானம்	19,636.00	12,402.50
கணக்காய்வுக் கட்டணம்	150,000.00	150,000.00
	6,347,217.98	**6,184.443.64**
குறிப்பு 11 – நிதிசார் கட்டணம்		
வங்கிக் கட்டணம்	-	7,540,00
பற்று வரி	-	-
	-	**7,540.00**
குறிப்பு 12- பிற வருமானம்		
இலங்கை வங்கியிலிருந்து கிடைத்த வட்டி வருமானம்	-	37,672,911.04
	-	**37,672,911.04**

எனது இலக்கம் : AGL/AAIB/ 022018/11 திகதி : 2019 மே மாதம் 30 ஆந் திகதி

தலைவர்,

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதி செயற்றிட்டத்தின் 2018 திசெம்பர் 31 ஆந் தேதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள், பிற சட்டமுறையான மற்றும் ஒழுங்குறுத்தல் அவசியப்பாடுகள் பற்றிய 2018 இன் 19 ஆம் இலக்கமுடைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 வது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை

.....

மேற்படி அறிக்கை இத்துடன் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

டபிள்யு.பீ.சீ. விக்கிரமரத்ன

கணக்காய்வாளர் தலைமையதிபதி

பிரதிகள்: (1) செயலாளர் , கமத்தொழில், கிராமிய பொருளாதார அலுவல்கள், கால்நடைவள அபிவிருத்தி, நீர்ப்பாசனம் மற்றும் கடற்றொழில் , நீரகவளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சு

(2) செயலாளர் – நிதி அமைச்சு

ஆடிட்டர் ஜெனரலின் அறிக்கைகள்

எனது இலக்கம்: AGL/AAIB/ 022018/11 திகதி : 2019 மே மாதம் 30 ஆந் திகதி

தலைவர்,

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதி செயற்றிட்டத்தின் 2018 திசெம்பர் 31 ஆந் தேதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள், பிற சட்டமுறையான மற்றும் ஒழுங்குறுத்தல் அவசியப்பாடுகள் பற்றிய 2018 இன் 19 ஆம் இலக்கமுடைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 வது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை

.....

I. நிதிக் கூற்றுகள்

I.I அபிப்பிராயம்

கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதித் திட்டத்தின் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் நிதிநிலைமை பற்றிய கூற்று மற்றும் அன்றைய திகதியில் முடிவுற்ற ஆண்டுக்கான விபரமான வருமானக் கூற்று, உரிமைப்பங்கிலான மாற்றங்கள் பற்றிய கூற்று மற்றும் அன்றைய திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுகளுடன் தொடர்புடைய குறிப்புகள், பொழிப்பாக தயாரிக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்கமுடைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தினதும் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்புரையின்கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. அரசியலமைப்பின் 154 (6) உறுப்ர்ரையின் பிரகாரம் எனது அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை எனும் பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலான தாக்கங்கள் நீங்கலாக சபையின் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் நிதி நிலைமை மற்றும் அன்றைய திகதியில் முடிவடைந்த வருடத்திற்கான அதன் நிதிச் செயற்பாடு மற்றும் காசுப் பாய்வுகள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது நான் கொண்டுள்ள அபிப்பிராயமாகும் .

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு புறம்பாக அமைதல்

(அ) நியமம் 16 இன்படி முழுமையாக தேய்மானம் செய்யப்பட்டிருந்த கிரயம் ரூ. 31,732, 585 ஆக அமைந்த 24 மோட்டார் வாகனங்கள் தொடர்ச்சியாக பாவனைக்கு எடுக்கப்பட்டு வந்தபோதிலும் மேற்படி ஊர்திகளின் பயனுள்ள ஆயுட்காலம் கருத்திற்கொள்ளப்பட்டு மீள்கணிப்பீடு செய்யப்பட்டு நிதிக் கூற்றுகளுக்கு எடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நியமம் 37 இன் 59 வது பந்தியின் பிரகாரம் முனைப்பான உதவுதொகை செலுத்துனர்களை இனங்காண்பதற்கான ஆயுட்கணிப்பு மதிப்பீடு காலஇடைவெளியில் மேற்கொள்ளப்படவேண்டியபோதிலும் அவ்வாறு செய்யாமல் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் கமக்காரர்களின் இறப்புப் பணிக்கொடை நிதியத்திற்காக ரூ. 19,853,880 நிதியேற்பாடு நிதிக்கூற்றுகளில் காட்டப்பட்டிருந்தது.

1.2.2 கணக்கீட்டு கோளாறுகள்

(அ) மஹியங்கனை, எம்பிலிபிட்டிய மற்றும் அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் பேணிவரப்படுகின்ற உத்தியோகபூர்வ இல்லங்களில் செயற்றிட்டத்திற்குச் சொந்தமான 76.6 பர்ச்சஸ் காணிப் பெறுமதி மற்றும் எம்பிலிபிட்டிய உத்தியோகபூர்வ இல்லத்தின் கட்டிடப்பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குப் பதியப்பட்டிருக்கவில்லலை.

(ஆ) 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சிலிருந்தும் கமத்தொழில் அமைச்சிலிருந்தம் கையளிக்கப்பட்ட மோட்டார் வாகனங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளில் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

1.2.3 வருமதியான மற்றும் சென்மதியான கணக்குகள்

(அ) 5 – 25 வருடங்களுக்கு இடைப்பட்ட காலத்திலிருந்து நிலவி வருகின்ற கூட்டுத்தொகை ரூ. 857,406 ஆக அமைந்த ஊழியர் கடன் மற்றும் முற்பணம் ஊழியர் பணிக்கொடையில் இருந்தோ பிணைகாரர்களிடமிருந்தோ அறவிடப்படாமல் கணக்குகளில் முன்கொண்டுவரப்படுகின்றது.

(ஆ) 5- 14 வருடங்களுக்கு இடைப்பட்ட காலமாக முன்கொண்டு வரப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூ. 708,337 ஆக அமைந்த வருமதியான சம்பளம், சம்பள முற்பணம் மற்றும் கலப்பு கடன்படுனர் மீதிகள் தீர்க்கப்படாமல் கணக்குகளில் முன்கொண்டு வரப்படுகின்றது.

(இ) 2018 ஆம் ஆண்டுடன் தொடர்புடையதாக சிறுபோகம் மற்றும் பெரும்போகத்திற்கான இழப்பீடு செலுத்துவதற்காக ரூ. 2,200,000,000 நிதியேற்பாடு பொதுதிறைசேரியிடமிருந்து அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டில் ரூ. 437,980,000 மாத்திரமே கிடைத்திருந்தது. இந்த முழுமையான பணத்தொகையும் விரிவான வருமானக் கூற்றில் வருமானமாக கணக்குப்பதியப்பட்டிருந்ததோடு எஞ்சிய தொகையான ரூ. 1,762,120,000 வருமதியான தொகையாக ஐந்தொகையில் காட்டப்பட்டிருந்தது. இந்த பணத்தொகை கணக்காய்வுத் தினம்வரை நிறுவனத்திற்கு கிடைத்திருக்கவில்லை என்பதோடு பொது திறைசேரியிடமிருந்து வழங்கப்படுவதாக உறுதிக்கடிதமொன்றும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

இந்த வருமதியான பணத்தொகை கணக்குப்பதியப்பட்டமையால் ஆண்டுக்குள் இலாபம் முந்திய வருடத்துடன் ஒப்பிடுகையில் நூற்றுக்கு 1860 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

இலங்கை கணக்காய்வுத் தரநியமங்களுக்கு (ஸ்ரீல.க.நி) அமைவாக நான் கணக்காய்வினை மேற்கொண்டேன். இந்த கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு இவ்வறிக்கையின் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிவிருத்திக்கான அடிப்படையை வழங்குவதற்காக என்னால் பெறப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதுமானதும் உசிதமானதுமென்பது எனது நம்பிக்கையாகும்.

1.3 நிதிக்கூற்றுகள் தொடர்பிலான முகாமைத்துவத்தினதும் நிருவகிக்கின்ற தரப்பினரதும் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுகளை ஸ்ரீலங்கா கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக தயாரித்தலும் நியாயமானவகையில் சமர்ப்பித்தலும் மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக தோன்றக்கூடிய பொருண்மைரீதியான பிறழ்கூற்றுகள் அற்றனவாக நிதிக்கூற்றுகளைத் தயாரிக்க இயலச்செய்விக்கும்பொருட்டு அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக்கூற்றுகளைத் தயாரிக்கையில் செயற்றிட்டங்களை தொடர்ச்சியாக பேணிவரக்கூடிய ஆற்றலை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக அமைவதோடு, முகாமைத்துவம் செயற்றிட்டத்தை ஒழித்துக்கட்ட கருதுமெனில் அல்லது வேறு மாற்றுவழி இல்லாதவிடத்து தொழிற்பாடுகளை நிறுத்த நடவடிக்கை எடுக்குமாயின் தவிர இடையறா வழியுரிமைக்கான அடிப்படையின்பேரில் கணக்குப்பதிதல் மற்றும் செயற்றிட்டத்தின் இடையறா வழியுரிமையுடன் தொடர்புடைய விடயங்களை வெளிக்கொணருதலும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

செயற்றிட்டத்தின் நிதிசார் அறிக்கையிடல் செயற்பாங்கு சம்பந்தமான பொறுப்பு நிருவகிக்கின்ற தரப்பினால் வகிக்கப்படுகின்றது.

2018 இன் 19 ஆம் இலக்கமுடைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உட்பிரிவின் பிரகாரம் செயற்றிட்டத்தின் வருடாந்த மற்றும் நடப்பு நிதிக்கூற்றுகளைத் தயாரிக்க இயலச்செய்விக்கக்கூடியதாக தனது வருமானம், செலவு, சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் பற்றி உரியவகையில் புத்தகங்களையும் அறிக்கைகளையும் பேணிவருதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு பற்றிய கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுகள் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக தோன்றுகின்ற பொருண்மைரீதியான பிறழ்கூற்றுகள் அற்றனவென்பதற்கான நியாயமான உறுதிப்படுத்தலை வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயத்தை உள்ளிட்ட கணக்காய்வாளின் அறிக்கையை வெளியிடுதல் எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தலாக அமைந்தபோதிலும் ஸ்ரீலங்கா கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்பொழுதும் பொருண்மையான பிறழ்கூற்றுகளை வெளிப்படுத்திக் கொள்கின்றது என்பதற்கான உறுதிப்படுத்தலாக அமையமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகளின்

தனியான அல்லது கூட்டான அழுத்தம் காரணமாக பொருண்மைரீதியான பிறழ்கூற்றுகள் தோன்றக்கூடுமென்பதோடு அந்த நிதிக்கூற்றுகளை அடிப்படையாகக்கொண்டு கற்றாராய்வோரால் மேற்கொள்ளப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் மீது தாக்கமேற்படுத்தக்கூடுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

என்னால் தொழில்வாண்மை தீர்ப்பளிப்புகள் மற்றும் தொழில்வாண்மை சந்தேகங்களுடன் ஸ்ரீலங்கா கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும்,

- மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுகளில் தோன்றக்கூடிய பொருண்மைரீதியான பிறழ்கூற்றுகளின் அபாயநேர்வுகளை இனங்காண்கையிலும் மதிப்பீடு செய்கையிலும் சந்தர்ப்பத்திற்கேற்றவகையில் உசிதமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலமாக மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படுகின்ற அபாயநேர்வுகளைத் தவிர்த்துக்கொள்ளவும் , போதியளவிலானதும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையாகும். பொருண்மைரீதியான பிறழ்கூற்றுகளால் நேர்கின்ற தாக்கத்தைப் பார்க்கிலும் மோசடியால் ஏற்படுகின்ற தாக்கம் பலம்பொருந்தியதாக அமைவதோடு, மறைசூழ்ச்சி, போலியாவணம் புனைதல், கருத்தொன்றிய தவிர்த்தல்கள் அல்லது உள்ளக கட்டுப்பாடுகளை தவிர்த்தல் மோசடிகள் எற்பட காரணமாக அமைகின்றன.
- சந்தர்ப்பத்திற்கேற்றவகையில் உசிதமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு செயற்றிட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடு சம்பந்தமான புரிந்துணர்வு பெறப்படுகின்றபோதிலும், உள்ளகக் கட்டுப்பாட்டின் பயனுறுதி பற்றிய அபிப்பிராயமொன்றை தெரிவிக்க கருதுவதில்லை.
- பாவிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளினதும் கணக்கீட்டு மதிப்பீடுகளினதும் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தப்பாடு மதிப்பீடு செய்யப்பட்டது.
- சம்பவங்கள் அல்லது நிலைமைகள் காரணமாக செயற்றிட்டத்தின் இடையறாத வழியுரிமை பற்றிய பொருண்மையான ஐயப்பாட்டு நிலைமைகள் உள்ளனவா என்பது சம்பந்தமாக பெறப்பட்ட கணக்காயவுச் சான்றுகளின் அடிப்படையில் கணக்கீட்டுக்காக நிறுவனத்தின் இடையறாத வழியுரிமை பற்றிய அடிப்படையை பிரயோகிப்பதன் ஏற்புடைமை தீர்மானிக்கப்பட்டது. போதியளவிலான ஐயப்பாட்டு நிலைமைகள் உள்ளதாக நான் ஊகிப்பேனாயின் நிதிக்கூற்றுகளில் அதுசம்பந்தமாக உள்ள வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் கவனஞ் செலுத்தப்படல் வேண்டுமென்பதோடு அத்தகைய வெளிப்படுத்தல்கள் போதுமானவையாக அமையாதவிடத்து எனது அபிப்பிராயம் மாற்றப்படல் வேண்டும்.

  எவ்வாறாயினும் எதிர்கால சம்பவங்கள் அல்லது நிலைமைகளின்பேரில் இடையறாத வழியுரிமை முற்றுப்பெற இயலும்.

    - வெளிப்படுத்தலை உள்ளிட்ட நிதிக்கூற்றுகளில் சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் மதிப்பீட்டுக்கு

உள்ளாக்கப்பட்டதோடு அதற்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்களையும் சம்பவங்களையும் உசிதமானதாகவும் நியாயமானவகையிலும் நிதிக்கூற்றுகளில் உள்ளடங்கிய தன்மையும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வுக் கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் பற்றி கட்டுப்படுத்துகின்ற தரப்பினர்கள் விழிப்புணர்வூட்டப்பட்டனர்.

2. பிற சட்டமுறையான மற்றும் ஒழுங்குறுத்தல் அவசியப்பாடுகள் பற்றிய அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் கீழே குறிப்பிடப்பட்ட அவசியப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்குகின்றன.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிடப்பட்ட அவசியப்பாடுகளுக்கமைவாக, எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலான தாக்கங்கள் நீங்கலாக கணக்காய்வுக்கு அவசியமான அனைத்து தகவல்களும் தெளிவுபடுத்தல்களும் என்னால் பெறப்பட்டதோடு, எனது பரீட்சிப்புகளில் புலப்படுகின்ற விதத்தில் முறையான நிதிசார் அறிக்கைளை செயற்றிட்டம் பேணி வந்திருந்தது.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (III) வது பிரிவில் குறிப்பிட்ட அவசியப்பாட்டுக்கிணங்க செயற்றிட்டத்தில் முன்வைக்கப்பட்ட நிதிக்கூற்றுகள் முந்திய வருடத்துடன் நேரொத்தாக அமைகின்றது.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (IV) வது பிரிவில் குறிப்பிட்ட அவசியப்பாட்டுக்கிணங்க , இவ்வறிக்கையின் 1.2 இன் 1.2.1 (அ),(ஆ), 1.2.2 (ஆ) , 1.2.3 (அ), (ஆ) பந்திகளில் காட்டப்பட்டுள்ள அவதானிப்புகள் நீங்கலாக முந்திய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட விதப்புரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

கடைப்பிடிக்கப்பட்ட செயல்வழிமுறைகள் மற்றும் பெறப்பட்ட சான்றுகளின்பேரிலும் பொருண்மையான விடயங்களுக்கு வரையறுக்கப்பட்ட நிலைமையில் கீழே குறிப்பிட்ட கூற்றினை விடுக்குமளவுக்கு எதுவுமே எனது கவனத்திற்கு இலக்காவில்லை.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(இ) பிரிவில் குறிப்பிட்ட அவசியப்பாட்டுக்கிணங்க

செயற்றிட்டத்தின் நிருவாகச் சபையின் எவரேனும் உறுப்பினருக்கு செயற்றிட்டம் சம்பந்தமான ஏதேனும் உடன்படிக்கை சம்பந்தமாக நேரடியாகவோ அல்லது வேறு விதமாகவோ பொதுவான தொழில்முயற்சி நிலைமைக்குப் புறம்பாக தொடர்பு உள்ளவிடத்து.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஈ) பிரிவில் குறிப்பிட்ட அவசியப்பாட்டுக்கிணங்க கீழே குறிப்பிட்ட அவதானிப்புகள் நீங்கலாக ஏதேனும் சம்பந்தப்பட்ட எழுத்திலான சட்டத்திற்கு அல்லது செயற்றிட்டத்தின் நிருவாகச் சபையினால் வெளியிடப்பட்ட பிற பொதுவான அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு அமைந்தொழுகாதவண்ணம் செயலாற்றியுள்ளமை.

சட்டங்கள்,விதிகள் /பணிப்புரைகளுக்கான தொடர்பு	**விபரம்**
(அ) 2010 மார்ச்சு 30 ஆந் திகதிய DMS/34(iii) இலக்கமுடைய முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கை	முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி வெளிக்கள கடமைகளில் ஈடுபடுகின்ற நிறுவனத்தின் நிவைவேற்று அலுவலர்களுக்காக 2009 ஆம் அண்டு தொடக்கம் நாளொன்றுக்கு ரூபா. 2500 வீதம் பிழைப்பூதியக் கொடுப்பனவு செலுத்தப்படுதல்.
(ஆ) 2015 மே மாதம் 25 ஆந் திகதிய 1 /2015 இலக்கமுடைய பகிரங்க தொழில்முயற்சிகள் சுற்றறிக்கையின் 4.2 பந்தி	உத்தியோகபூர்வ வாகன உரிமை மற்றும் போக்குவரத்து கொடுப்பனவு உரிமையற்ற பிரிவுத் தலைவர் ஒருவருக்காக மாதமொன்றுக்கு ரூ. 8,000 வீதமும் நிறைவேற்று அலுவலரொருவருக்காக மாதமொன்றுக்கு ரூ. 4,000 வீதமும் மீளாய்வாண்டிலும் முந்திய 03 வருடங்களிலும் ரூ. 3,083,490 பணத்தொகை செலுத்தப்பட்டிருந்தது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(எ) பிரிவில் குறிப்பிட்ட அவசியப்பாட்டுக்கு அமைவாக செயற்றிட்டத்தின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு அமைந்தொழுகாதவகையில் செயலாற்றியுள்ளமை

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச்சட்டத்தின் 12(ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அவசியப்பாட்டுக்கிணங்க கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்புகள் நீங்கலாக செயற்றிட்டத்தின் வளங்கள் சிக்கனமாக வினைத்திறன்மிக்கதாக மற்றும் பயனுறுதிகொண்டதாக காலப்பகுதிக்குள் ஏற்புடைய சட்டதிட்டங்களுக்கு அமைவாக பெறுகை செய்யப்படவில்லை என்பது,

(அ) மஹியங்கனை உத்தியோகபூர்வ இல்லம் மற்றும் எம்பிலிபிட்டியவில் அமைந்துள்ள உத்தியோகபூர்வ இல்லம் திருத்தியமைக்கப்படாமல் 10 -20 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக செயலற்று காணப்பட்டது.

(ஆ) கண்டி, அம்பாறை, மன்னம்பிட்டி மற்றும் மாகோ ஆகிய மாவட்டங்களில் கமத்தொழில் காப்புறுதிச் சபைக்குச் சொந்தமான மாவட்ட அலுவலகங்களை நிர்மாணிப்பதற்காக பிரதேச செயலகங்கள் ஊடாக காணிகள் கையேற்கப்பட்டிருப்பினும் மேற்படி காணிகளில் கட்டிடங்களை அமைப்பதற்காக நடவடிக்கை எடுக்காமல் அன்றைய தினத்தில் இருந்து 1 – 11 வருடகாலமாக வாடகைக்குபெறப்பட்ட கட்டிடங்களில் அலுவலகங்கள் பேணிவரப்பட்டிருந்தன.
(இ) பெறுமதி ரூ. 2,28,000 ஆக அமைந்த 2015 ஆம் ஆண்டுடன் தொடர்புடைய 50,000 இற்கு கிட்டிய கமக்காரர் பஞ்சாங்கங்கள் பகிர்ந்தளிக்கப்படாமல் குருநாகல் மாவட்ட அலுவலகத்தில் அழிவடைந்து வந்தன.

3. ஏனைய கணக்காய்வு அவதானிப்புகள்

(அ) 2018 ஏப்பிறல் 01 ஆந் திகதி தொடக்கம் 2019 மார்ச்சு 31 ஆந் திகதி வரை கட்டாயமான 6 பயிர்வகைகளுக்காக இலவசமான காப்புறுதிப் பொறுப்புக்கான உச்சமட்டக் காப்புறுதிப் பொறுப்பின் பெறுமதி ஏறக்குறைய ரூ. 5,000,000,000 ஆக அமையக்கூடுமென்ற காப்புறுதிப் பொறுப்புக்கான மறுகாப்புறுதிப் பெறுமதி ரூ. 3,500,000,000 ஆக அமைந்தபோதிலும் மத்திய வங்கி அறிக்கையை சரியாக பிரயோகிக்காமையால் காப்புறுதிப் பொறுப்பின் பெறுமதி ரூ. 7,500,000,000 எனத் தீர்மானித்து ரூ. 5,315,000,000 மறுகாப்புறுதிப் பெறுமதிக்கு நிறுவனம் இணங்கியமை காரணமாக ரூ.1,815,000,000 அதிகமாக மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மேலே குறிப்பிட்ட மறுகாப்புறுதியுடன் தொடர்புடைய உடன்படிக்கையின் பிரகாரம் ரூ. 1,185,000,000 வரை இழப்பீட்டுப் பெறுமதி சபையினால் உறப்படவும் ரூ. 1,500,000,000 இழப்பீட்டுத் தொகை தேசிய காப்புறுதி நிதியத்தினால் உறப்பட்ட பின்னர் மறுகாப்புறுதிக்குச் செல்வதற்கான உரிமை நிலவுகின்றது. மறுகாப்புறுதி தவணைப் பெறுமதியான ரூ. 675,760,000 சபையினால் செலுத்தப்படுவதன் பேரில் ரூ. 4,360,760,000 உள்நாட்டுரீதியாக இழப்பீட்டுக்காக உறப்படுகின்றது. 2019 ஏப்பிறல் 30 ஆந் திகதியளவில் 2018 சிறுபோகம் மற்றும் 2018/19 பெரும்போகத்திற்காக செலுத்தப்பட்ட மொத்த இழப்பீட்டின் பெறுமதி ரூ. 412, 617,374 ஆக அமைந்தமையால் வெளிநாட்டு மறுகாப்புறுதி தவணைப்பணமாக செலுத்திய ரூ. 473,032,000 பணத்தொகை பயனற்ற செலவாக அமைந்திருந்தது.

(இ) 2018 சனவரி 03 ஆந் திகதி தொடக்கம் 2018 மார்ச்சு 16 ஆந் திகதி வரை சபைக்கு பதிவாகிய 16,466 அழைப்புகளைப் பதிய சபையில் 43 அலுவலர்களின் நிரந்த கடமைகளுக்குப் புறம்பாக 15,587 கடமை மணித்தியாலங்களை செலவிட்டு பெற்றுக்கொண்ட கமக்காரர்களின் பெயர், பயிர்ச்சேதம், காலம், ஏக்கரளவு, பிரதேசம் மற்றும் அடையாளஅட்டை இலக்கம் என்பவை பதிவேடொன்றில் பதியப்பட்டிருப்பினும் அந்த தரவுகள் இழப்பீடு கணிப்பிடுகையில் கமக்காரர் விண்ணப்பப் பத்திரங்களுடன் ஒப்புநோக்கப்படாமையால் அதற்காக செலவிட்ட காலம் பயனற்றுப் போயிருந்தது.

(இ) 2016/2017 பெரும்போகத்திற்கான கெத்தட்ட அருண இழப்பீடாக 8,185 கமக்கார்களுக்கு செலுத்திய ரூ. 70,800,200 பணத்தொகை, கணக்கிலக்கம், கமக்காரரின் பெயர் மற்றும் அடையாள அட்டை இலக்கம் ஒத்துவராமை காரணமாக வங்கியால் நிராகரிக்கப்பட்டிருந்ததோடு அப்பணத்தொகை மீளாய்வாண்டின் இறுதிவரையலும்கூட கமக்காரர்களை இனங்கண்டு அவர்களுக்கு அறிவித்து தகவல்களைத் தேடிக்கொள்ள நிறுவனத்தினால் நடவடிக்கை எடுக்கப்படாமல் அப்பணத்தொகை தேக்கிவைக்கப்பட்டிருந்தது.

(உ) தீவு பூராவிலும் உரம் பெற்றுக்கொள்கின்ற கமக்காரர்களின் விண்ணப்பப் பத்திரங்கள் ஸ்கேன் பண்ணப்பட்டு கணினிமயப்படுத்த முறையான திட்டமிடாமல் 5 மாவட்டங்களில் மாத்திரம் 281,250 கமக்காரர் விண்ணப்பப் பத்திரங்கள் மாத்திரம் ஸ்கேன் பண்ணப்பட்டு கணினிமயப்படுத்தப்பட்டிருந்தன. 2017 ஓகத்து மாதத்தில் இருந்து 2018 யூலை வரை ரூ. 2,757,809 செலவு உறப்பட்டிருப்பினும் அந்த தரவுகள் இழப்பீடு செலுத்துகின்ற செயற்பாங்கில் பயன்படுத்தப்படாமல் இழப்பீடு கணிக்க சம்பந்தப்பட்ட மாவட்ட அலுவலகங்களுக்கு சபை அலுவல்கள் அனுப்பிவைக்கப்பட்டமையால் அந்த செலவு பயனற்ற செலவாக இனங்காணப்பட இயலும்.

(ஊ) 2016/2017 பெரும்போகத்தின்போது ஒரு கமக்காரருக்கு ரூ. 10,000 வீதம் மாத்திரம் இழப்பீடு செலுத்தவேண்டியிருப்பினும் 07 மாவட்டங்களில் ஒரே அடையாளஅட்டை இலக்கமும் ஒரே பெயரும்கொண்ட 364 கமக்காரர்களுக்கு ரூ. 3,148,600 மற்றும் 05 மாவட்டங்களில் அடையாள அட்டைகளில் வித்தியாசம் நிலவுகின்ற ஒரே பெயரைக் கொண்ட 50 கமக்காரர்களுக்கு ரூ. 432,500 பணத்தொகை சுற்றறிக்கை விதிகளுக்கு முரணாக இரண்டு தடவைகள் செலுத்தப்பட்டிருந்ததோடு மேற்படி அதிகமாக செலுத்தப்பட்ட பணத்தை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன் ஊடுபயிர்களை பயிரிட்டு சேதமடைந்த 31

குருநாகல் கமக்காரர்களுக்கு உரித்தான ரூ. 268,150 பணத்தொகையும் இற்றைவரை செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(எ) பல வருடங்களாக அங்கீகரிக்கப்பட்ட பணியாளர் குழாத்தில் நிலவுகின்ற வெற்றிடங்களுக்காக மீளாய்வாண்டில் ஆட்சேர்ப்பு செய்ய நடவடிக்கை எடுக்காமையால் 5 பணிப்பாளர் பதவிகள், 7 பிரதிப் பணிப்பாளர் பதவிகள், 2 நிர்வாக உத்தியோகத்தர் பதவிகள், 16 அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகள், 65 முகாமைத்துவ உதவியாளர் பதவிகள் மற்றும் 12 சாரதிப் பதவிகள் வெற்றிடமாக காணப்படுதல் நிறுவனத்தின் அலுவல்களுக்கு தடையாக அமைந்துள்ளபோதிலும் அந்த வெற்றிடங்களை பூர்த்திசெய்ய இற்றைவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

ஒப்பமிட்டது /டபிள்யு.பீ.சீ விக்கிரமரத்ன,
கணக்காய்வாளர் தலைமையதிபதி

எனது இலக்கம்: ஏஜீஎல்/ஈ/பாமர்ஸ்/1/18/02 திகதி : 2019 மே மாதம் 15 ஆந் திகதி

தலைவர்,

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை

கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டத்தின் 2018 திசெம்பர் 31 ஆந் தேதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள், பிற சட்டமுறையான மற்றும் ஒழுங்குறுத்தல் அவசியப்பாடுகள் பற்றிய 2018 இன் 19 ஆம் இலக்கமுடைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 வது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை

.....

1. நிதிக் கூற்றுகள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டத்தின் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் நிதிநிலைமை பற்றிய கூற்று மற்றும் அன்றைய திகதியில் முடிவுற்ற ஆண்டுக்கான விபரமான வருமானக் கூற்று, உரிமைப்பங்கிலான மாற்றங்கள் பற்றிய கூற்று மற்றும் அன்றைய திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுகளுடன் தொடர்புடைய குறிப்புகள், பொழிப்பாக தயாரிக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்கமுடைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தினதும் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்புரையின்கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. அரசியலமைப்பின் 154 (6) அரசியலமைப்பின் பிரகாரம் எனது அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை எனும் பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலான தாக்கங்கள் நீங்கலாக திட்டத்தின் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் நிதி நிலைமை மற்றும் அன்றைய திகதியில் முடிவடைந்த வருடத்திற்கான அதன் நிதிச் செயற்பாடு மற்றும் காசுப் பாய்வுகள் இங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது நான் கொண்டுள்ள அபிப்பிராயமாகும் .

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு புறம்பாக அமைதல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முழுமையாக தேய்மானம் செய்யப்பட்டிருந்த கிரயம் ரூ. 2,102,060 ஆக அமைந்த மோட்டார் வாகனமொன்று தொடர்ச்சியாக பாவனைக்கு எடுக்கப்பட்டு வந்தபோதிலும் மேற்படி ஊர்தியின் பயனுள்ள ஆயுட்காலம் கருத்திற்கொள்ளப்பட்டு மீள்கணிப்பீடு செய்யப்பட்டு நிதிக் கூற்றுகளுக்கு எடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நியமம் 20 இன் 59 வது பந்தியின் பிரகாரம் 1989 ஆம் ஆண்டுக்கு முன்னராக ஐக்கிய நாடுகளின் உணவு, விவசாயத் தாபனத்திடமிருந்து கிடைத்திருந்த ரூ. 547,885 ஆக அமைந்த மூலதனக் கொடை சம்பந்தப்பட்ட சொத்தின் பயனுறுதிமிக்க ஆயுட்காலத்தில் படிப்படியான அடிப்படையில் வருமானத்திற்கு இலதாக்கல் செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) நியமம் 37 இன் 59 வது பந்தியின் பிரகாரம் முனைப்பான உதவுதொகை செலுத்துனர்களையும் கமக்காரர் ஒய்வூதியம் பெறுனர்களின் ஓய்வூதியப் பொறுப்புக்காக ஆயுட்கணிப்பு மதிப்பீடு காலஇடைவெளியில் மேற்கொள்ளப்படவேண்டியபோதிலும் அவ்வாறு செய்யாமல் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் ஓய்வூதியப் பொறுப்பு அத்தகைய ஆயுட்கணிப்பு மதிப்பீடு செய்யப்படாமல் ரூ. 66,508,205,596 என நிதிக்கூற்றுகளில் காட்டப்பட்டிருந்தது.

1.2.2 செயற்றிட்டத்தின் இடையறா வழியுரிமை

2014 மார்ச்சு 14 ஆந் திகதிய 1853/49 இலக்கமுடைய கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டத்தின் அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையின் பிரகாரம் செலுத்துதல் மேற்கொள்ளப்பட்ட போதிலும் உதவுதொகையை அறவிடுதல் அதற்கமைவாக மேற்கொள்ளப்படாமையால் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் கமக்காரர் பங்களிப்பு முறையே ரூ. 29,381,645 மற்றும் ரூ. 24,552,961 ஆக அமைந்ததோடு ஓய்வூதியம் செலுத்துதல் முறையே ரூ. 2,616,581,105 மற்றும் ரூ. 3,059,370,767 ஆக அமைந்திருந்தது. ஓய்வூதியம் செலுத்துதல் அதிகரித்தமையால் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் முறையே ரூ. 2,520,000,000 மற்றும் 2,725,000,000 திறைசேரியிடமிருந்து கிடைத்திருந்ததோடு திறைசேரியின் பங்களிப்பு இல்லாமலேயே செயற்றிட்டத்தைப் பேணிவர இயலாத நிலைமை காணப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வுத் தரநியமங்களுக்கு (ஸ்ரீல.க.நி) அமைவாக நான் கணக்காய்வினை மேற்கொண்டேன். இந்த கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு இவ்வறிக்கையின் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிவிருத்திக்கான அடிப்படையை வழங்குவதற்காக என்னால் பெறப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதுமானதும் உசிதமானதுமென்பது எனது நம்பிக்கையாகும்.

1.3 நிதிக்கூற்றுகள் தொடர்பிலான முகாமைத்துவத்தினதும் நிருவகிக்கின்ற தரப்பினரதும் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுகளை ஸ்ரீலங்கா கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக தயாரித்தலும் நியாயமானவகையில் சமர்ப்பித்தலும் மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக தோன்றக்கூடிய பொருண்மைரீதியான பிறழ்கூற்றுகள் அற்றனவாக நிதிக்கூற்றுகளைத் தயாரிக்க இயலச்செய்விக்கும்பொருட்டு அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக்கூற்றுகளைத் தயாரிக்கையில் செயற்றிட்டத்தை தொடர்ச்சியாக பேணிவரக்கூடிய ஆற்றலை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக அமைவதோடு, முகாமைத்துவம் செயற்றிட்டத்தை ஒழித்துக்கட்ட கருதுமெனில் அல்லது வேறு மாற்றுவழி இல்லாதவிடத்து தொழிற்பாடுகளை நிறுத்த நடவடிக்கை எடுக்குமாயின் தவிர இடையறா வழியுரிமைக்கான அடிப்படையின்பேரில் கணக்குப்பதிதல் மற்றும் செயற்றிட்டத்தின் இடையறா வழியுரிமையுடன் தொடர்புடைய விடயங்களை வெளிக்கொணருதலும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

செயற்றிட்டத்தின் நிதிசார் அறிக்கையிடல் செயற்பாங்கு சம்பந்தமான பொறுப்பு நிருவகிக்கின்ற தரப்பினால் வகிக்கப்படுகின்றது.

2018 இன் 19 ஆம் இலக்கமுடைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உட்பிரிவின் பிரகாரம் செயற்றிட்டத்தின் வருடாந்த மற்றும் நடப்பு நிதிக்கூற்றுகளைத் தயாரிக்க இயலச்செய்விக்கக்கூடியதாக தனது வருமானம், செலவு, சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் பற்றி உரியவகையில் புத்தகங்களையும் அறிக்கைகளையும் பேணிவருதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு பற்றிய கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுகள் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக தோன்றுகின்ற பொருண்மைரீதியான பிறழ்கூற்றுகள் அற்றனவென்பதற்கான நியாயமான உறுதிப்படுத்தலை வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயத்தை உள்ளிட்ட கணக்காய்வாளின் அறிக்கையை வெளியிடுதல் எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தலாக அமைந்தபோதிலும் ஸ்ரீலங்கா கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்பொழுதும் பொருண்மையான பிறழ்கூற்றுகளை வெளிப்படுத்திக் கொள்கின்றது என்பதற்கான உறுதிப்படுத்தலாக அமையமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகளின் தனியான அல்லது கூட்டான அழுத்தம் காரணமாக பொருண்மைரீதியான பிறழ்கூற்றுகள் தோன்றக்கூடுமென்பதோடு அந்த நிதிக்கூற்றுகளை அடிப்படையாகக்கொண்டு கற்றாராய்வோரால் மேற்கொள்ளப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் மீது தாக்கமேற்படுத்தக்கூடுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

என்னால் தொழில்வாண்மை தீர்ப்பளிப்புகள் மற்றும் தொழில்வாண்மை சந்தேகங்களுடன் ஸ்ரீலங்கா கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும்,

- மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுகளில் தோன்றக்கூடிய பொருண்மைரீதியான பிறழ்கூற்றுகளின் அபாயநேர்வுகளை இனங்காண்கையிலும் மதிப்பீடு செய்கையிலும் சந்தர்ப்பத்திற்கேற்றவகையில் உசிதமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலமாக மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படுகின்ற அபாயநேர்வுகளைத் தவிர்த்துக்கொள்ளவும் , போதியளவிலானதும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையாகும். பொருண்மைரீதியான பிறழ்கூற்றுகளால் நேர்கின்ற தாக்கத்தைப் பார்க்கிலும் மோசடியால் ஏற்படுகின்ற தாக்கம் பலம்பொருந்தியதாக அமைவதோடு, துர்சந்தானய, போலியாவணம் புனைதல், சேத்தனாவித்த தவிர்த்தல்கள் அல்லது உள்ளக கட்டுப்பாடுகளை தவிர்த்தல் மோசடிகள் ஏற்பட காரணமாக அமைகின்றன.
- சந்தர்ப்பத்திற்கேற்றவகையில் உசிதமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு செயற்றிட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடு சம்பந்தமான புரிந்துணர்வு பெறப்படுகின்றபோதிலும், உள்ளகக் கட்டுப்பாட்டின் பயனுறுதி பற்றிய அபிப்பிராயமொன்றை தெரிவிக்க கருதுவதில்லை.
- பாவிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளினதும் கணக்கீட்டு மதிப்பீடுகளினதும் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தப்பாடு மதிப்பீடு செய்யப்பட்டது.
- சம்பவங்கள் அல்லது நிலைமைகள் காரணமாக செயற்றிட்டத்தின் இடையறாத வழியுரிமை பற்றிய பொருண்மையான நிச்சயமற்றதன்மைகள் உள்ளனவா என்பது சம்பந்தமாக பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையில் கணக்கீட்டுக்காக நிறுவனத்தின் இடையறாத வழியுரிமை பற்றிய அடிப்படையை பிரயோகிப்பதன் ஏற்புடைமை தீர்மானிக்கப்பட்டது. போதியளவிலான நிச்சயமற்றதன்மைகள் உள்ளதாக நான் ஊகிப்பேனாயின் நிதிக்கூற்றுகளில் அதுசம்பந்தமாக உள்ள வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் கவனஞ் செலுத்தப்படல் வேண்டுமென்பதோடு அத்தகைய வெளிப்படுத்தல்கள் போதுமானவையாக அமையாதவிடத்து எனது அபிப்பிராயம் விக்கரனய ஆதல் வேண்டும்.

  எவ்வாறாயினும் எதிர்கால சம்பவங்கள் அல்லது நிலைமைகளின்பேரில் இடையறாத வழியுரிமை முற்றுப்பெற இயலும்.

  - வெளிப்படுத்தலை உள்ளிட்ட நிதிக்கூற்றுகளில் சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் மதிப்பீட்டுக்கு உள்ளாக்கப்பட்டதோடு அதற்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்களையும் சம்பவங்களையும் உசிதமானதாகவும் நியாயமானவகையிலும் நிதிக்கூற்றுகளில் உள்ளடங்கிய தன்மையும் மதிப்பீடு செய்யப்பட்டது.

    எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வுக் கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் பற்றி கட்டுப்படுத்துகின்ற தரப்பினர்கள் விழிப்புணர்வூட்டப்பட்டனர்.

2. பிற சட்டமுறையான மற்றும் ஒழுங்குறுத்தல் அவசியப்பாடுகள் பற்றிய அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் கீழே குறிப்பிடப்பட்ட அவசியப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்குகின்றன.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிடப்பட்ட அவசியப்பாடுகளுக்கமைவாக, எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலான தாக்கங்கள் நீங்கலாக கணக்காய்வுக்கு அவசியமான அனைத்து தகவல்களும் தெளிவுபடுத்தல்களும் என்னால் பெறப்பட்டதோடு, எனது பரீட்சிப்புகளில் புலப்படுகின்ற விதத்தில் முறையான நிதிசார் அறிக்கைளை செயற்றிட்டம் பேணி வந்திருந்தது.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (III) வது பிரிவில் குறிப்பிட்ட அவசியப்பாட்டுக்கிணங்க செயற்றிட்டத்தில் முன்வைக்கப்பட்ட நிதிக்கூற்றுகள் முந்திய வருடத்துடன் நேரொத்தாக அமைகின்றது.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (IV) வது பிரிவில் குறிப்பிட்ட அவசியப்பாட்டுக்கிணங்க, முந்திய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட விதப்புரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

கடைப்பிடிக்கப்பட்ட செயல்வழிமுறைகள் மற்றும் பெறப்பட்ட சான்றுகளின்பேரிலும் பொருண்மையான விடயங்களுக்கு வரையறுக்கப்பட்ட நிலைமையில் கீழே குறிப்பிட்ட கூற்றினை விடுக்குமளவுக்கு எதுவுமே எனது கவனத்திற்கு இலக்காவில்லை.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (இ) பிரிவில் குறிப்பிட்ட அவசியப்பாட்டுக்கிணங்க செயற்றிட்டத்தின் நிருவாகச் சபையின் எவரேனும் உறுப்பினருக்கு செயற்றிட்டம் சம்பந்தமான ஏதேனும் உடன்படிக்கை சம்பந்தமாக நேரடியாகவோ அல்லது வேறு விதமாகவோ பொதுவான தொழில்முயற்சி நிலைமைக்குப் புறம்பாக தொடர்பு உள்ளவிடத்து.
- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஊ) பிரிவில் குறிப்பிட்ட அவசியப்பாட்டுக்கிணங்க கீழே குறிப்பிட்ட அவதானிப்புகள் நீங்கலாக ஏதேனும் சம்பந்தப்பட்ட எழுத்திலான சட்டத்திற்கு அல்லது செயற்றிட்டத்தின் நிருவாகச் சபையினால் வெளியிடப்பட்ட பிற பொதுவான அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு அமைந்தொழுகாதவண்ணம் செயலாற்றியுள்ளமை.

சட்டங்கள்,விதிகள் /பணிப்புரைகளுக்கான தொடர்பு	விபரம்
1987 இன் 12 ஆம் இலக்க கமக்காரர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டம் (அ) பிரிவுகள் 15 (2), (3)	எவரேனும் உதவுதொகை செலுத்துனருக்கு வழங்கப்பட்டுள்ள சான்றிதழின்கீழ் நன்மைகள் அற்றுப்போயுள்ள சந்தர்ப்பத்தில் அது பற்றிய அறிவித்தல் அந்த உதவுதொகை செலுத்தனருக்கு வழங்கப்படல் வேண்டும். அவ்விதமாக அறிவிக்காமை காரணமாக தவணைகளை செலுத்தாமை காரணமாக செல்லுபடியற்றதாகிய சான்றிதழொன்றை மீண்டும் புதுப்பித்துக் கொள்வதற்காக மீளாய்வாண்டில் 1606 உதவுதொகை செலுத்துனர்களுக்கு இருந்த வாய்ப்பு கைநழுவி இருந்தது.
(ஆ) பிரிவு 20	சபையின் மதியுரைக்குழு 12 உறுப்பினர்களைக் கொண்டிருக்க வேண்டுமெனினும் 2018 ஆம் ஆண்டுக்காக ஒன்பது உறுப்பினர்கள் மாத்திரமே நியமிக்கப்பட்டிருந்தனர்.

.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(எ) பிரிவில் குறிப்பிட்ட அவசியப்பாட்டுக்கு அமைவாக செயற்றிட்டத்தின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு அமைந்தொழுகாதவகையில் செயலாற்றியுள்ளமை
- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச்சட்டத்தின் 12(ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அவசியப்பாட்டுக்கிணங்க கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்புகள் நீங்கலாக செயற்றிட்டத்தின் வளங்கள் சிக்கனமாக வினைத்திறன்மிக்கதாக மற்றும் பயனுறுதிகொண்டதாக காலப்பகுதிக்குள் ஏற்புடைய சட்டதிட்டங்களுக்கு அமைவாக பெறுகைசெய்யப்படவில்லை என்பது,

  (அ) இளைப்பாறிய கமக்காரர்களுக்காக 2017 ஏப்பிறல் தொடக்கம் 2018 திசெம்பர் வரையான காலப்பகுதிக்குள் 19,283 கமக்காரர்களுக்கு உரித்தான ஓய்வூதியத்தின்

கூட்டுத்தொகை ரூ. 451,324,111 உம் 2012 – 2013 காலப்பகுதியுடன் தொடர்புடையதாக 90,573 பேருக்கு உரித்தான ரூ. 3,033,329,200 ஓய்வூதியத்தையும் இற்றைவரை செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2012 ஆம் ஆண்டின் இறுதியில் திட்டத்தின் முனைப்பான கமக்காரர்களின் எண்ணிக்கை 959,254 ஆக அமைந்ததோடு, 2012 ஆம் ஆண்டுக்குப் பின்னர் உதவுதொகை செலுத்துனர்கள் பற்றிய தகவல்கள் இற்றைப்படுத்திப் பேணிவரப்படாமையால் முனைப்பான அங்கத்தவர் எண்ணிக்கை, வருடந்தோறும் சேர்கின்ற உதவுதொகை செலுத்தனர் எண்ணிக்கை மற்றும் செலுத்தவேண்டிய சரியான ஒய்வூதியப் பெறுமதி எவ்வளவு என்பதைக் கணிப்பிட இயலாமல் போயிற்று.

ஒப்பமிட்டது /டபிள்யு.பீ.சீ விக்கிரமரத்ன,

கணக்காய்வாளர் தலைமையதிபதி

எனது இலக்கம்: ஏஜீஎல்/ஈ/ பிஸ்/1/18/02 திகதி : 2019 மே மாதம் 15 ஆந் திகதி

தலைவர்,

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை

கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டத்தின் 2018 திசெம்பர் 31 ஆந் தேதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள், பிற சட்டமுறையான மற்றும் ஒழுங்குறுத்தல் அவசியப்பாடுகள் பற்றிய 2018 இன் 19 ஆம் இலக்கமுடைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 வது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை

.....

1. நிதிக் கூற்றுகள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டத்தின் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் நிதிநிலைமை பற்றிய கூற்று மற்றும் அன்றைய திகதியில் முடிவுற்ற ஆண்டுக்கான விபரமான வருமானக் கூற்று, உரிமைப்பங்கிலான மாற்றங்கள் பற்றிய கூற்று மற்றும் அன்றைய திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுகளுடன் தொடர்புடைய குறிப்புகள், பொழிப்பாக தயாரிக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்கமுடைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தினதும் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்புரையின்கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. அரசியலமைப்பின் 154 (6) உறுப்பரையின் பிரகாரம் எனது அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை எனும் பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலான தாக்கங்கள் நீங்கலாக திட்டத்தின் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் நிதி நிலைமை மற்றும் அன்றைய திகதியில் முடிவடைந்த வருடத்திற்கான அதன் நிதிச் செயற்பாடு மற்றும் காசுப் பாய்வுகள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது நான் கொண்டுள்ள அபிப்பிராயமாகும் .

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு புறம்பாக அமைதல்

நியமம் 37 இன் 59 வது பந்தியின் பிரகாரம் முனைப்பான உதவுதொகை செலுத்துனர்களினதும் கடற்றொழிலாளர் ஒய்வூதியம் பெறுனர்களினதும் ஓய்வூதியப் பொறுப்புக்காக ஆயுட்கணிப்பு மதிப்பீடு காலஇடைவெளியில் மேற்கொள்ளப்படவேண்டியபோதிலும் அவ்வாறு செய்யாமல் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் ஓய்வூதியப் பொறுப்பு அத்தகைய ஆயுட்கணிப்பு மதிப்பீடு செய்யப்படாமல் ரூ. 3,590,887,004 என நிதிக்கூற்றுகளில் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) செயற்றிட்டத்தின் இடையறா வழியுரிமை

மீளாய்வாண்டின் இறுதி திகதியில் ஓய்வூதிய பொறுப்பு ரூ. 3,590,887,004 ஆக அமைந்ததோடு அது முந்திய வருடத்தைப் பர்க்கிலும் நூற்றுக்கு 8.9 சதவீத அதிகரிப்பாகும். 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் செயற்றிட்டத்தின் கடற்றொழிலாளர் ஒய்வூதிய திரண்ட நிதியத்தின் எதிர்மறையான நிலைமை ரூ. 2,947,927,045 வரை அதிகரித்திருந்தமையால் செயற்றிட்டத்தின் இடையறா வழியுரிமை மீது பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தி இருந்தது. எதிர்வரும் ஆண்டுகளில் இந்நிலைமை மேலும் வளர்ச்சியடையக் கூடுமென்பதால் செயற்றிட்டத்தை மறுசீரமைப்புக்குள்ளாக்கி நிதிசார் சாத்தியநிலை கொண்டதாக அமுலாக்க நிறுவனம் இற்றைவரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

இலங்கை கணக்காய்வுத் தரநியமங்களுக்கு (ஸ்ரீல.க.நி) அமைவாக நான் கணக்காய்வினை மேற்கொண்டேன். இந்த கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு இவ்வறிக்கையின் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிவிருத்திக்கான அடிப்படையை வழங்குவதற்காக என்னால் பெறப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதுமானதும் உசிதமானதுமென்பது எனது நம்பிக்கையாகும்.

1.3 நிதிக்கூற்றுகள் தொடர்பிலான முகாமைத்துவத்தினதும் நிருவகிக்கின்ற தரப்பினரதும் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுகளை ஸ்ரீலங்கா கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக தயாரித்தலும் நியாயமானவகையில் சமர்ப்பித்தலும் மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக தோன்றக்கூடிய பொருண்மைரீதியான பிறழ்கூற்றுகள் அற்றனவாக நிதிக்கூற்றுகளைத் தயாரிக்க இயலச்செய்விக்கும்பொருட்டு அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக்கூற்றுகளைத் தயாரிக்கையில் செயற்றிட்டத்தை தொடர்ச்சியாக பேணிவரக்கூடிய ஆற்றலை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக அமைவதோடு, முகாமைத்துவம் செயற்றிட்டத்தை ஒழித்துக்கட்ட கருதுமெனில் அல்லது வேறு மாற்றுவழி இல்லாதவிடத்து தொழிற்பாடுகளை நிறுத்த நடவடிக்கை எடுக்குமாயின் தவிர இடையறா வழியுரிமைக்கான அடிப்படையின்பேரில் கணக்குப்பதிதல் மற்றும் செயற்றிட்டத்தின் இடையறா வழியுரிமையுடன் தொடர்புடைய விடயங்களை வெளிக்கொணருதலும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

செயற்றிட்டத்தின் நிதிசார் அறிக்கையிடல் செயற்பாங்கு சம்பந்தமான பொறுப்பு நிருவகிக்கின்ற தரப்பினால் வகிக்கப்படுகின்றது.

2018 இன் 19 ஆம் இலக்கமுடைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உட்பிரிவின் பிரகாரம் செயற்றிட்டத்தின் வருடாந்த மற்றும் நடப்பு நிதிக்கூற்றுகளைத் தயாரிக்க இயலச்செய்விக்கக்கூடியதாக தனது வருமானம், செலவு, சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் பற்றி உரியவகையில் புத்தகங்களையும் அறிக்கைகளையும் பேணிவருதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு பற்றிய கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுகள் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக தோன்றுகின்ற பொருண்மைமீதியான பிறழ்கூற்றுகள் அற்றனவென்பதற்கான நியாயமான உறுதிப்படுத்தலை வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயத்தை உள்ளிட்ட கணக்காய்வாளின் அறிக்கையை வெளியிடுதல் எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தலாக அமைந்தபோதிலும் ஸ்ரீலங்கா கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்பொழுதும் பொருண்மையான பிறழ்கூற்றுகளை வெளிப்படுத்திக் கொள்கின்றது என்பதற்கான உறுதிப்படுத்தலாக அமையமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகளின் தனியான அல்லது கூட்டான அழுத்தம் காரணமாக பொருண்மைமீதியான பிறழ்கூற்றுகள் தோன்றக்கூடுமென்பதோடு அந்த நிதிக்கூற்றுகளை அடிப்படையாகக்கொண்டு கற்றாராய்வோரால் மேற்கொள்ளப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் மீது தாக்கமேற்படுத்தக்கூடுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

என்னால் தொழில்வாண்மை தீர்ப்பளிப்புகள் மற்றும் தொழில்வாண்மை சந்தேகங்களுடன் ஸ்ரீலங்கா கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும்,

- மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுகளில் தோன்றக்கூடிய பொருண்மைமீதியான பிறழ்கூற்றுகளின் அபாயநேர்வுகளை இனங்காண்கையிலும் மதிப்பீடு செய்கையிலும் சந்தர்ப்பத்திற்கேற்றவகையில் உசிதமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலமாக மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படுகின்ற அபாயநேர்வுகளைத் தவிர்த்துக்கொள்ளவும் , போதியளவிலானதும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையாகும். பொருண்மைமீதியான பிறழ்கூற்றுகளால் நேர்கின்ற தாக்கத்தைப் பார்க்கிலும் மோசடியால் ஏற்படுகின்ற தாக்கம் பலம்பொருந்தியதாக அமைவதோடு, துர்சந்தானய, போலியாவணம் புனைதல், சேத்தனாவித்த தவிர்த்தல்கள் அல்லது உள்ளக கட்டுப்பாடுகளை தவிர்த்தல் மோசடிகள் எற்பட காரணமாக அமைகின்றன.
- சந்தர்ப்பத்திற்கேற்றவகையில் உசிதமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு செயற்றிட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடு சம்பந்தமான புரிந்துணர்வு பெறப்படுகின்றபோதிலும், உள்ளகக் கட்டுப்பாட்டின் பயனுறுதி பற்றிய அபிப்பிராயமொன்றை தெரிவிக்க கருதுவதில்லை.

- பாவிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளினதும் கணக்கீட்டு மதிப்பீடுகளினதும் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தப்பாடு மதிப்பீடு செய்யப்பட்டது.
- சம்பவங்கள் அல்லது நிலைமைகள் காரணமாக செயற்றிட்டத்தின் இடையறாத வழியுரிமை பற்றிய பொருண்மையான நிச்சயமற்றதன்மைகள் உள்ளனவா என்பது சம்பந்தமாக பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையில் கணக்கீட்டுக்காக நிறுவனத்தின் இடையறாத வழியுரிமை பற்றிய அடிப்படையை பிரயோகிப்பதன் ஏற்புடைமை தீர்மானிக்கப்பட்டது. போதியளவிலான நிச்சயமற்றதன்மைகள் உள்ளதாக நான் ஊகிப்பேனாயின் நிதிக்கூற்றுகளில் அதுசம்பந்தமாக உள்ள வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் கவனஞ் செலுத்தப்படல் வேண்டுமென்பதோடு அத்தகைய வெளிப்படுத்தல்கள் போதுமானவையாக அமையாதவிடத்து எனது அபிப்பிராயம் விக்கரனய ஆதல் வேண்டும்.

  எவ்வாறாயினும் எதிர்கால சம்பவங்கள் அல்லது நிலைமைகளின்பேரில் இடையறாத வழியுரிமை முற்றுப்பெற இயலும்.

  - வெளிப்படுத்தலை உள்ளிட்ட நிதிக்கூற்றுகளில் சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் மதிப்பீட்டுக்கு உள்ளாக்கப்பட்டதோடு அதற்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்களையும் சம்பவங்களையும் உசிதமானதாகவும் நியாயமானவகையிலும் நிதிக்கூற்றுகளில் உள்ளடங்கிய தன்மையும் மதிப்பீடு செய்யப்பட்டது.

    எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வுக் கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் பற்றி கட்டுப்படுத்துகின்ற தரப்பினர்கள் விழிப்புணர்வூட்டப்பட்டனர்.

2. பிற சட்டமுறையான மற்றும் ஒழுங்குறுத்தல் அவசியப்பாடுகள் பற்றிய அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் கீழே குறிப்பிடப்பட்ட அவசியப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்குகின்றன.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிடப்பட்ட அவசியப்பாடுகளுக்கமைவாக, எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலான தாக்கங்கள் நீங்கலாக கணக்காய்வுக்கு அவசியமான அனைத்து தகவல்களும் தெளிவுபடுத்தல்களும் என்னால் பெறப்பட்டதோடு, எனது பரீட்சிப்புகளில் புலப்படுகின்ற விதத்தில் முறையான நிதிசார் அறிக்கைளை செயற்றிட்டம் பேணி வந்திருந்தது.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (III) வது பிரிவில் குறிப்பிட்ட அவசியப்பாட்டுக்கிணங்க

செயற்றிட்டத்தில் முன்வைக்கப்பட்ட நிதிக்கூற்றுகள் முந்திய வருடத்துடன் நேரொத்தாக அமைகின்றது.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ)

(IV) வது பிரிவில் குறிப்பிட்ட அவசியப்பாட்டுக்கிணங்க, முந்திய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட விதப்புரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

கடைப்பிடிக்கப்பட்ட செயல்வழிமுறைகள் மற்றும் பெறப்பட்ட சான்றுகளின்பேரிலும் பொருண்மையான விடயங்களுக்கு வரையறுக்கப்பட்ட நிலைமையில் கீழே குறிப்பிட்ட கூற்றினை விடுக்குமளவுக்கு எதுவுமே எனது கவனத்திற்கு இலக்காவில்லை.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (இ) பிரிவில் குறிப்பிட்ட அவசியப்பாட்டுக்கிணங்க செயற்றிட்டத்தின் நிருவாகச் சபையின் எவரேனும் உறுப்பினருக்கு செயற்றிட்டம் சம்பந்தமான ஏதேனும் உடன்படிக்கை சம்பந்தமாக நேரடியாகவோ அல்லது வேறு விதமாகவோ பொதுவான தொழில்முயற்சி நிலைமைக்குப் புறம்பாக தொடர்பு உள்ளவிடத்து.
- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஈ) பிரிவில் குறிப்பிட்ட அவசியப்பாட்டுக்கிணங்க கீழே குறிப்பிட்ட அவதானிப்புகள் நீங்கலாக ஏதேனும் சம்பந்தப்பட்ட எழுத்திலான சட்டத்திற்கு அல்லது செயற்றிட்டத்தின் நிருவாகச் சபையினால் வெளியிடப்பட்ட பிற பொதுவான அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு அமைந்தொழுகாதவண்ணம் செயலாற்றியுள்ளமை.

சட்டங்கள்,விதிகள் /பணிப்புரைகளுக்கான தொடர்பு	**விபரம்**
1990 இன் 23 ஆம் இலக்க கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டம் (அ) பிரிவு 16	எவரேனும் உதவுதொகை செலுத்துனருக்கு வழங்கப்பட்டுள்ள சான்றிதழின்கீழ் நன்மைகள் அற்றுப்போயுள்ள சந்தர்ப்பத்தில் அது பற்றிய அறிவித்தல் அந்த உதவுதொகை செலுத்துனருக்கு வழங்கப்படல் வேண்டும். அவ்விதமாக அறிவிக்காமை காரணமாக தவணைகளை செலுத்தாமை காரணமாக செல்லுபடியற்றதாகிய சான்றிதழொன்றை மீண்டும்

(ஆ) பிரிவு 20	புதுப்பித்துக் கொள்வதற்காக மீளாய்வாண்டில் 35 உதவுதொகை செலுத்துனர்களுக்கு இருந்த வாய்ப்பு கைநழுவி இருந்தது. சபையின் மதியுரைக்குழு 12 உறுப்பினர்களைக் கொண்டிருக்க வேண்டுமெனினும் 2018 ஆம் ஆண்டுக்காக ஒன்பது உறுப்பினர்கள் மாத்திரமே நியமிக்கப்பட்டிருந்தனர்.

.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(எ) பிரிவில் குறிப்பிட்ட அவசியப்பாட்டுக்கு அமைவாக செயற்றிட்டத்தின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு அமைந்தொழுகாதவகையில் செயலாற்றியுள்ளமை
- 2018 இன் 19 அம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அவசியப்பாட்டுக்கிணங்க கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்புகள் நீங்கலாக செயற்றிட்டத்தின் வளங்கள் சிக்கனமாக வினைத்திறன்மிக்கதாக மற்றும் பயனுறுதிகொண்டதாக காலப்பகுதிக்குள் ஏற்புடைய சட்டதிட்டங்களுக்கு அமைவாக பெறுகைசெய்யப்படவில்லை என்பது,

2011 சனவரி தொடக்கம் இளைப்பாறிய 95 மீனவர்களுக்கு 2017 சனவரி தொடக்கம் ஒய்வூதியம் கணிப்பிடப்பட்டு செலுத்தப்பட்டிருப்பினும் 2011 சனவரி தொடக்கம் 2016 திசெம்பர் வரையான காலப்பகுதியுடன் தொடர்புடையதாக செலுத்தவேண்டிய ரூ. 2,793,811 அளவிலான ஓய்வூதியத்தை மீளாய்வாண்டின் இறுதிவரை செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

ஒப்பமிட்டது /டபிள்யு.பீ.சீ விக்கிரமரத்ன,
கணக்காய்வாளர் தலைமையதிபதி

කෘෂිකාර්මික හා ඉඟිජන රක්ෂණ මණ්ඩලය
கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை
AGRICULTURAL AND AGRARIAN INSURANCE BOARD

තැපැල
தபால்
Postal
இல. 117, ගොඩගම පාර, ගංගොඩවිල, නුගේගොඩ
117, Kotte Road, Gangodawila, Nugegoda

මගේ අංකය
எமது இலக்கம்
My Ref. No.
2017 /4/ 6/ඉග්/ර /2

ඔබේ අංකය
உமது இலக்கம்
Your Ref. No

දිනය
திகதி
Date
2019.05.23

கணக்காய்வு அத்தியட்சகர்,

கணக்காய்வாளர் தலைமையதிபதி திணைக்களம்,

கொழும்பு.

கணக்காய்வு ஐயவினாக்களுக்கான விடையளித்தல்

கமத்தொழில் மற்றும் கமநலக்காப்புறுதித் திட்டத்தின் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவுற்ற வருடத்திற்கான நிதிக் கூற்றுகள் பற்றிய 2019 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 வது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமையதிபதி அறிக்கைக்கான பதில்களை இத்தால் சமர்ப்பிக்கிறேன்.

ஒப்பம் :
சுமித் வர்ணகுலசூரிய,
தலைவர்,
கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை

தொலைபேசி
Telephones
011-2812571
011-2812572
011-2812573

தலைவர்
Chairman

பணிப்பாளர் நாயகம்
Director General
011-5732397
011-2812574

தலைமை அலுவலகம்
Head Office
011-5384000

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதி செயற்றிட்டத்தின் 2018 திசெம்பர் 31 ஆந் தேதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் பற்றிய 2018 இன் 19 ஆம் இலக்கமுடைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 வது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கைக்கான பதில்கள்

.....

I. நிதிக் கூற்றுகள்

I.I அபிப்பிராயம்

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

1.3 ஸ்ரீலங்கா கணக்கீட்டு நியமங்களுக்கு புறம்பானதாக அமைதல்

(அ) நிலையான சொத்துக்களை கணக்குப் பதிவதிலான சபையின் கொள்கையாக அமைவது கிரயப் பெறுமானத்தின் அடிப்படையில் சொத்துக்களை கணக்குப் பதிதலாகும். அதற்கிணங்க நிலையான சொத்துக்கள் அனைத்தும் முறைப்படி கணக்குப் பதியப்பட்டுள்ளதோடு இன்றளவில் அனைத்து வாகனங்களுக்கும் நடப்புச் சந்தைப் பெறுமானத்தின் அடிப்படையில் மதிப்பீட்டு அறிக்கை பெறப்பட்டுள்ளதோடு எதிர்வரும் ஆண்டுகளில் சம்பந்தப்பட்ட சீராக்கல்களை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது.

(ஆ) கமக்காரர்களின் இறப்பு மற்றும் ஏலாமை பணிக்கொடைகளை செலுத்துவதற்கான ஒதுக்கீடுகள் கமக்காரர் ஒய்வூதிய நிதியத்தினால் கணிப்பிடப்பட்டு கமக்காரர்களின் இறப்பு மற்றும் ஏலாமை பணிக்கொடை நிதியத்தில் வரவுவைக்கப்படுவதோடு அதனோடு சம்பந்தப்பட்ட தகவல்கள் 43 ஆம் இலக்கமுடைய நாளேட்டுக் குறிப்பு மூலமாக வெளிக்கொணரப்பட்டுள்ளன.

1.2.2 <u>கணக்கீட்டுக் கோளாறுகள்</u>

மகியங்கனை, எம்பிலிபிட்டிய மற்றும் அநுராதபுரம் ஆகிய உத்தியோகபூர்வ இல்லக் காணிகளின் பெறுமதி மற்றும் எம்பிலிபிட்டிய உத்தியோகபூர்வ இல்லத்தின் பெறுமதியைக் கணிப்பீடுசெய்தல் சம்பந்தமாக இன்றளவில் மாவட்டப் பிரதி/ உதவிப் பணிப்பாளர்களுடன் பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டு அவசியமான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு, துரிதமாக அந்நடவடிக்கைகளை நிறைவுசெய்து கணக்குப்பதிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

(ஆ) இந்த ஊர்திகளை எதிர்வரும் ஆண்டில் ஆதனம், சாதனம், பொறித்தொகுதியின் கீழ் கணக்குகளில் உள்ளடக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதோடு இன்றளவில் மதிப்பீட்டறிக்கை பெறப்பட்டுள்ளது.

1.2.3 <u>வருமதியான மற்றும் சென்மதியான கணக்குகள்</u>

(அ) சபையின் சேவையிலிருந்து விலகிச்சென்ற/இளைப்பாறிய அலுவலர்களின் செலுத்துதல் தவறவிடப்பட்டுள்ள கடன் மீதிகள் மற்றும் வட்டியை அறவிட்டுக் கொள்வதற்காக கோரிக்கைக்கடிதம் அனுப்பப்பட்டுள்ளதோடு அதற்கிணங்க

செலுத்துதல் மேற்கொள்ளப்படாவிட்டால் எதிர்காலத்தில் அதற்காக நீதிமன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளன. மேலும், இவ்விதமாக தவறவிடப்பட்ட பெரும்பாலான அலுவலர்களின் கடன்மீதிகள் அவர்கள் ஊழியர் சேமலாப நிதியைப் பெற்றுக்கொள்வதற்கு அவசியமான ஆவணங்களை பெற்றுக்கொள்வதற்காக சபைக்கு வருகின்ற தருணங்களில் அறிவிட்டுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதோடு ஏனைய அலுவலர்களின் கடன்மீதிகள் பிணைகாரர்கள் ஊடாக அறவிட்டுக்கொள்வதற்காள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(ஆ) சபைக்கு பல்வேறு தரப்பினர்களிடமிருந்து வருமதியான ரூ. 708,337 -/இந்த மீதியை சம்பந்தப்பட்ட தரப்பினர்களிடமிருந்து அறவிட்டுக்கொள்வதற்காக ஏற்கெனவே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(இ) 2018 ஆம் ஆண்டுடன் தொடர்புடைய அரச வரவு செலவு ஒதுக்கீட்டின்போது கட்டாயப் பயிர்க்காப்புறுதிக்கான தவணைப்பணமாக 2,200 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டதோடு இந்த தவணைப்பணத்திலிருந்து சபைக்கு கிடைத்திராத தவணைப் பணத்தொகையான ரூ:1,762,120,000-/பணத்தொகையைக் கோரி பொதுதிறைசேரிக்கு வேண்டுகோள் கடிதம் அனுப்பப்பட்டுள்ளதோடு, அப்பணத்தைப் பெற்றுக்கொள்ள அவசியமான விழிப்புணர்வூட்டுதல் பொதுதிறைசேரிக்கு அனுப்பப்பட்டுள்ளது. பொது திறைசேரியினால் எதிர்காலத்தில் அப்பணத்தொகையை வழங்க நடவடிக்கை எடுப்பதாக வாய்மூமான அறிவித்தல் வழங்கப்பட்டது.

1.3 <u>நிதிக் கூற்றுகள் பற்றிய முகாமைத்துவத்தினதும் ஆளுந் தரப்பினரதும் பொறுப்பு.</u>

1.4 <u>நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்பு.</u>

2. <u>பிற சட்ட மற்றும் ஒழுங்குறுத்தல் அவசியப்பாடுகள் பற்றிய அறிக்கை</u>

(அ) சபையின் தொழில்முயற்சித் தன்மைக்கிணங்க பெரும்பாலும் வெளிக்கள கடமைகளில் ஈடுபட நேரிடுவதோடு வெள்ளப்பெருக்கு, வறட்சி மற்றும் பிற அனர்த்தங்கள் இடம்பெறுகின்ற சந்தர்ப்பங்களில் சபையின் நிறைவேற்று அலுவலர்களுக்கு வேறு மாவட்டங்களில் கடமைப் பணிகளில் அடிக்கடி ஈடுபட வேண்டிய நிலையேற்படும். இந்த அலுவலர்கள் வேறு மாவட்டங்களில் கடமைப் பணிகளில் ஈடுபடுகையில் தங்குமிட வசதிகளை ஏற்படுத்திக்கொள்ள வேண்டுமென்பதோடு அதற்காக போதியளவு பணத்தை வழங்கவேண்டுமென்பதால் பணிப்பாளர்சபையின் அங்கீகாரத்துடன் இந்த கொடுப்பனவு மேற்கொள்ளப்படுகின்றது. இவ்விதமாக முறைப்படி தங்குமிட

வசதிகள் வழங்கப்படாவிடின் அது சபையின் கடமைப் பணிகளுக்கு தடையாக அமையும்.

(ஆ) பகிரங்க தொழில்முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம்PED1/2015இன் படி போக்குவரத்து வசதிகள் உரித்தான அலுவலர்களுக்காக போக்குவரத்து வசதிகளை வழங்க சபையிடம் பாவனையில் உள்ள வாகனங்கள் போதுமானவையாக இல்லாமையயால் பணிப்பாளர்சபையின் அங்கீகாரத்திற்கு கட்டுப்பட்டதாக இந்த கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.

(இ) சம்பந்தப்பட்ட சொத்துக்கள் மறுசீரமைக்கப்பட்டு பாவிக்க அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

(ஈ) இந்த காணிகளின் உரிமையை முறைப்படி கையேற்று மாவட்ட அலுவலகங்களை நிர்மாணிப்பதற்காக நிதியங்களை பெற்றுக்கொண்டு நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

(உ) 2015 ஆம் ஆண்டுக்காக பகிர்ந்தளிக்க திட்டமிடப்பட்டிருந்த இந்த பஞ்சாங்கங்கள் தேர்தல் காலமென்பதால் பகிர்ந்தளிக்கப்படுவது சட்டத்திற்கு முரணானதாக அமைவதால் பகிர்ந்தளிப்பதை இடைநிறுத்தி அலுவலகத்தில் கஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டுள்ளது. இது பற்றி விசாரித்தறிந்து எதிர்காலத்தில் இந்த கையிருப்பினை அகற்ற அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

3. <u>ஏனைய கணக்காய்வு அவதானிப்புகள்</u>

(அ) இலங்கைக்கு ஒருசில அண்மைக்கால ஆண்டுகளில் தாக்கத்தை ஏற்படுத்திய இயற்கை அனர்த்தங்கள் காரணமாக கமத்தொழில் காப்புறுதிக்கு கடுமையான பாதிப்புகள் ஏற்பட்டதோடு அதிலிருந்து விவசாயியை மீட்டெடுப்பதற்காக ஏக்கரொன்றுக்காக செலுத்தப்பட்ட இழப்பீட்டுத்தொகை ரூ. 10,000/= இல் இருந்து ரூ. 40,000/=வரை அதிகரிக்கப்பட்டதோடு அதற்கு இணையானதாக காப்புறுதிப் பொறுப்பும் அதிகரித்துள்ளது. இந்த மறுகாப்புறுதி செயற்பாங்கின்போது கட்டாய பயிர்க்காப்புறுதிக்கு கட்டுப்படுகின்ற பயிர்ச்செய்கைகளில் (நெல், சோளம், சோயா, பெரிய வெங்காயம், உருளைக் கிழங்கு) 2018 ஆம் ஆண்டில் பயிரிடப்பட்ட மொத்தப் பரப்பளவு 2,751,244 என கருதப்பட்டுள்ளது. மத்தியவங்கி அறிக்கைக்கிணங்க எதிர்பார்த்த பயிர்ச்சேத பரப்பளவு அண்ணளவாக பயிர்செய்யப்பட்ட நிலப்பரப்பின் 15% எனக் கருதப்பட்டு அரசாங்கத்தின் பொறுப்பு தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க சேதமேற்படக்கூடிய பயிர்செய்யப்பட்ட பரப்பளவு 412,686 ஏக்கர்களாகுமென கருதப்பட்டுள்ளது. இந்த ஏக்கரளவுக்கான மொத்த பொறுப்பு 82,537 மில்லியன் ரூபாய்களென கருதப்பட்டுள்ளது. அது கீழ்க்காணுமாறு அமையும்.

பயிர்	பரப்பளவு (ஏக்கர்)	காப்புறுதிசெய்த தொகை (ரூ.)	மொத்த பொறுப்பு (மில் ரூ.)
நெல்	2,000,000	30,000	75,000
சோளம்	174,928	30,000	5,242
சோயா	15,598	30,000	4,787
மிளகாய்	32,573	30,000	9,771
பெரிய வெங்காயம்	14,045	30,000	4,213
உருளைக்கிழங்கு	13,740	30,000	4,122
கூட்டுத்தொகை			**82,537**

செய்கைபண்ணப்பட்ட இந்த பரப்பளவில் 15%சேதமடையும் என எதிர்பார்த்துள்ளதோடு எல்லாச் சேதங்களும் செய்கையின் இரண்டாவது கட்டத்தில் இடம்பெறுமென்ற அடிப்படையில் மொத்த காப்புறுதிப் பொறுப்பு 7,500 மில்லியன் ரூபா என கருதப்பட்டுள்ளது. இது மத்திய வங்கி அறிக்கைக்கிணங்க 15,000 மில்லியன் ரூபாய் ஆகும்.

(82537x 12380 = 15% x (60%

மொத்தப் பொறுப்பு = 82,537

நேரிடக்கூடிய சேதத்தின் அளவு 15% மில்லியன்கள் = 12,380

சேதக்கட்ட எடுகோளின் அடிப்படையில் இரண்டாவது கட்டம் = 60%

எதிர்பார்த்த பொறுப்பு = ரூ. மில்லியன் (12,380 x60=7,500)

இதற்கிணங்க காப்புறுதி பொறுப்பில் மிகை மதிப்பீடு இடம்பெறவில்லை.

(ஆ) நிலவிய காலநிலை நிலைமைக்குள் கடுமையான அபாயநேர்வு காணப்பட்டமையாலும் இந்நிலைமையில் முன்னர் நிலவிய போகங்களுடன் ஒப்பிடுகையில் கடுமையான அபாயநேர்வு உள்ளமையால் மறுகாப்புறுதி பெறப்பட்டுள்ளது. காப்புறுதி நடைமுறைக்கிணங்க எதிர்வுகூறப்பட்ட பொறுப்பே மறுகாப்புறுதிக்கான அடிப்படையாக அமைந்தது. அவ்விதமாக எதிர்பார்த்த விதத்திலான சேதமேதும் ஏற்பட்டால் மறுகாப்புறுதி மூலமாக சேதஇழப்பீட்டினை மேற்கொள்ள இயலுமானதாக அமையும். இந்த

மறுகாப்புறுதியை பெற்றுக்கொள்ளும்போது அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட கேள்விச்சபையொன்று மூலமாகவும் துறைசார்ந்த சிறப்பறிஞர்களை உள்ளடக்கிய தொழில்நுட்பக் குழுவொன்று மூலமாகவும் அதனை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதோடு காப்புறுதி முறையியலின்படி செயலாற்றி உள்ளமையால் இந்த தவணைப்பணம் பயனற்ற செலவாக இனங்காணப்பட இயலாது.

(இ) இந்த தரவுகளுடன் ஒப்புநோக்கி கமக்காரர்களுக்கு சேத விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கைகள் தொடங்கப்பட்டபோதிலும் பாரியளவில் சேதஅறிவிப்பு இடம்பெற்றமையால் நடைமுறைச்சாத்தியமாக அந்த பணிகளை மேற்கொள்ள இயலாமல் போனமையால் அது அமுலாக்கப்படவில்லை என்பதோடு சேத அறிவித்தல் விபரங்கள் இழப்பீடு செலுத்துவதற்காக பிரயோகிக்கப்பட்டன.

(ஈ) செலுத்துதல் நிராகரிக்கப்பட்ட கமக்காரர்களுக்காக திருத்திய பதிவேடுகளை தயாரித்து அனுப்பிவைக்குமாறு கமநல சேவைகள் நிலையங்களுக்கும் மாவட்ட அலுவலகங்களுக்கும் அறிவித்துள்ளதோடு அவ்விதமாக கிடைத்த திருத்திய பதிவேடுகளுக்கான செதுத்துதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவ்விதமாக கிடைக்கின்ற சரியான பதிவேடுகள் கிடைத்தும் உடனடியாக செலுத்துதல் மேற்கொள்ளப்படுகின்றன.

(உ) இந்த தரவுகளை அடிப்படையாகக்கொண்டும் உர மானியம் வழங்கப்பட்ட கமக்காரர்களின் பதிவேடுகளை அடிப்படையாகக்கொண்டும் கமக்காரர்களின் தகவல்கள் இழப்பீடு கணிப்பிடலுடன் ஏற்புடைய தரவுமுறைமையைத் தயாரிக்க ஏற்புடையதாக்கிக் கொள்ளப்பட்டுள்ளது.

(ஊ) 2016 ஆம் ஆண்டிலிருந்து தீவினைப் பாதித்த வறட்சி நிலைமை காரணமாக பாதிக்கப்பட்ட கமக்காரர்களுக்கு இழப்பீடு செலுத்தப்பட்டுள்ளது. இதன்போது சேதமுற்ற விளைநிலங்களை பரிசீலனைசெய்து விதப்புரைசெய்து அங்கீகரிக்கும் பொறுப்பு கமநல சேவைகள் திணைக்களத்தின் மாவட்ட உதவி ஆணையாளர், கமநல சேவைகள் நிலையங்களின் அபிவிருத்தி

உத்தியோகத்தர்கள் மற்றும் விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவி அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்டதோடு இறுதியில் மாவட்டச் செயலாளரினதும் அங்கீகாரம் இந்த பதிவேடுகளுக்கு கிடைத்துள்ளது. கணக்காய்வு ஐயவினாக்களில் குறிப்பிடப்பட்டுள்ள இழப்பீடு செலுத்துதல்களுடன் தொடர்புடைய சேதமுற்ற விளைநிலங்கள் இரட்டைக் கணிப்பிடலுக்கு இலக்காகவில்லை. இந்த இழப்பீட்டு பதிவேடுகளுடன் தொடர்புடையதாக விளைநிலங்கள், கமக்காரன், காணியின் உரிமை மற்றும் வங்கியை இனங்காண்பதற்காக கமநலசேவைகள் நிலையங்கள் ஊடாக பாவிக்கப்பட்ட அடிப்படைப் பதிவேடான விண்ணப்பப் பத்திர இலக்கத்தை (DO Serial No)பரீட்சிக்கையில் தனிவேறான அடிப்படை பதிவேடுகள் உள்ளமை உறுதியாயிற்று. இந்த கமக்காரர்களுக்கான செலுத்துதல்களை மேற்கொள்ளும்போது தேசிய அடையாள அட்டை இலக்கத்தில் சிறியசிறிய மாற்றங்கள் நிலவியமையால் மேற்படி நிலைமை தோன்றியுள்ளதோடு சுற்றறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு உர மானியத்தை செலுத்துவதற்காக பிரயோகிக்கப்படுகின்ற அதே முறையியல் மேற்படி தரவு முறைமைக்கும் பாவிக்கப்பட்டது.

(எ) அவசியமான பதவியணியை ஆட்சேர்ப்பு செய்வதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதி கோரப்பட்டுள்ளதோடு அங்கீகாரம் கிடைத்ததும் உடனடியாக உரிய நடவடிக்கைமுறை கடைப்பிடிக்கப்பட்டு ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

කෘෂිකාර්මික හා ඇගයීම රක්ෂණ මණ්ඩලය
கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை
AGRICULTURAL AND AGRARIAN INSURANCE BOARD

තැපැල් ලිපිනය
தபால்
Telegrams
මහජන
பகடிய
Kalchisa

117, ගෙල්ලාමිඩ පාර, ගංගොඩවිල, නුගේගොඩ
117, Sahabandaramulla Rd., Gangodawila, Nugegoda

මගේ අංකය
எமது இலக்கம்
My Ref. No.
2018/4/ 5/ලේඛණ /2

ඔබේ අංකය
உமது இலக்கம்
Your Ref. No.

දිනය
திகதி
Date
2019.04.10

கணக்காய்வு அத்தியட்சகர்,

கணக்காய்வாளர் தலைமையதிபதி திணைக்களம்,

கொழும்பு.

2018 ஆம் ஆண்டின் கமக்காரர் ஒய்வூதிய, சமூகப் பாதுகாப்புத் திட்டம் சம்பந்தமாக சமர்ப்பிக்கப்பட்ட 2018 இன் 19 ஆம் இலக்கமுடைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 வது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கைக்கான பதிலினை வழங்குதல்

2018 ஆம் ஆண்டின் கமக்காரர் ஒய்வூதிய, சமூகப் பாதுகாப்புத் திட்டம் சம்பந்தமாக சமர்ப்பிக்கப்பட்ட 2018 இன் 19 ஆம் இலக்கமுடைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 வது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கைக்கான பதிலினை இத்துடன் சமர்ப்பிக்கிறேன்.

சமித் வர்ணகுலசூரிய,

தலைவர்,

கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை

தொலைபேசி
Telephones
011-2812571
011-2812572
011-2812573

தலைவர்
Chairman

நிறைவேற்று நிறுவனம்
Director General
011-5732397
011-2812574

தலைமை அலுவலகம்
Head Office
011-5384000

கமக்காரர் ஓய்வூதியத்திட்டத்தின் 2018 திசெம்பர் 31 ஆந் தேதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள்பற்றிய 2018 இன் 19 ஆம் இலக்கமுடைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 வது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கைக்கான பதில்கள்

.....

I. நிதிக் கூற்றுகள்

I.I முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

1.2.1 ஸ்ரீலங்கா கணக்கீட்டு நியமங்களுக்கு புறம்பாக செயற்படுதல்

(அ) சபையின் மோட்டார்வாகன மீள்கணிப்பீடு ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு எதிர்வரும் ஆண்டுகளில் ஏற்புடைய சீராக்கல்களை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது.

(ஆ) ஐக்கிய நாடுகள் உணவு, விவசாயத்தாபனம் மூலமாக வழங்கப்பட்ட நிதியுதவியான இப்பணத்தொகையை எதிர்வரும் ஆண்டுகளில் இலதாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

(இ) 2007 ஆம் ஆண்டில் கமக்காரர் ஓய்வூதியத் திட்டத்தின் பொறுப்பு பற்றி மேற்கொள்ளப்பட்ட ஆயுட்கணிப்பு மதிப்பீட்டினை அடிப்படையாகக்கொண்டு ஓய்வூதியப் பொறுப்பு கணக்குப் பதியப்பட்டுள்ளது. இந்த ஓய்வூதியத் திட்டம் சுயநிதியீட்டல் அடிப்படையைக் கொண்டதாக அமையாததால் எதிர்காலத்தில் இந்த செயற்றிட்டத்தை மறுசீரமைத்து உரியவகையில் பொறுப்புகக்களை மதிப்பீடுசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

1.2.2 திட்டத்தின் இடையறா வழியுரிமை.

153/49 ஆம் இலக்கமுடைய அதிவிசேட வர்த்தமானி மூலமாக கமக்காரர் ஓய்வூதியத் திட்டத்தை திருத்தியமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதோடு சுயநிதியீட்டல் அடிப்படையில் பேணிவரக்கூடிய புதிய கமக்காரர் ஒய்வூதியத் திட்டமொன்று அதன் மூலமாக அறிமுகப்படுத்தப்பட்டது. கமக்காரர் ஓய்வூதிய நிதியம் பூச்சியநிலைறயுற்றபோதிலும் ஓய்வூதியம் செலுத்துவதற்காக திறைசேரி எற்பாடுகளைப் பெற்றுக்கொள்ள அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. உருவாகியுள்ள ஓய்வூதியப் பொறுப்புடன் சார்புரீதியாக நிதியத்தைக் கட்டியெழுப்புவதற்காக பொது திறைசேரியிடம் அவசியமான அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதோடு பொது திறைசேரியின் அங்கீகாரம் கிடைத்தபின்னர் அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது.

1.2 நிதிக்கூற்றுகள் பற்றிய முகாமைத்துவத்தினதும் ஆளுந் தரப்பினரதும் பொறுப்பு.

1.4 நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்பு.

2. பிற சட்டமுறையான மற்றும் ஒழுங்குறுத்தல் அவசியப்பாடுகள் பற்றிய அறிக்கை.

சட்டவிதிகள், கட்டளைகளுக்கான தொடர்பு

(அ) 15 (2). (3) பிரிவு

கமக்காரர் ஒய்வூதியத் திட்டத்தில் பங்களிப்புச் செய்துள்ள கமக்காரர்கள் தொடர்ச்சியாக 05 தவணைகளுக்கான பணத்தைச் செலுத்தத் தவறினால் அவர்களின் உறுப்பாண்மை செல்லுபடியற்றதாவதோடு அதுபற்றிய அவசியமான விழிப்புணர்வூட்டல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவ்விதமாக உறுப்பாண்மை இழந்த கமக்காரர்கள் செலுத்திய தவணைப் பணத்தை அவர்களின் வயது 60 நிறைவடைகின்ற சந்தர்ப்பத்தில் மீளளிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) பிரிவு 20

கமக்கார, மீனவ சமுதாயத்திற்காக புதிய ஓய்வூதியத் திட்டமொன்றை ஆரம்பிப்பதற்காக இன்றளவில் அமைச்சரவைக்கு நிருபமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதன்போது தொடர்ந்தும் இத்திட்டங்களை பகுப்பாய்வுசெய்து அமைச்சரவைக்கு ஆலோசனை வழங்குவதற்காக புலமைசாலிகள் குழுவொன்று நியமிக்கப்பட்டது. அதற்கு இணையாக சபையின் மதியுரைக் குழுவுக்காக இற்றைவரை நியமிக்கப்பட்டிராத உறுப்பினர்களை நியமித்து அக்குழுவினைக்கூட்டி இந்த முன்மொழிவுகளை சமர்ப்பிக்க எதிர்பார்க்கப்படுகின்றது.

(அ) 20,000 இற்கு மேற்பட்ட எண்ணிக்கைகொண்ட கமக்காரர்கள் ஓய்வூதியம் பெறுவதற்காக காத்திருக்கைப் பட்டியலில் உள்ளமையால் இந்த கமக்காரர்களுக்கு துரிதமாக ஓய்வூதியம் செலுத்துவதற்காக ஓய்வூதியப் பட்டியலில் சேர்க்க அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அதன் காரணமாக காத்திருக்கைப் பட்டியலில் இருந்த 20,503 கமக்காரர்களுக்கு ஓய்வூதியம் செலுத்த இயலுமாயிற்று. எதிர்காலத்தில் எவ்விதமான நிலுவைத்தொகையும் உருவாகாதவண்ணம் ஓய்வூதிய உரிமையைப் பெறுகின்ற சந்தர்ப்பத்திலேயே ஓய்வூதியப் பட்டியலில் உள்ளடக்க அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த நிலுவைத்தொகையை செலுத்ததிறைசேரி ஏற்பாடுகளுக்கிணங்க எதிர்காலத்தில் படிப்படியாக நடவடிக்கை எடுப்பதோடு நிலுவை ஓய்வூதியம் நிதிக்கூற்றுகளில் செலுத்தவேண்டிய ஓய்வூதியமாக கணக்குப் பதியப்பட்டுள்ளதோடு செலுத்தப்படுகின்ற தருணத்தில் மேற்படி பொறுப்பில் இருந்து விடுவிக்கப்படும்.

(ஆ) உதவுதொகை செலுத்துனர்கள் பற்றிய அனைத்து தகவல்களும் கணினி மயப்படுத்தி கணினிமுறைமையை விருத்திசெய்ய அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது.

කෘෂිකාර්මික හා ඇගැයීම රක්ෂණ මණ්ඩලය
கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை
AGRICULTURAL AND AGRARIAN INSURANCE BOARD

තැපැල් ලිපිනය
தபால்
Telegram
රක්ෂණ
ரக்சண
Rakshana

117, ගෙල්ලාමිඩ පාර, මහාවෙල්ල, නුවරඑළිය
117, Sellakadawara Rd., Gangakolella, Nuwaraeliya

මගේ අංකය
எமது இலக்கம்
My Ref. No.
2018/ 4 /6 /ඉ/ඇ/2

ඔබේ අංකය
உமது இலக்கம்
Your Ref. No

දිනය
திகதி
Date
2019.06.06

கணக்காய்வு அத்தியட்சகர்,
கணக்காய்வாளர் தலைமையதிபதி திணைக்களம்,
கொழும்பு.

கணக்காய்வு ஐயவினாக்களுக்கான பதிலளித்தல் .

AGL/E/FISH/2018/AQ/01 இலக்கமும் 2019/04/04 திகதியும்கொண்ட கடற்றொழிலாளர் ஒய்வூதிய,சமூகப்பாதுகாப்பு நலன்புரித் திட்டத்தின் 2018 ஆம் ஆண்டுக்கான நிதிசார் செயலாற்றுகை பற்றிய பரிசீலனை சம்பந்தமான கணக்காய்வு ஐயவினாக்களுக்கான பதிலிகளை இத்துடன் சமர்ப்பிக்கிறேன்.

சுமித் வர்ணகுலசூரிய,
தலைவர்,
கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச்சபை.

தொலைபேசி
Telephone
011-2812571
011-2812572
011-2812573

தலைவர்
Chairman
011-2812571

பணிப்பாளர் நாயகம்
Director General
011-5732397
011-2812574

தலைமையகம்
Head Office
011-5384000

2018 ஆம் ஆண்டில் கடற்றொழிலாளர் ஓய்வூதிய, சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டத்தின் 2018 இன் 19 ஆம் இலக்கமுடைய தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 வது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கைக்கான பதிலளித்தல்

.....

I. நிதிக் கூற்றுகள்

I.I முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) ஸ்ரீலங்கா கணக்கீட்டு நியமங்களுக்கு புறம்பாகச் செயற்படுதல்

2007 ஆம் ஆண்டில் கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டத்தின் பொறுப்புகள் பற்றி மேற்கொள்ளப்பட்ட ஆயுட்கணிப்பு மதிப்பீட்டினை அடிப்படையாகக்கொண்டு ஓய்வூதியப் பொறுப்பு கணக்குப் பதியப்பட்டுள்ளது. இந்த ஓய்வூதியத் திட்டம் சுயநிதியீட்டல் அடிப்படையைக் கொண்டதாக இல்லாததால் எதிர்காலத்தில் இந்த செயற்றிட்டத்தை மறுசீரமைத்து உரியவகையில் பொறுப்பினை மதிப்பீடுசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) <u>திட்டத்தின் இடையறாத வழியுரிமை</u>

கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டத்தின் எதிர்காலப் பொறுப்பு கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக நிதிக்கூற்றுகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இந்த செயற்றிட்டம் நிதிசார் சாத்தியவளமற்ற அரச மானியத்தை அடிப்படையாகக்கொண்ட செயற்றிட்டமாக அமைவதால் இவ்விதமாக எதிர்காலப் பொறுப்பு அதிகரித்துள்ளது. இந்த செயற்றிட்டத்தை மறுசீரமைப்பதற்காக ஏற்கெனவே நியமிக்கப்பட்டுள்ள புலமைசாலிகள் குழுவின் விதப்புரைகள் கிடைத்ததும் உடனடியாக கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டத்தை மறுசீரமைத்து நிதிசார் சாத்தியவளம் கொண்டதாக அமுலாக்க எதிர்பார்க்கப்படுகின்றது.

1.3 <u>நிதிக்கூற்றுகள் பற்றிய மகாமைத்துவத்தினதும் ஆளுந்தரப்பினரதும் பொறுப்பு.</u>

1.4 <u>நிதிக் கூற்றகளின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்பு.</u>

2. <u>பிற சட்டமுறையான மற்றும் ஒழுங்குறுத்தல் அவசியப்பாடுகள் பற்றிய அறிக்கை.</u>

சட்டவிதிகள் /கட்டளைகளுக்கான தொடர்பு

(அ) (i) <u>பிரிவு 16</u>

தொடர்ச்சியாக 10 தவணைகளை செலுத்தாத உதவுதொகை செலுத்துனர்களின் உறுப்பாண்மை இல்லாதொழிவதாக திட்டத்தில் இணைந்துகொள்ளும்வேளையில் மீனவர்களுக்கு முன்கூட்டிய அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் அவ்விதமாக உறுப்பாண்மை செல்லுபடியாதல் பற்றி அறிவித்தலானது கடற்றொழில் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுவதோடு உறுப்பாண்மையை இழந்த மீனவர்களுக்கு கடற்றொழில் திணைக்களத்தின் மாவட்ட அலுவலகம் மூலமாக புதிய உறுப்பினரொருவராக மீண்டும் கடற்றொழிலாளர் ஒய்வூதியத் திட்டத்தில் பங்களிப்புச் செய்வதற்கான வாய்ப்பு உண்டு.

(ii) <u>பிரிவு 20</u>

கமக்கார, மீனவ சமுதாயத்திற்காக புதிய ஓய்வூதியத் திட்டமொன்றை ஆரம்பிப்பதற்காக இன்றளவில் அமைச்சரவைக்கு நிருபமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதன்போது தொடர்ந்தும் இத்திட்டங்களை பகுப்பாய்வுசெய்து அமைச்சரவைக்கு ஆலோசனை வழங்குவதற்காக புலமைசாலிகள் குழுவொன்று நியமிக்கப்பட்டது. அதற்கு இணையாக சபையின் மதியுரைக் குழுவுக்காக இற்றைவரை நியமிக்கப்பட்டிராத உறுப்பினர்களை நியமித்து அக்குழுவினைக்கூட்டி இந்த முன்மொழிவுகளை சமர்ப்பிக்க எதிர்பார்க்கப்படுகின்றது.

- நீண்டகாலமாக கடற்றொழிலாளர் ஒய்வூதியம் பெறுவதற்கான விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் தாமதித்துள்ள மீனவர்களுக்கு நிலுவை ஒய்வூதியம் செலுத்துகையில் அவ்விதமாக தாமதமடைய காரணமாக அமைந்த விடயங்களைக் கண்டறிந்து பின்னர் செலுத்துதலை மேற்கொள்கையில் பழைய நிலுவை ஒய்வூதியத்தை செலுத்துதல் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டமையால் இந்த நிலைமை உருவாகியுள்ளது. யுத்தம் நிலவிய மாவட்டங்களில் கடற்றொழிலாளர் ஒய்வூதியத்திற்காக விண்ணப்பிக்கையில் பாரிய தாமதங்கள் காணப்பட்டமையால் அவ்விதமாக தாமதிக்க ஏதுவான காரணங்களை கிராம அலுவலர் மற்றும் பிரதேச செயலாளரை உள்ளிட்ட அரச அலுவலர்களிடமிருந்து அவை பற்றிய உறுதிப்படுத்தல்களை பெற்றுக்கொண்ட பின்னர் சம்பந்தப்பட்ட பணத்தைச் செலுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.